பாரத தேவி

நிர்வாக ஆசிரியர் வ. ரா. தனிப்பிரதி 2 அணு

மலர் I ஞாயிறு 16-7-'39 இதழ் 2

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
என்னென்ன எதிர்பார்க்கலாம்?	...	2
தேவியின் கருணை	...	3
இன்னும் பேச்சில் போடியா ?	...	6
வழுக்கி விழுந்தார்	...	8
முகப்படம் விளக்கம்	...	10
திருவள்ளுவ நாயனர்	வ. ரா.	11
சாஸ்திரப் பித்தம்	'ஸரஸி'	14
அகத்தியன் ...	...	17
ஆளுக்குள்ளே ஆளு; எத்தனை ஆளு! ...	...	20
குப்பைக்கூடை	அசுவதி	25
பரதேசத் தபால்	...	28
பெற்றோர்களின் பள்ளி	சஞ்சாரி	32
கதவு திறந்தது	அவிட்டம்	38
தம்—பிடி	வே. ம.	39
கர்னாடக கந்தன்	போன்னி	43
கடன் தீர்ந்த கதை ...	கோத்தமங்கலம் சுப்பு	49
போலந்தின் போராட்டம்	...	56
விமர்சனம்	ரஞ்சனன்	58
கலைஞானம்	...	61
மன்னிப்பு ...	கு. ப. ராஜகோபாலன்	65
ஜென்ம நக்ஷத்திர பலன்	...	70
என்ன நெருக்கடியோ ?	கரிச்சான்	78
தாய் ...	சி. சு. செல்லப்பா	81
அழகு வேண்டாம்	...	85
'நந்திபோல எச்சரிக்கை செய்கிறேன்' ...	...	87
வெட்டி வீரன்	'வரதன்'	88
கலைஞன் ...	பி. வி. சுப்ரமண்யம்	94
திரைப்படச் செய்திகள்	...	97
[illegible]	...	104

என்னென்ன எதிர் பார்க்கலாம்?

'பாரத தேவி'யில் எந்த ரக எழுத்துக்களை எதிர் பார்க்கலாம் என்று கேள்வி கேட்கவேண்டாம்; ஊக மும் செய்ய வேண்டாம். குத்து மதிப்பில், கீழ்க்கண்ட ஜாப்தா தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதில் விவரங்களை காணலாம்:—

1. கவிதை
2. கட்டுரை
3. மலை, நீர் வீழ்ச்சி, மாலைப்பொழுது போன்ற இன்பந்தரும் காட்சிகளைப்பற்றி வர்ணனைகள்
4. சிறு கதை
5. தொடர் கதை
6. நாடகம்
7. பெரியார் வாக்கு
8. ஸயன்ஸ் குறிப்புகள்
9. விகடத் துணுக்குகள்
10. இந்து தேச சரித்திரம்
11. அயல் நாட்டுச் சரித்திரத்துளிகள்
12. சித்திரப் படங்கள்
13. பெரியார்களின் வரலாறு
14. காந்தியின் உபதேசம்
15. சித்தர்களின் ஞானோபதேசங்கள்

இந்த ஜாப்தாவே பூரணமானதோ என்ற சந்தேகம் தேவையில்லை. பழைய ட்ராமா நோட்டீஸ்களில் குறிப்பிடுவதுபோல, "சமயோசிதப்படி" விஷயங்கள் வெளி வரும்.

தேவியின் கருணை

18690

மதுரையில், மீனுட்சி அம்மன் கோயில் திறக்கப்பட்ட சேதி, நீங்கள் கேள்விப்பட்டீர்களா? இதுவரையிலும், அந்தக் கோயிலின் கதவு மூடியாயிருந்தது என்று கேட்கிறீர்களோ? மூடியிருந்தது போலத்தான். எல்லாருக்கும் நியாயம் வழங்கிஞதற்குத்தான், நியாயம் என்று பெயர். அறை குறை நியாயத்தை, அநியாயம் என்ற ஜாப்தாவில் சேர்த்துவிட வேண்டியதுதான்.

கண்ணிரண்டும் ஒன்றைத்தான் பார்க்கும். கையிரண்டும் சேர்ந்தால்தான், கும்பிட முடியும், இடது கை, வலது கை என்று வேற்றுமை பாராட்டினுல், தொழ முடியுமோ, கும்பிட முடியுமோ? இடது கைக்கு இழுக்கே கிடையாது. போயும் போயும் வலது கைக்குத்தான் இழுக்கு கற்பிக்கலாம். வலது கைதான், எல்லாரையும் சண்டைக்கிழுக்கிற கையாகும்.

ஜாதி ஹிந்துக்கள் தங்களை வலது கை என்றும் ஹரிஜனங்களை இடது கை என்றும் நினைத்துக்கொண் டிருப்பார்களாகில், வலது கை எத்தகைய தோஷத்துக்கு, பாபத்துக்கு ஆளாகிறது என்பதை, அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

இறுதியில், மனிதனுக்கு ஆறுதல் அளிப்பது தெய்வ பக்தி ஒன்றுதான். பணம் திரட்டினுல், பூசல் விளையாமல், பணத்தைத் திரட்ட முடியாது. கலையினுல் மயக்கமும் மார்ச்சரியமும் உண்டாகலாம். அரசியலால், பொய் மலியலாம். மதத்தின் பேரால், போர் ஏற்படலாம். உண்மையான தெய்வ பக்தியால், மனிதனுக்கு அடக்கமும் அமைதியும் உண்டாகின்றன என்பதை ஒவ்வொருவரும் தங்கள் அனுபவத்தில் கண்டு கொள்ளலாம்.

தெய்வ பக்திக்கு, தியானம் முக்கியமானது; என்றாலும், அதற்கு ஒரு வகை தரிசனமும் மிகவும் அவசியமாகும். கண்

ணைத் திறந்து காட்சியை அனுபவித்த பிறகுதான், கண்ணை மூடிக்கொண்டு, தியானத்தில் ஈடுபடலாம். ஆகவே, திவ்ய தரிசனத்தை, கோயில்களில்தான் காண முடியும்.

ஒரு சிலருக்கு இந்த தரிசனம் கூடாது என்று தடுத்து வைத்தது மிகவும் பாபமான காரியமாகும். ஒருவன் மேம்பாடு அடைந்து, நல்லவனாகும் பாதையை, வழி மறித்துவிட்டால், அதைக் காட்டிலும் பாதகமான செயல் வேறொன்றுமே இல்லை.

தகப்பன் தேடிய சொத்தில், சகோதரர்கள் அனைவர்களுக்கும் சம பங்கு இல்லை என்று சாதிக்கப் பார்த்தால், அது சட்டமாக, ஒருவேளை இருக்கலாம். (ஆங்கில நாட்டிலே மூத்த மகனுக்குத்தான் சொத்துரிமை என்று சட்டம்) ஆனால், அது நியாயமுமல்ல; தர்மமுமல்ல.

இந்த நாட்டில், ஹரிஜனங்கள் என்ன பாபம் செய்தார்கள்? அவர்கள் ஹிந்துக்களாகப் பிறந்த, பிடிவாதமாக, பல நூற்றுண்டுகளாக ஹிந்துக்களாக இருந்து, பிற மதத்தில் சேராத மகத்தான பாபத்தைத்தான் செய்தார்கள்! ஹரிஜனங்கள், தெய்வத்தினிடமும் ஹிந்து மதத்தினிடமும் காண்பித்த பக்தியும் உறுதியும் அற்புதமானவை. அவர்களைப்போல, திடசித்தர்களாக, ஜாதி ஹிந்துக்கள் வாழ்ந்து வந்தார்களாகில், ஹிந்து ஆசாரங்கள் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகி இருக்கமாட்டா.

அகம்பாவத்துக்கும் தெய்வபக்திக்கும் வெகுதூரம். எங்கள் கோயில் என்றும் எங்கள் மதம் என்றும் மார்தட்டிக்கொண்டு பேசுவது அகம்பாவமாகும். கடவுளையும் கோயிலையும் சொத்துக்களாக பாவிக்கும் பாவிகளாக, ஜாதி ஹிந்துக்கள் ஆகிவிட்டால், ஹிந்து தர்மத்துக்கு விமோசனமே இல்லை. ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்று நாம் எல்லாரும் பிள்ளைப் பிராயத்தில் படிக்கவில்லையா? அது வெறும் ஏட்டுச்சுரைக்காயா? ஆலயம் தொழுவது ஜாதி ஹிந்துக்களுக்கு மட்டும்தான் நன்ளு?

இந்தப் புரளியை, இந்த அநியாயத்தை, மனிதனும் கடவுளும் எவ்வளவு காலம்தான் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? மதுரையில், மீனுட்சிதேவிக்கு, அருள்சுரந்து, மக்களின் உள்ளத்தில் புகுந்துவிட்டாள். பாண்டி நாட்டிலே சுரந்த அருள், தமிழ்நாடு முழுதும் வெள்ளப்பெருக்கு எடுக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

ஹரிஜனங்கள், மீனாட்சிதேவியை தரிசனம் செய்தார்கள் என்ற சேதியைக்கேட்க, மனதுக்கு எவ்வளவு குளிர்ச்சியாயும் பூரிப்பாயும் இருக்கிறது. அழகரும், வா என்று அழைத்தாராம். என்ன கண் கொள்ளாக்காட்சி! காதுக்கு இன்பத்தேன் சொரியும் சேதி!

ஆனால், இப்பேர்ப்பட்ட காட்சியை அனுபவிக்க முடியாத சிலர், கோயில் நிர்வாக உத்தியோகஸ்தர், ஸ்ரீ வைத்தியநாத அய்யர், மற்றும் சிலர்—இவர்கள்பேரில், கிரிமினல் வழக்குத்தொடர்ந்திருப்பதாகக் கேள்விப்பட்டு, மிகவும் மனவருத்த மடைகிறோம். தேவியின் தரிசனத்தைப் பங்கு போடுவதில், கஞ்சத்தனம் இருக்லாமா? எங்கள் கோயில் என்று சொத்து உரிமைபாராட்டி, "பக்தியை" வெளிக் காண்பிக்கலாமா'

கடவுள் மனிதனுடைய சொத்தாக ஆகும் காலம்தான் கலிகாலம். அந்தக் கலிகாலத்தை வெருட்டி அடிக்கத்தான், காந்தி தோன்றியிருக்கிறார். "கடவுளை தெய்வமாகக் கும்பிடு; சொத்தாகவும் பாத்தியமாகவும் பாராட்டாதே" என்று தனது அன்பினாலும் அடக்கத்தினாலும், காந்தி, விளக்கமாகக் காண்பித்து வருகிறார்.

ஹரிஜனங்கள் ஆலயப்பிரவேசம் செய்வது எவ்வாறு சட்டத்துக்கு விரோதமாக இருக்கமுடியும்? மூத்த சகோதரன், தனது தம்பியை, வீட்டுக்குள் வரவொட்டாமல் தடுத்தால், அது பலாத்காரத்தைத்தவிர, நியாயமே இல்லை; அது பாத்தியமும் இல்லை.

கோயில் நிர்வாகஸ்தர்களின் பேரில், ஆலயப்பிரவேச சம்பந்தமாக வழக்குத் தொடரவேண்டுமானால், முன்கூட்டியே அதற்கு அனுமதியைப் பெறவேண்டும் என்று சென்னை சர்க்கார் சட்டம் கொண்டுவரத் தீர்மானித்திருப்பதை, நாம் மிகவும் பாராட்டுகிறோம். கடவுளை சொத்தாக பாவிக்கும் அகம்பாவத்துக்கு, இந்த சட்டம்தான் மாற்று என்பது நமது அபிப்பிராயம்.

மதுரையில், ஹரிஜனங்களும் நாடார்களும் ஆலயப்பிரவேசம் செய்ததற்கு, முக்கிய காரணஸ்தராக இருந்த ஸ்ரீ வைத்தியநாத அய்யருக்கு நமது பாராட்டு.

இன்னும் பேச்சில் பொடியா?

ஜுலை 20-ம் தேதி நெருங்கிக்கொண்டிருக்கிறது. அன்று தான் ஹிட்லர் மறுபடியும் தீர்மானமாக ஏதோ செய்யப் போகிறார் என்று பலத்த வதந்தி. புயலுக்கு முன்னால் அமைதி என்கிற மாதிரி, ஜெர்மனியில் மட்டும் பேச்சு மூச்சு இல்லை. டான்ஸிக்கில் ஏற்பாடுகள் மட்டும் மூடு மந்திரமாக நடந்து வருகின்றன. ஹிட்லர் உள்பட ஜெர்மன் அதிகாரிகள் எல்லோரும் இளைப்பாறிக் கொண்டிருக்கிறார்களாம்!

இதன் சூசனை மட்டும் பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்குத் தெரியாமற் போகவில்லை. நெருக்கடி காலம் நெருங்குகிறது என்று உணர்ந்து, சேம்பர்லின் 9-ம் தேதியன்று பார்லிமெண்டில் மனம்விட்டுப் பேசினார்.

போலந்தின் சுதந்திரத்தை பாதிக்கக்கூடியதான முயற்சியை பிரிட்டன் எதிர்க்கும். டான்ஸிக்கை ரீச்சில் சேர்க்க முயலுவது போலந்தின் சுதந்திரத்தை பாதிப்பதாகும்! ஆனால், தற்காலத்து நிலைமையைச் சீர்திருத்த இடம் இருக்கிறது. அதற்கு முதலில் இப்பொழுது இருக்கும் முஸ்தீபுகள் நிற்க வேண்டும். பிரிட்டன் போலந்துக்குக்கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றத் தயாராய் இருக்கிறது.

இது தான் சேம்பர்லின் பேசிய பேச்சின் சாரம். இதில் ஜெர்மனியை வெகு திடமாகத் தான் எச்சரிக்கை செய்திருக்கிறார். பிரிட்டிஷ் பத்திரிகைகளும் பிரதம மந்திரி இவ்வளவு தெளிவாகவும் தைரியமாகவும் பேசிவிட்டதைப் பற்றி ஆனந்தக் கூத்தாடுகின்றன. "நாஜிக்கு முடிவாக எச்சரிக்கை செய்தாகி விட்டது. எந்த ரூபத்திலாவது டான்ஸிக்கில் அவர்கள் எதாவது தில்லுமல்லு செய்தால், ஜெர்மனி பிரிட்டனையும், பிரான்ஸையும், போலந்தையும், வலுவுச் சண்டைக்கு இழுக்கிறது என்றுதான் அர்த்தம். மூன்று நாடுகளும் ஒரு முகமாக நின்று எதிர்க்கும். சேம்பர்லினின் பேச்சு அழுத்தமாக இருப்பதுடன் நல்ல வார்த்தை சொல்லும் தோரணையிலும் அமைந்திருக்கிறது" என்று ஒரு பத்திரிகை எழுதுகிறது. சில பிரெஞ்சு பத்திரிகைகள் மட்டும் சேம்பர்லின் பேச்சில் ஒரு ஷரத்து இருப்பதை ரஸிக்கவில்லை. ஆனால் டான்ஸிக்கில் தற்காலத்து நிலைமையைச் சீர்திருத்த எப்பொழுதும் இடம் இருக்கிறது என்று அவர் பொடி வைத்துப் பேசுவதில் ஏதோ விபரீதம் இருக்கிறதுபோல்தான் இருக்கிறது.

அதற்கு ஏற்றாற்போல லண்டன் டைம்ஸ் பத்திரிகையும் ஒரு புதிர்போட்டிருக்கிறது. சேம்பர்லின் பேச்சைப்பற்றி எழுதும்பொழுது "டான்ஸிக்கை ஒரு விதமான நிபந்தனையுமின்றி ரீச்சிற்கு அளித்துவிடுவதென்பது நடக்காது. அப்படிச் செய்வது ஐரோப்பாவில் தற்காலத்து அமைப்பையும் சமநிலையையுமே பாதித்துவிடும் என்று பிரிட்டிஷ் சர்க்கார் — எல்லா சர்க்கார்களுமே கருதுகிறார்கள்" என்று ஒரு குண்டைப் போடுகிறது. லண்டன் டைம்ஸ் எப்பொழுதும் சர்க்கார் பத்திரிகையென்றும், சர்க்கார் கொள்கைகளுக்கு உருவம் கொடுத்து அது பிரசாரம் செய்கிறது என்பதும் யாவரும் அறிந்த விஷயம்.

எனவே, நிபந்தனையின் பேரில் —எந்த விதமாக இருந்தால் என்ன?— பிரிட்டிஷ்சர்க்கார் டான்ஸிக்கை ரீச்சிற்கு மாற்ற சம்மதப்படும் என்று அர்த்தமாகிறது. எனவே சேம்பர்லின் பிரசங்கத்திலும் டைம்ஸ் பத்திரிகையின் எழுத்திலும் மறுபடியும் காவு அளிக்கும் "சமாதான முறை" தலையெடுக்கிறது.

சேம்பர்லினின் பயங்கொள்ளிக் கொள்கை செத்து சுண்ணாம்பாய் விட்டது. ம்யூனிச்சோடு 'குடை வியாபாரம்' தொலைந்தது என்று எல்லோரும் தைரியமாக மூச்சு விடும்பொழுது, மறுபடியும் இன்று அது தலை நீட்டுகிறது. சேம்பர்லினின் பேச்சில் இருக்கும் அழுத்தம் பூராவும் ஷரத்தில் அடிபட்டுப் போய்விடுகிறது. அந்த ஷரத்திற்குத் தான் என்ன அர்த்தம்?.

டான்ஸிக்கின் நிலைமையைப் பற்றி புனராலோசனை செய்வதற்கு இடமிருப்பதாக ஜெர்மன்—போலிஷ் சமரஸப் பேச்சுகளிலிருந்து புலப்படவில்லை. மூலாதாரத்திலேயே தகராறு. ஹிட்லர் டான்ஸிக் ரீச்சில் சேரவேண்டும் என்கிறார்; அதற்குப் பதிலாகத் தான் ஏதேதோ செய்வதாகச் சொல்லுகிறார்; கர்னல்பெக் டான்ஸிக்கைக் கொடுக்க முடியாதென்றும் மற்றபபடிசலுகைகள் பேசத் தயார் என்றும் சொல்லுகிறார். இந்த நிலைமையில் டைம்ஸ் பத்திரிகை நிபந்தனையுடன் ஒரு வேளை டான்ஸிக்கைத் திருப்பிக் கொடுக்கலாம் என்று தொனிக்கும்படி எழுதுவது பிரிட்டிஷ் வாக்குறுதிக்கு எந்த விதத்தில் ஒத்திருக்கிறது?

எனவே பிரிட்டிஷ் ராஜதந்திரம் பட்ட வர்த்தனமாக வெளியாகிறது. போலந்துக்கு ஒத்தாசை செய்யத் தயார் என்று ஒரு பக்கம் சொல்லிக் கொண்டு ஹிட்லரின் நோக்கத்திற்கும் ஒரு பக்கம் ஆதரவு அளிக்கிறார்கள் பிரிட்டிஷ் சர்க்கார். இந்த மழுப்பலால் நிலைமை குழம்ப இடமேற்படுகிறது. நாஜிகள் தங்கள் காரியத்தைமுடித்துக்கொள்ள அனுமதி கொடுப்பதுபோல் இருக்கிறது.

ஜனநாயகங்களின் ஆர்ப்பாட்டங்களைக் கண்டு, ஓரளவு பின்வாங்கித் தயங்கிக் கொண்டிருக்கும் பொழுது திடீரென்று சேம்பர்லின் ஹிட்லருக்கு செயல் செய்ய இடம்கொடுத்துவிட்டார். சமயத்தில் இப்படிப் பின்வாங்கி விடுவதற்கு பிரிட்டிஷ் ராஜதந்திரத்தில் என்ன கோளாறு ஏற்பட்டிருக்கிறது?

வழுக்கி விழுந்தார்

பம்பாயில், மதுவிலக்கு வெற்றி பெருது என்றும் பூரண மது விலக்கை நாடுவது மதியீனம் என்றும் சுபாஷ் பாபு, இப்பொழுது அபிப்பிராயப் படுகிருர். பூரண மதுவிலக்கு வெற்றி பெருத என்று சொல்லுவதோடு கூட, மதுவிலக்கினுல், பார்ஸிகள் கோடிக்கணக்கில் பொருள் நஷ்டம் அடைவார்கள் என்றும் சொல்லு கிருர். மேலும், முஸ்லீம்கள், பூரண மதுவிலக்கை, ஆதரிக்க வில்லை என்றும் கூசாமல் கூறு கிருர்.

சுபாஷ் பாபு, இந்த மாதிரி சொல்லுவார் என்று இரண்டு மாதங்களுக்குமுன், நம்மில் யாரும் எதிர் பார்த்திருக்க முடியுமா? பம்பாயில், மதுவிலக்கை துவக்கப்போகிருேம் என்று பம்பாய் மந்திரிமார்கள், திடீரென்று சொல்லிவிடவில்லை. பூரண மது விலக்கு, காங்கிரஸ் திட்டத்தில் ஒன்று. சுபாஷ் பாபு, காங்கிரஸ் தலைவராக, ஒரு வருஷம் இருந் தார். அப்பொழுது, அவருக்கு உடன்பாடாயிருந்த இந்த சங்கதி கள், இப்பொழுது, வேம்பாகக் கசக்கிறது என்று தோன்று கிறது.

மதுவிலக்குப் பிரசாரம், வெறும் வாய் வேதாந்த மில்லை. கள்ளைவிற்று, கல்விக்குப் பணம் சேகரிப்பது பாபம் என்று எண்ணற்ற தடவைகள், காந்திஜி, பேசி யிருக்கிருர், எழுதியிருக் கிருர். ஆகவே, மதுவிலக்குப் பிர சாரம், சதியாலோசனையைப் போல, இரகசியமாக நடைபெற வில்லை. அது பகிரங்க இரகசியம் என்று சொல்லலாம். சென்ற இரு பது வருஷங்களாக நடந்து வரும் பிரசாரம் வெறும் விளையாட்டுக் காகவா?

இந்த நாட்டில், சுயராஜ்யம் என்ருல் இன்னதென்று, பல ருக்கு இன்னும் அர்த்தமாக வில்லை போலத் தோன்றுகிறது. ஏதோ ஒருவகை மிட்டாய் என்று எண்ணிக்கொண்டிருக்கிருர் களோ, என்னமோ? சுயராஜ்யம் என்பதற்கு, முதலில், அந்நிய ஆட்சியினின்றும் விடுதலை என்று அர்த்தம். பிறகு, அதற்கு, எத்தனையோ பொருள்களை சேர்த்துக் கொள்ளலாம். அந்நிய ஆட்சியி னின்றும் நாட்டை விடுவிக்கும் முயற்சிக்கு ஒரு திட்டம் வேண் டும். அந்த திட்டத்தில், பல சாத னங்கள் இருக்கும்.

அந்த சாதனங்களில் ஒன்று மதுவிலக்கு. மதுவிலக்கின் மூல மாக என்ன நன்மை ஏற்படும் என்பதை திருப்பித் திருப்பிச் சொல்லத் தேவையில்லை. மது விலக்கினுல், நாட்டு மக்கள் ஒற்று மைப்பட்டு விடுவார்கள். குடும் பங்களில் பணச் செழிப்பு உண் டாகும். சம்பாத்தியம் குறை வாக இருக்கும் இந்நாட்டிலே,

கெட்ட செலவு இனங்களைக் குறைத்துக் கொண்டால், அல்லது ஒதுக்கித் தள்ளிவிட்டால், ஏராளமாகப் பணம் மிஞ்சும் என்பது சொல்லித் தெரியவேண்டிய சங்கதி அல்ல.

நஷ்டமில்லாமல் பார்த்துக் கொள்ளுவதே பெரிய இலாபம் என்று பொருளாதாரநூல் சொல்லுகிறது. இதை அனுபவத்தில் பார்த்துக் கொள்ளலாம். பூரண மது விலக்கினால், எளியவர்களின் வீட்டில் சந்தோஷம் ஏற்படுமானால், அதுவே போதாதா? கூனி நடந்த தொழிலாளிக்கு, நிமிர்ந்து நடக்க சக்தி, தானாகவே வந்து விடுமே? இந்த சக்தியைக்கொண்டு, சுயராஜ்யப் போராட்டத்தில், ஈடுபட்டு, அந்நியராட்சியினின்றும் விடுபட்டால், பிறகு, ஜனசமுதாயத்தின் விருப்பத்துக்கும் தேவைக்கும் தக்கபடி, ஆட்சி முறையை அமைத்துக்கொள்ள முடியும்.

எப்பொழுதுமே, இலட்சியத்துக்கும் சாதனத்துக்கும் ஒரு தொடர்பு உண்டு. வேலை செய்தால், உடல் நலன் உண்டாகும். உடல் நடன் இருப்பின், வேலை செய்ய முடியும். காரணம் காரியமாகவும் காரியம் மீண்டும் காரணமாகவும் மாறுவது இயல்பு. ஆகவே, சுயராஜ்ய சாதனங்களில் ஒன்றாக மதிக்கப்பட்டுவரும் பூரண மதுவிலக்கு, பம்பாய் நகரில் வெற்றிபெறுது என்று சுபாஷ் பாபு சொல்லுவது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது.

ஆறுமாதத் தவணை, பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்குக் கொடுத்து, சட்டமறுப்பை ஆரம்பித்தால், சுயராஜ்யப் போராட்டம் வெற்றிகரமாக முடிவடையும் என்று துணிவுடனும் நம்பிக்கையுடனும் சொல்லிவரும் சுபாஷ் பாபு, பம்பாய் மது விலக்குப் பிரச்னையில், அந்தத் துணிவையும் நம்பிக்கையும் இழந்துவிட்டதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.

பார்ஸிகளுக்கு பொருள் நஷ்டமுண்டாகும் என்று சொல்லுவதும் அபத்தம். சீமைத்துணி மறியல் செய்தபொழுது, சீமைத் துணி விற்ற முதலாளிகளுக்கு நஷ்டம் ஏற்படவில்லையா? சீர்திருத்தக் காலத்தில், சில கூட்டங்களுக்கு பொருள் நஷ்டம் ஏற்படத்தான் செய்யும். அதை கவனித்தால், சீர்திருத்தத்தை அமுலுக்குக்கொண்டு வர முடியாது.

முஸ்லீம்கள் மதுவிலக்கை ஆதரிக்கிறார்களா என்பது சந்தேகம் என்கிறார் சுபாஷ்பாபு. இது ரொம்பவும் கேவலமான குத்து. முஸ்லீம்கள் மதுபானத்தை வெறுப்பதைப்போல வேறு யாரும் அதை, அவ்வளவு தீவிரமாக எதிர்க்கமாட்டார்கள் என்பது உலகப் பிரசித்தமான விஷயம்.

சுபாஷ் பாபுவுக்கு, காங்கிரஸ் காரியக்கமிட்டியின்பேரிலும் காங்கிரஸ் மந்திரிகளின் பேரிலும் இருக்கும் கோபமும் வருத்தமும் அவரை, அவர் அறியாமலே, எங்கெங்கோ, இழுத்துக் கொண்டு போகின்றன. பரிதாபமான நிகழ்ச்சி!

முகப்பட விளக்கம்

கவர்ச்சிக்குத் தேவையான அழகு எதுவும் செய்யாமல், பிறந்த மேனிக்கு, கலைஞானம் என்றும் "அகத்தியன்" என்றும் இரண்டு விஷயங்கள், 'பாரத தேவி'யில் வருகின்றதை, நீங்கள் பார்த்திருப்பீர்கள். அகத்தியன் என்பது எக்காலத்துக்கும் ஜோதியாக விளங்கும் அகஸ்தியர் நாடி என்ற பொக்கிஷத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

அகஸ்தியர் நாடி என்று உங்களில் பலர் கேள்விப்பட்டிருப்பீர்கள். அதன் விபரங்கள் உங்களுக்குத் தெரியாமலிருக்கலாம். மனித வர்க்கத்தின் க்ஷேமத்திற்காக, அகஸ்தியமாமுனி, நாடி என்ற நூலை திருவாய் மலர்ந்திருக்கிறார். தாமிரத்தைத் தங்கமாக்கவேண்டும் என்ற ஆசை, மனித உள்ளத்தில் எப்பொழுதும் குடிகொண்டிருக்கிறது.

அதைப்போலவே, இன்னொரு ஆசையும் அவனுடைய, அவனுடைய உள்ளத்தில் துடித்துக்கொண்டிருக்கிறது. முக்காலத்தைப் பற்றிய விபரங்கள் அனைத்தும் தனக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்று மனித ஆசை இருக்கும்பொழுது, அந்த ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்கு ஒரு சாதனம் வேண்டாமா? அந்த சாதனத்துக்குத்தான் அகஸ்தியர் நாடி என்று பெயர்.

இதைப்பற்றிப் பலர், கர்ண பரம்பரையாகக் கேள்விப்பட்டிருக்கலாம். ஆனால், காட்சியாக, அறிவுத் திரட்டாகப் பார்த்திருக்க மாட்டார்கள். ஆகவே, தமிழர்களின் நலனைக்கருதி, அகஸ்தியர் நாடியிலிருந்து, அருமையான விஷயங்களை, 'பாரத தேவி'யில், தொடர்ந்து பிரசுரித்து வருவோம். அதை சிரத்தையோடு படித்து, பயன் பெறுமாறு வேண்டிக்கொள்ளுகிறோம்.

முகப்படத்தைப்பற்றி, விரிவான விபரங்களை "கலை ஞானம்" என்ற கதைக்கட்டுரையில் கண்டுகொள்ளுவீர்கள். நாடி சம்பந்தமான, அருமையான விஷயங்களை, வாரா வாரம் எதிர்பாருங்கள். உங்கள் ஏக்கம் ஒழிந்து போகும். துக்கம் மடிந்துபோகும். அறிவும் அமைதியும் உங்களுக்கு உண்டாகும்.

திருவள்ளுவ நாயனர்

(வ. ரா.)

பொய்யாமொழிப் புலவரான நாயனரைப்பற்றி, இன்றைக்கு கேட்க, நீங்கள் எல்லோரும் ஆவலுடன் இருக்கிறீர்கள்.

நமது சகோதரர்கள் மலையாளிகள் இருக்கிருர்களே, அவர்களிடம் "பிரதமன்" என்று சொல்லிப் பாருங்கள். உடனே, அவர்களுடைய நாக்கில் ஜலம் ஊறும். அவ்வளவு இனிப்பாயிருக்குமாம் பிரதமன். பிரதமன் என்ருல் பாயஸம்தான்.

மலையாளிகளுக்கு, பிரதமனைக் கேட்டாலே, நாக்கில் ஜலம் ஊறுவதைப்போல, தமிழர்கள் ஒன்றைக்கேட்டால் ஆனந்தப்படுவார்கள்; இன்பமடைவார்கள். அந்த இனிப்பான பொருள் எது? அதற்குப் பெயர், குறள்.

குறள் என்பது வள்ளுவனரின் திருவாக்கு, அருள்வாக்கு. பொய்யாமொழிப் புலவரானதால், அதில் மெய் ஒன்றையே காணலாம்.

நீங்கள், குறளைப் படித்திருக்கிறீர்களோ? குறளைப்பற்றிக் கேட்டிருக்கிறீர்களோ? உங்களில் பலர் குறளைப்பற்றி கேள்விப்பட்டிருக்கலாம். உங்களில் சிலர்தான் படித்திருக்கக்கூடும்.

வித்வான்கள், குறள் கடினம் என்று சொன்னுலும் சொல்லுவார்கள். குறள் கடினமே இல்லை. பல நூறு வருஷங்களுக்குமுன்னே, நாயனர் திருவாய் மலர்ந்த நூல் ஆதலால், அப்பொழுது வழக்கத்தில் இருந்த சொற்களுக்கு, எளிதிலே இப்பொழுது அர்த்தம் விளங்காமல் போகலாம்.

ஆகவே, குறளின் சொல் கடினமாகத் தோன்றலாம்; குறளின் கருத்தை, எல்லாரும் எளிதிலே அறிய முடியும்.

எல்லாரும் அடிக்கடி சொல்லுகிற குறள் ஒன்றைச் சொல்லுகிறேன், கேளுங்கள். அது எவ்வளவு இனிமையாயும் அழகாகவும் அர்த்தபுஷ்டியுடனும் இருக்கிறது, பாருங்கள்.

எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு.

கவனத்தை, கிரிக்கெட் கிட்டி, கோலிக்குண்டு முதலியவைகளில் செலுத்தாமல், இதை நீங்கள் கேட்டால், இந்தக் குறளுக்கு, வாத்தியார் இல்லாமல், உங்களுக்கு அர்த்தமாகிவிடும்.

(சென்னை ரேடியோவில் (13-7-39) வியாழக்கிழமை பேசிய பேச்சு.)

கொஞ்சம் நிதானமாய்க் கேளுங்கள். எத்தனையோ பேர்கள், எத்தனையோ சேதிகளை உங்களிடம் சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்லுகிறது அவ்வளவும் உண்மையாக இருக்குமா? அவைகளில் உண்மை இதுதான் என்று கண்டு பிடிப்பது புத்திசாலித்தனம். இப்பொழுது நான் உங்களிடம் சொன்னேனே, அது தான், அந்தக் குறளுக்கு அர்த்தம்.

எப் பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப் பொருள் மெய்ப் மெய்ப் பொருள் காண்பதறிவு.

எத்தனையோ விஷயங்களை, எத்தனையோபேர் வாயினின்றும் கேட்டாலும், அந்த விஷயங்களின் உண்மையான சாரத்தைக் கண்டு பிடிப்பதுதான் அறிவு என்றார் நாயனார். இந்தக்குறள் கடினமாக இருக்கிறதா? கவனக் குறைவோடு இருந்தால், எந்த விஷயமும் கடினமாய்த் தானிருக்கும். அப்பொழுது, வாத்தியார், என்னபாக்கி என்று கேட்டால், "வால் நுழையவில்லை; அதுதான் பாக்கி" என்று சொல்ல நேரிடும்.

வள்ளுவனார், தமிழ் நாட்டிலே, எங்கேயோ இருந்தார் என்று எண்ணிக் கொள்ளாதீர்கள். புலவர் பெருமான் திருமயிலைவாசி. புரிந்ததா? மைலாப்பூர் வாசிதான்.

அவருடைய பூரணமான வரலாறு, இன்னும் சரியாகத் தெரியவில்லை. அவருடைய தாயாருக்கு, ஆதி என்றும் தகப்பனருக்கு பகவன் என்றும் பெயர் என்று சொல்லுகிறார்கள்.

பிறந்த குழந்தையை, பெற்றோர்கள் பிறந்த இடத்திலேயே விட்டு விட்டுப்போனதாகவும், நாயனரை, வள்ளுவர்கள் தங்கள் இருப்பிடத்துக்குக் கொண்டுபோய் வளர்த்ததனல், அவருக்கு, திருவள்ளுவர் என்று பெயர் வந்ததாகவும் சொல்லுகிறார்கள்.

வள்ளுவர்கள் என்ற கூட்டத்தார், தமிழ் நாட்டில், பெயர்போன ஒரு கூட்டத்தார். அவர்களுக்கு சோதிடம் சொல்லுவதில்தான் முக்கியமான தொழிலாக அமைந்திருந்தது. நாயனர், அந்தக் கூட்டத்தாரிடையே வளர்ந்து வந்தாலும், அந்தத்தொழிலை மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

புலவர் பெருமானின் தொழில்கள் உழவும் நெசவும் ஆகும். மனிதர்களுக்கு முக்கியமாக வேண்டியவை ஆகாரமும் உடையும் தானே?

வள்ளுவனரின் திருக்குறள், தமிழ் வேதம் என்று நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். உங்களுக்கு, நமது தமிழ் நாட்டு மகாகவி சுப்பிரமணிய பாரதியாரைப்பற்றி, நன்றாகத் தெரிந்திருக்கும். "செந்தமிழ் நாடெனும் போதினிலே, இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே" என்ற பாட்டை, அடிக்கடி கேட்டிருப்பீர்களே, அந்தப் பாட்டைச் செய்தவர் பாரதியார்தான்.

பாரதியார் வள்ளுவனரைப்பற்றிச் சொல்லுவதை, நீங்கள், உங்கள் கருத்தில் நன்றாகப் பதித்துக்கொள்ள வேண்டும்.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான் புகழ் கொண்ட தமிழ் நாடு.

பாரதியாரின் பாட்டுக்கு என்ன அர்த்தம்? தமிழ் நாட்டுக்கு தனிப்பெருமை எதனுலே தெரியுமா? வள்ளுவனுரைப் பெற்று, அவரை, உலகத்துக்கே, தனிப்பெரும் பொக்கிஷமாகக் கொடுத்த பெருமைதான் தமிழ்நாட்டின் தனிப்பெருமை என்று பாரதியார், சொல்லுகையில், உங்களுக்கு உள்ளப் பூரிப்பு ஏற்படாமல் இருக்குமா?

வள்ளுவனுர், எந்த மதத்தையும் சேர்ந்தவர் அல்லவென்றும் அவர், "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை" செய்த உத்தமன் என்றும் பெரியார்கள் சொல்லுகிருர்கள். வள்ளுவனுர் பெருமையை, கற்பனை செய்து பாருங்கள். எல்லாமதத்தினர்களும், தங்கள் தங்கள் மதத்தின் சாரத்தையே, வள்ளுவனுர் தமது திருக்குறளில் எடுத்து கியிருக்கிருர் என்று சந்தோஷப்படும்படியாக, திருக்குறள் அவ்வு தெய்வீகத்தன்மைகொண்ட நூலாக அமைந்திருக்கிறது.

உங்கள் எல்லோருக்கும் என்ன ஆசை? பணம் சம்பாதிக்க வண்டும் என்று ஆசை. நல்ல கலியாணமாக ஆகவேண்டும் என்று சை. நிறைய அறிவைத்திரட்டிக்கொண்டு அழகான வாழ்க்கையை த்தவேண்டும் என்று ஆசை. இந்த மூன்று ஆசைகளும் னிதர்களாகப் பிறந்த ஆண் பெண் எல்லாருக்கும் பொதுவான சைகள்தான். இவைகள் மூன்றுக்கும், இன்பம், பொருள், அறம் று பண்டைக்காலத்துப் பெரியார்கள் பெயர் கொடுத்திருக் ர்கள்.

அறம், பொருள், இன்பம்—இந்த மூன்று அம்சங்களையும்பற்றி, ள்ளுவனுர் திருவாய் மலர்ந்திருக்கிற குறள்களை நீங்கள் படித்தாலும் கேட்டாலும் சரி, பரவசப்பட்டுப்போய் விடுவீர்கள். குறள், பிலே, கடலைக்காட்டிலும் பெரிது. உருவத்திலே, கடுக்குக்கும் து. இப்பேர்ப்பட்ட திருக்குறளை, நமக்குத்திருவாய் மலர்ந் ரிய வள்ளுவனுரை நாம் வாழ்த்தினுல் மட்டும் போதாது.

அந்தப்பெரிய மனிதன் வந்தார், இவர் வாழ்ந்தார் என்று சொல்லுவதும் சொல்லிக்கொள்ளுவதும் பொழுது போக்காகவா? வல்லது கதைப்பிரசங்கத்துக்கா? எப்பொழுது ஒருவரை, நாம் ரியமனிதர் என்று கொண்டாடுகிருேமோ, அப்பொழுது, இரண் ஒரு காரியத்தைச் செய்யவேண்டும்.

ஒன்று, அவரைப்போல ஆவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும்; அவருக்கு மேலாகவும் ஆவதற்கு முயற்சி செய்யலாம். முடியாது என்று தோன்றினுல், அந்தப்பெரியாரின் திருவாக் ப்படி நடக்கத் தீர்மானங்கொண்டு, நடக்க வேண்டும். னிமா பார்க்கும்பொழுது, சாக்கலெட் சாப்பிடுகிற சமயத்தில், த்தக்கதை நன்ருக இருக்கிறது, இந்தக் கதை நன்ருக இருக் கிறது என்று அரட்டை அடிப்பதைப்போல், பெரியார்களைப் பற்றிப் பேசுவது, நன்ருயிருக்காது.

வள்ளுவனுரைப்போல ஆக முடியாமல் இருக்கலாம். வள்ளுனுர் சொன்னதைப்படித்தும் கேட்டும், அதன்படிநடக்க, நீங்கள், நான் எல்லோரும் முயலவேண்டும். உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு என்று சொல்லுவதுதான் உண்மை. நம்மில் ஒவ்வொருவரும், உயர்ந்தோர் என்ற கணக்கில், ஏடுபடவேண்டும் என்ற ஆசையைக் கொண்டு, அதை வாழ்வில் நிறைவேற்றிக்கொள்ள தீர்மானம் செய்துகொள்ள வேண்டும்.

வள்ளுவனுர், உழவையும் நெசவையும் பெரிய தொழில்களாகக் கொண்டாரே என்று நவீன நாகரிகத்தில் மூழ்கிக்கிடக்கும் குழந்தைகளில் சில பேர்கள், என்னைக்கேட்டதுண்டு. "நீங்கள் குழந்தைகள். அதனுல்தான், உங்களுக்கு அவைகளின் பெருமை தெரியவில்லை. நீங்கள் பெரியவர்களாக ஆனீர்களானுல், நீங்கள் கேட்கமாட்டீர்கள். அப்பொழுது குழந்தையாக இருப்பவர்கள், உங்களைக் கே பார்கள்" என்பேன். அவர்கள் சிரித்துக்கொண்டு போய் வார்கள்.

ஆனுல், அவர்கள் சிரிக்கும்படியாக நான் பேசினதாக, எ ணிக்கொண்டார்களே யல்லாமல், அதை உண்மை என்று கொள் வில்லை. அந்தமாதிரி, நீங்களும் சிரித்து, என்னை ஏமாற்றிவிடா கள். அதைத்தான், உங்களை வேண்டிக்கொள்கிறேன்.

உங்களோடு நான் பேசினதில், எனக்கு சந்தோஷம். ஆ நீங்கள் என்னேடு பேச முடியவில்லையே! அதுதான் வருத் அப்படி நேருவதற்கும், கண்டுபிடித்து விடுவார்கள். உங்களில் வருக்கே, அந்த பாக்கியம் கிடைத்தாலும் கிடைக்கும்.

சாஸ்திரப் பித்தம்

(ஸரஸி)

" தாவாரமில்லை, தனக்கொரு வீடில்லை;
தேவாரமேதுக்கடி? குதம்பாய்!
தேவாரமேதுக்கடி?"

என்று பாடிக்கொண்டு போகிருன் பரதேசி. தாவார மில்லாதபோது தேவாரம் வேண்டியதில்லையென்ற தர்க்கத்தின் அழகு என்னவோ எனக்குப் புரியவில்லை. அவ்விதமிருந்தும் அந்தப் பாட்டின் இசையழகுமட்டும் என் காதிலே அநவரதமும் ரீங்காரம் செ கொண்டேயிருக்கிறது. எ னென்ன இல்லாதபோனுல், என னென்ன தேவையில்லை யென் நாலும் யோசிக்கிறேன். முதலிலே சாஸ்திரப் பித்தம்தான் என்னை உறுத்துகிறது. சூத்திரிய மன்

னைப் பெறாத நமக்குச் சாஸ்திரம் எதுக்கு என்று நான் கேட்கிறேன். பலவானே புவிமன்னன் என்று வித்தாரம் பேசுகிறார் சாஸ்திரியார். "நான் கோழை" என்று வெளிப்படையாய்க் கூற அவருக்கு இஷ்டமில்லை. சோம்பேறிக்குச் சோறு கண்டவிடம் சொர்க்கம். கோழைக்கு அடிபணிவதே பலம்; அலறக்கூட அவனுக்குப் பயம். அலறினால் என்ன விபரீதம் விளைந்துவிடுமோ!

* * *

"பொய் பேசாதே" என்று எனக்குக் கூறுகிறது சாஸ்திரம். "திருடாதே" என்று போதிக்கிறது" சாஸ்திரம். எதற்காக இப்படியெல்லாம் அது சொல்லுகிறது? என் வாழ்வை நாடியா? அல்லது என்னைக் கட்டிப் போடவா? ஊருடன் கூடிவாழும் மார்க்கத்தைத் தான் எனக்குக் காட்ட, அது முயலுகிறது; என்னை நெறித்து அமுக்கிவிட அல்ல. சாஸ்திரம் எனக்கும் ஊராருக்கும் சுகம் கொடுக்கவந்த ராஜி மார்க்கம். அது என்னையும் ஊரையும் பாழ்படுத்து மாறு செய்ய, யாராவது முயன்றால், நான் எப்படிச் சம்மதிக்க முடியும்? சாஸ்திரம் என் உள்ளத்தின் நல்லுணர்ச்சியை நசுக்கிவிட, என் விவேகத்தை இருள்சூழச் செய்ய, என் வாழ்வை நாசமாக்க உபயோகிக்கப்படுமானால், அது சாஸ்திரமாகுமா?

என் சகோதரன் ஒருவனை 'ஹிந்து' என்று சொல்லுகிறது சாஸ்திரம். ஆனால், அவனை ஆண்டவன் திருக்கோயிலிலே அண்டவிடாதே என்றும் அதுவே கூறுகிறதாம்! ஒன்றா, இரண்டா? இன்னும் என்னென்னவோ பழிகளை அந்தச் சாஸ்திரத்தின்மீது சுமத்துகிறார்கள் நம் சாஸ்திரிகள். கன்னிகழியாத கட்டழகி ஒருத்தி கணவனை யிழந்தால், அவளை, முனிவனும் பிறழும் கடுந்துறவை அனுஷ்டிக்கச் சொல்லுகிறதாம் அந்தச் சாஸ்திரம்! புஷ்பத்தை மலராதே என்று சாஸ்திரம் கட்டளையிட முடியுமா? இயற்கையோடு யுத்தம் தொடுக்கவந்த அசுரனா சாஸ்திரம்? இயற்கை கடவுளின் திருமேனி. அதற்கு ஊறு செய்ய யாருக்கும் உரிமையில்லை. சாஸ்திரத்துக்கு அவ்வுரிமை எங்கிருந்து வந்தது?

காட்டையும் மேட்டையும் அழித்து, வழிகாணப் போடப்பட்ட ரஸ்தாக்கள் சாஸ்திர நியமங்கள். அவ்வக்காலத்திலிருந்தவர்கள் அவ்வக் காலத்து நிலைமைகளுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்றவாறு சமூக முழுவதும் இன்புற்று வாழக் கண்ட பாதைகள் அவை. சாஸ்திரத்துக்கு மனிதன் அடிமையல்ல. சாஸ்திரக்தான் மனிதனுக்கு அடிமை. பழைய சாஸ்திரம் பயனற்றுப் போகும் போது, புதிய சாஸ்திரத்தைச் சிருஷ்டித்துத் தானாக வேண்டும். யுக்தியனுபவங்களுக்கும் சாஸ்திர நியமங்களுக்கும் முரண்பாடு வந்தால் இயந்திரக் கற்களின் இடுக்கிலே அகப்பட்டுக்கொண்டதுபோல மனிதன் அழியவாவேண்டும்? சாஸ்திரமும் விவேகமும் மாறுபடும் போது, விவேகந்தான் மனிதனுக்கு அடைக்கலமாகும்.

* * *

வழிகாட்டிச் செல்பவன் இடறிவிழுந்தால், பின்னே போகிறவனும் இடறிவிழுந்து தானாக வேண்டுமா? சாஸ்திரம் செய்த முன்னோன் நமது வழிகாட்டியேயாவான். அவனது அனுபவமும் யுக்தியும் கூடிக் கண்ட ஞானம் சாஸ்திரம். காலத்துக்குக் காலம் நிலைமைகள் மாறுபடுகின்றன; அனுபவம் வேறுபடுகிறது. சாஸ்திர நியமங்களென்ற பழைய ஞானக் குளிகைகள், என்னதானிருந்தாலும், சுயஞானத்துக்கு மாற்றாகி விடமாட்டா. கரைபுரண்ட வெள்ளம் வந்த பிறகு, பழைய கரையை நம்

பிப் பயனுண்டா? புதிய கரையும் புதிய பாதுகாப்புமே வேண்டும்.

* * *

சாஸ்திரக்காரர் சாஸ்திரம் எழுதியபோது, இல்லாத புதுமைகள் எல்லாம் இன்று தோன்றிவிட்டன; இல்லாத துன்பங்களும் இப்போது முளைத்துவிட்டன. வானத்து விமானமும், நீருக்குள் கப்பலும், ரயிலும், காரும் சாஸ்திரக்காரருக்குத் தெரியுமா? கடுமையான பாவத்துக்குக் காசியாத்திரையை அன்று அவர் பிராயச்சித்தமாய்க் கருதினார். கையிலே மட்டும் காசிருந்தால், பத்துநாளைக் கொரு தடவை நான் இன்று காசியாத்திரை செய்துவர முடியுமே! என் முன்னோரைவிட, அநேக மடங்கு பாவங்களைச் செய்ய, ரயில் வண்டி எனக்கு உரிமை சம்பாதித்து விட்டதா என்ன? பிராயச்சித்தம் காசியிலே இல்லை. என் மனத்திலேதான் உண்டாக வேண்டும். அதற்கு என் மனதைப் பக்குவம் செய்ய, அன்று காசியாத்திரையைக் கூறினார் சாஸ்திரக்காரர். இன்று பூப் பிரதட்சிணங்கூட அதற்குச் சமமாகுமோ என்பது சந்தேகமாகும்.

சுவர்க்கோழியும், கடிகாரமும் நேற்றிரவு என் அரைத் தூக்கத்திலே போராடிக் கொண்டிருந்தன. என் மனதை ஜயிக்கத்தான் இரண்டுக்கும் போராட்டம். என் விழிப்பைக் கனவாக்க சுவர்க்கோழி ஜபித்தது; என் உறக்கத்தை விழிப்பாக்கக் கடிகாரம் ஒலித்தது கடிகாரம் என்னைத் தூங்கவிடவில்லை; சுவர்க்கோழி என்னை விழிக்க விடவில்லை. வெகுநேரம் அதே சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டிருந்தேன். உறக்கத்தைத்தான் இறுதியில் உதறி எழுந்தேன். வெளியே சென்று வானத்து நட்சத்திரங்களை ஏறிட்டுப் பார்த்தேன். அவை மின்னி மின்னிப் புன்னகை பூத்தன. அது இயற்கைத் தேவியின் புன்னகை. அந்தப் புன்னகையிலே, என் விவேக கீதம் லயிக்கவேண்டும். சாஸ்திரம் அதற்கு உபசுருதியாய்த் துணைநிற்க வேண்டும். தவறினால், சாஸ்திரத்தின் அபசுருதியைத் தூரத் தள்ளிவிட்டு, ஏகாங்கியாய் என் விவேகம் இசைக்க வேண்டும். அபசுருதியைவிட, சுருதியற்ற கீதமே மேலல்லவா?

அகத்தியன்

27 நட்சத்திரங்களுள் ஜெனித்த ஒவ்வொருவரின் ஜென்ம நட்சத்திரம் முதல் அன்றைய நட்சத்திரம்வரை எண்ணிய தொகையை 9-ல் கழித்த சேடம்.

1-க்கு ஜென்மம்.	அதிபதி-சூரியன்	மந்தம், கிலேசம், மத்திபம்.
2-க்கு சம்பத்து.	அதிபதி-புதன்	சுகசௌக்கியம், தனலாபம், உத்தமம்.
3-க்கு விபத்து.	அதிபதி-இராகு	எதிர்பாராத துன்பங்கள், பகை, அலைச்சல், மத்திபம்.
4-க்கு க்ஷேமம்.	அதிபதி-வியாழன்	சுகலாபம், இஷ்ட காரியசித்தி, உத்தமம்.
5-க்கு பிரத்யாரம்.	அதிபதி-கேது	கிலேசம், கலகம், மயக்கம், மத்திபம்.
6-க்கு சாதகம்.	அதிபதி-சந்திரன்	தக்க லாபங்கள், நல்லோரிணக்கம், தேவானுக்கிரகம், கார்ய ஜயம், மிகநலம், உத்தமம்.
7-க்கு வதை.	அதிபதி-சனி	சரீர அலைச்சல், மனோபீதி, நேச பகை, கார்யமுடக்கம், மத்திபம்.
8-க்கு மயித்திரம்.	அதிபதி-சுக்ரன்	எத்தனகார்ய ஜெயம், மகா உத்தம பலன்.
9-க்கு பரம மயித்ரம்.	அதிபதி-அங்காரகன்	மனசந்துருஷ்டி, இடர்காயம், சமபலன்.

அதன்படி ஒவ்வொரு நக்ஷத்திரத்திற் பிறந்தவர்களும், நட்சத்திராதிபர்களின் பலாபலனை யுணர்ந்து காலபேதம்போல் நடந்துகொள்வது நலம்.

முன் கூறிய 27 நட்சத்திரங்களில் ஜெனித்தார்களின் பொதுவான சில குணாதிசயங்களை உணர்த்துகின்றது.

1. <u>அசுவனி நட்சத்திரத்தில் உதித்தார்க்கு</u>

ஜன்ம நட்சத்திரம்:	அசுவனி.
இதற்கதிபதி:	சூரியன்.
இஷ்டதேவதை:	சரஸ்வதி.

பகை : சித்திரை, மூலநட்சத்திரங்களில் உதித்தவர்கள்.
உருவம் : ஆண்.
குணம் : தாமதம்.
சுபப்பலன் தரும் வாரம் : செவ்வாய்க்கிழமை.
திசாதிபன் : கேது.

குணாதிசயங்கள்: செவ்வனே எத்தொழிலையும் செய்பவன், ஸ்திரீகளால் விரும்பத் தக்கவன். தைரியவான். சர்வாபரணப் பிரியன். முன்கோபி. கீர்த்திமான். செழுமையான நேத்திரமுடையவன். அகன்ற மார்புள்ளவன். விசாலம் பொருந்திய நெற்றியினையுடையவன்.

பின்னும் அசுவனி முதற்பாதத்தில் உதித்தவனாயின், கோள் சொல்லும் குணத்தினையுடையவனும், சஞ்சல மனதினனும், பாவக்கிருத்தியங்களை செய்பவனும், அழகில்லாதவனும், முயற்சியற்றவனும் இருப்பான்.

இரண்டாம் பாதத்தில் பிறக்கின், முன்கூறிய சுபப்பலன்களோடு பிறர் மனோபாவங்களையறிந்து நடப்பவனும், அழகுள்ளவனும், நற்சிந்தனையுடையவனும், மெய்ஞ்ஞானமுள்ளவனும், காணப்படுவான்.

மூன்றாம் பாதத்தில் தோன்றுபவன் ஜோதிடமுதலிய நல்ல சாஸ்திரங்களையறியப் பிரியமுள்ளவனும், பிறருக்கு நற்புத்தி புகட்டும் தன்மையனும், பிறர் செய்யமுடியாத காரியங்களை செய்துமுடிக்கும் வல்லவனும் காணப்படுவான்.

நான்காம் பாதத்தில் உதிக்கின் : போர் செய்தற்கு ஏற்ற திடசாலியாயும், போகபாக்யவானும், காமியாயும் இருப்பான்.

2. பரணி நட்சத்திரத்தில் உதித்தார்க்கு.

ஜன்ம நட்சத்திரம் : பரணி.
இதற்கதிபதி : சந்திரன்.
இஷ்டதேவதை : துர்க்கை.
பகை : கேட்டை நட்சத்திரத்தில் உதித்தவர்கள்.
உருவம் : ஆண்.
குணம் : சாத்மீகம்.
சுபப்பலன் தரும் வாரம் : ஞாயிற்றுக்கிழமை.
திசாதிபன் : சுக்கிரன்.

குணாதிசயங்கள் : தானதரும பரோபகாரி, ஞானி, தாய் தந்தையர்க்கினியன், நித்திரை சுகமற்றவன், முன்கோபி, திரளான பூமி முதலிய செல்வமடைபவன், இடப்பாகத்தில் மருவுள்ளவன், பெருமை பொருந்திய கீர்த்தியடைபவன், தாம்பூலப்பிரியன், திடம்பொருந்திய வாக்கினையுடையவன், பெண்களால் கூடும் சங்கீதப் பிரியமுள்ளவன், முகவாய்க்கட்டை சிறந்திருப்பவன்.

இத்துடன் முதற்பாதத்தில் பிறக்கின், பராக்கிரமமும், பலசாலியும் நீதியுள்ளவனும், பகைவர்களை ஜெயிக்கும் வல்லமையுள்ளவனும், சிவந்த ரோமமுள்ளவனுமாவான்.

இரண்டாம் பாகத்தில் உதிக்கின், மானமுள்ளவன், நிபுணன், பகுத்தறிந்தே காரியம் செய்பவன், தருமசாஸ்திரம் அறிவோனும், காணப்படுவான்.

மூன்றும் பாகத்தில் பிறக்கின், விசாலமான நேத்திரமுள்ளவன், சிறிய காரியங்களைச்செய்து சந்தோஷிப்பவனும், ஸ்தூலதேகியாயும் இருப்பான்.

நான்காம் பாகத்தில் பிறந்தவன் வாதசரீரமுள்ளவன், நீசர்களிடம் சேவகம் செய்வோன், தற்சனப் பிரியனுமாவன்.

3· கார்த்திகை நட்சத்திரத்தில் உதித்தார்க்கு.

ஜன்ம நட்சத்திரம் :	கார்த்திகை.
இதற்கதிபதி :	அங்காரகன்.
இஷ்டதேவதை :	அக்னி.
பகை :	அனுஷத்தில் உதித்தார்கள்.
உருவம் :	பெண்.
குணம் :	ராசதம்.
சுகப்பலன் தரும் வாரம் :	வெள்ளிக்கிழமை.
திசாதிபன் :	சூரியன்.

குணாதிசயங்கள் : சொற்சாதுர்யம், பொய் பேசிப் பொருள் சம்பாதிப்பதில் வல்லவன், ரசவர்க்கங்களில் பிரியமுள்ளவன், தன்னலப் பிரியன், அரச சன்மானமுள்ளவன், திடகாத்திரன், வஞ்சகன், மார்பில் ரோமமில்லாதவன், அல்லது மச்சம் உள்ளவன், வழக்குத் தொடரும் தணித்த மனமுடையவன்.

அதினும் முதற்பாகத்தில் பிறக்கின், வித்வான், பிரபு, பொருட்சேகரன், ஆசாரஸ்தன், சூரன், பசுவர்க்கப் பிரியன், சிறுமேகாதி பிணியாளனுமாவான்.

இரண்டாம் பாகத்தில் பிறந்தவன், ஆசாரமற்றவன், ஜெயசாலிகளை சிநேகித்து தன் காரியங்களை முடித்துக்கொள்ளுபவன், தரும சாஸ்திரங்களை வெறுப்பவனுமாவான்.

மூன்றும் பாகத்தில் பிறந்தவன் துஷ்டப் பெண்களைச் சேருபவன், மந்த புத்தியுள்ளவன், தீமையான காரியங்களை செய்ய மனதுள்ளவனுமாவன்.

நான்காம் பாகத்திலுதித்தவன் தரித்திரன், சாஸ்திர சம்பன்னன், மனத்தாகமுடையவன், பொருமையற்றவன், திக்கவானுமாவான்.

ஆளுக்குள் ஆளு; ஏழ்மை ஆளு!

மாயாண்டிக்கு வயது இருபத்திரண்டு இருக்கும். அவருக்கு கலியாணமாகி, இரண்டு வருஷங்கள் ஆகின்றன. அவர் எம். ஏ. பட்டம் பெற்றவர். கல்லூரியில் படிக்கும் பொழுது, தனது தேர்ச்சிக்காக, அவருக்குப் பல பதக்கங்கள் கிடைத்திருக்கின்றன. மாயாண்டி, ஏழைக்குடும்பத்தில் பிறந்தவர்.

சிபார்சு யாரும் அவருக்குக் கிடையாது. ஸர்க்கார் உத்தியோகத்தைத் தவிர, தனக்கு வேறு கதி கிடையாது என்று மாயாண்டி தீர்மானம் செய்து கொண்டார். ஸர்க்காரிலே, ஒரு உத்தியோகத்துக்கு மனுப் பண்ணிக்கொண்டார். அந்த உத்தியோகம், தனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை, அவருக்கு இல்லவே இல்லை.

திடீரென்று, ஒருநாள் தபால்காரன், சர்க்கார் கடிதம் ஒன்றைக் கொண்டு வந்து கொடுக்கவே, மாயாண்டி, அந்தக் கடிதத்தைத் திற்கு முன்னமே, "வெடு வெடு" என்று நடுக்கம் அடைந்தார். பயத்தினால் அல்ல ; ஆசையினால். கடிதத்தைத் திறந்து பார்த்து தனக்கு உத்தியோகம் கிடைத்திருக்கிறது என்று நிச்சயமாகத் தெரிந்துகொண்டார்.

இது நேர்ந்து, சுமார் மூன்று வருஷங்கள் இருக்கும். அதற்குப்பின்னர்தான், அவருக்கு கலியாணம் நடந்தது. 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்று சொல்லுவதற்குப் பொருத்தமாகவோ, என்னவோ, மாயாண்டிக்கு, கலியாணத்துக்கு முன், உத்தியோகம் கிடைத்து விட்டது.

சம்சாரம் அதாவது குடும்பம் என்ற யானைக்குத் தீனி போடுவதாயிருந்தால், நிச்சயமாக மாதச் சம்பளம் வரும் உத்தியோகம் இருந்தால் தானே கட்டும்? இந்தமாதிரி எண்ணி எண்ணி ஏமாந்துபோய், கலியாணமே ஆகாமல் தவிக்கும் பேர்வழிகளின் கூட்டத்தில் சேராமல், மாயாண்டி தப்பித்துக் கொண்டதற்காக, யாரைத் துதிக்கவேண்டுமோ, அவரை அல்லது அவர்களை நீங்கள் துதிப்பதைப்பற்றி, எனக்கு ஆட்சேபணையே இல்லை.

உத்தியோகமாகும் பொழுது மாயாண்டிக்கு ரூ. நாற்பது சம்பளம். இப்பொழுது நாற்பத்தாறு. வருஷத்துக்கு இரண்டு ரூபாய் சம்பள உயர்வு. கலியாணமாகி, இரண்டு வருஷங்களாகிற படியால், மாயாண்டி இப்பொழுது தகப்பனாராக ஆகிவிட்டார். குழந்தை பிறந்து மூன்றுமாதமாகிறது.

நாற்பத்தாறு ரூபாய் சம்பளத்தில், மாயாண்டி சென்னையில், குடும்பம் நடத்தி வருகிறார். அவர் சென்னையில் எந்தப் பகுதியில் (காங்கிரஸ் பாஷையில்) எந்தப் பேட்டையில், எந்தத் தெருவில் வசிக்கிறார் என்பதை நான் சொல்லமாட்டேன். அவ்வளவு ரகசியமாக ஏன் வைத்துக்கொள்ள வேண்டு மென்பதற்கு, கீழே இருக்கும் குறிப்புக்களே ஆதாரமானவை :

மாயாண்டி கொஞ்சம் செலவு காரராய்ப் போய்விட்டார். அதன் விபரங்களையும், நான் சொல்லாமலே, நீங்கள் சிறிது நேரத்திற்குள் தெரிந்து கொள்ளுவீர்கள். மாயாண்டியின் வாழ்க்கையில், ஒருநாள் சம்பவங்களைக் குறிப்பிடுகிறேன். அந்த சம்பவங்களினால், மாயாண்டியினுள்ளே நிகழ்ந்த விநோத சம்பவங்களைப் பார்த்தோமாகில், நமக்கு எல்லோருக்கும் படிப்பினையாகக் கூட இருக்கலாம்.

காலையில் எழுந்ததும் மாயாண்டி பத்திரிகை படிப்பது வழக்கம். தினசரிப் பத்திரிகைதான். பிரஸ்தாப நாளன்றைக்கு, அந்த தினசரியில், காந்தி "ஹரிஜன்" பத்திரிகையில் எழுதிய கட்டுரை யொன்று பிரசுரமாயிருந்தது. அந்தக் கட்டுரையை மாயாண்டி கவனம் வேறு இடத்தில் செல்லாமல், படித்தார். ஒருக்கால், இரண்டு மூன்று தடவைகள் அவர் அதைப் படித்திருக்கலாம் என்று நினைக்கிறேன்.

பத்திரிகையைக் கீழே வைத்தார். பெருமூச்சும் விட்டார். மாயாண்டி தனக்குள்ளாகவே, பின்வருமாறு சொல்லிக்கொண்டார் : "காந்தி மகான்தான்; சந்தேகமே இல்லை. அவருடைய சத்திய, சாந்த வழிதான் சரியான வழி. அது ஒன்று தான், மனிதனை நாகரிகப்படுத்தும். அந்த வழியை நான் இனிப் பின்பற்றுவேன், நான் கோபம் கொள்ளேன், பொய் பேசேன், யாரையும் அவமரியாதையாகப் பேசமாட்டேன், கற்பைப் போற்றுவேன். அடக்கத்தை எனக்கு அணிகலனாகக் கொள்ளுவேன், அநீதியை எதிர்ப்பேன், கோழையாக இருக்கமாட்டேன் . . . ."

இவ்வாறு எண்ணிக்கொண்டே, முழுமூச்சு ஒன்றை நிதானமாக, உள்ளே இழுத்தார். முழுமூச்சு அவருடைய திட சங்கற்பத்துக்கு அடையாளமாம்! ஆனால் தினசரியை அவர் இன்னும் பூராவாகப் படிக்கவில்லையே!

காந்தியின் கட்டுரைக்கடுத்தால் போல, ஹிட்லர், ஜர்மனியைப் பற்றி கர்ச்சனை செய்திருந்தார். அதை மாயாண்டி படிக்காமல் விட்டுவிடுவாரா? சிதறிக் கிடந்த ஜர்மனியை ஒன்று சேர்த்த வீரனல்லவா ஹிட்லர். ஜர்மனியின் அழிக்க முடியாத வல்லமையைப் பற்றி, ஹிட்லர் முழக்கியிருந்ததை மாயாண்டி படித்தார். பத்திரிகையைக் கீழே போட்டார்.

மாயாண்டி தனக்குள்ளாகவே தர்க்கம் செய்துகொண்டார். "இந்த உலகில், சாந்தம் பலிக்க வாவது? தோத்திரம் செய்தால், மயில் இறகு போடுமா? சக்தியத்தினுலே, எதையும் வெல்ல முடியாது. அடி உதவுகிறது போல, அண்ணன் தம்பி, உதவ மாட்டான். வாய் வேதாந்தத்தைக் காட்டிலும், கைத்துப்பாக்கி, எவ்வளவோ உயர்ந்தது....."

காந்தியின் கட்டுரையைப் படித்த பொழுது இருந்த மாயாண்டி, இப்பொழுது வேறொரு பேர் வழியாகி விட்டார். உலகம் முழுவதையும் கட்டி ஆளுவதுதான் பராக்கிரமத்துக்கு அடையாளம் என்று சற்று சனைத்துக் கொண்டார். சிறிது மௌனம். குழந்தை அழும் சத்தம் காதில் கேட்டது. இதற்குள் மனைவி வந்து விட்டாள்.

"குழந்தை அழுவது காதில் விழவில்லையா?" என்றாள். "முக்கியமான விஷயத்தைப் பற்றி யோசித்துக்கொண் டிருந்தேன். அப்பொழுது, குழந்தை அழுவதும் கோட்டான் கத்துவதும் காதிலே விழுமாக்கும்."

"குழந்தையையும் கோட்டானையும் ஒன்றாக மதிக்கும் நீங்கள் குடும்பம் நடத்த எண்ணுமல், சன்னியாசியாகப் போயிருக்கலாமே."

"அதற்கு உன் உத்தரவுக்காகத்தான் காத்திருந்தேன். உன்னைக் கலியாணம் செய்து கொள்ளுகிற பொழுதே எனக்குத் தெரியும். உனக்கும் எனக்கும் தோதுப் படாது என்று. நீ வாயை மூடிக் கொண்டு, போ."

"நான் வாயை மூடிக்கொள்ளுகிறேன். நீங்கள் வாயை நன்ருகத் திறந்து, வைத்துக்கொண்டேயிருங்கள்."

மனைவி குழந்தையை எடுத்துக் கொண்டு போய் விட்டாள். மாயாண்டிக்குக் கோபம். "நாகரிக மில்லாத பெண்ணேடு குடும்பம் நடத்துவதைக் காட்டிலும், கல்லைக் கழுத்தில் கட்டிக் கொண்டு, கடலில் இறங்கி விடலாம்! இந்த அசட்டு மூட்டைகளுக்காக, கற்பைக் காப்பாற்ற வேண்டுமாம்! ஆண்பிள்ளை மாதிரி திரிவதை விட்டு விட்டு, புருஷன் மாதிரி கட்டுப்பட்டுக் கிடக்கலாமோ" என்று மாயாண்டி சிந்தனை செய்யத் தொடங்கினர்.

கற்பைப்பற்றிக் கேவலமாக நினைத்துவிட்ட மாயாண்டியை, யார் இனி, கட்டிப்பிடிக்க முடியும்?

இந்த மாதிரி மனம் குழம்பி நிற்கையில், கிண்டிக் குதிரைப் பந்தய நினைவு வந்தது மாயாண்டிக்கு. பணம் "சம்பாதிப்பதிலே, சூதாம்! சத்தியமாம்! என்ன தர்ம சாத்திரம் வேண்டியிருக்கிறது! தர்ம சாத்திரமே, கையாலாகாத சில பேர் வழிகள் சேர்ந்து, எழுதின நூல்தானே? பலவீனர்களுக்குத்தான் வேண்டும் தர்ம சாத்திரம். பலவான்களுக்கு, வல்லான் வகுத்ததுதான் வாய்க்கால் என்று நினைத்துக்கொண்டபடியே, பர்ஸை திறந்து பார்த்தார். பர்ஸில் பத்து ரூபாய் இருந்தது.

"இந்தப் 10 ரூபாய் வைத்துக் கொண்டு, இன்றைக்கு குதிரைப் பந்தயத்தில் விளையாடிப் பார்க்கலாம். அதிருஷ்டம் எப்படியிருக்

கிறது என்று பார்ப்போம்" என்று மாயாண்டி தீர்மானம் செய்துகொண்டார். பத்து ரூபாய் முதலைக்கொண்டு, குதிரைப் பந்தயமூலமாக, இலட்சப் பிரபுவாக ஆகிவிட்டதாக, எண்ணிக் கொண்டிருந்த மாயாண்டி அவர்களிடம் (இலட்சப் பிரபுவாகவே ஆகிவிட்டதால் அவர்கள் என்று மரியாதையாகப்பேச வேண்டும்.) பால்காரன், பாக்கி கேட்க வந்தான்.

"என்னுங்க, ! போன மாசத்திலே கூட ஒண்ணரை ரூபாய் பாக்கிங்க. இந்த மாசமும் சேர்த்தாலுங்க, ஒன்பது ரூபா ஆவுதுங்க. ரொம்ப மொடைங்க. பணம் கொடுத்தா தேவலீங்க."

"தண்ணிப் பாலுக்குப் பணம் வேறு கொடுக்கணுமோ? போன மாச பாக்கியாம்! அதைச் சொல்லிக் காண்பித்தா, நீ பெரிய மனுசனுய்ட்டீமோ? நான் கடன்காரன்! நீ முதலாளி! முதலாளி வேலையை போய்ச் செய்யும். இங்கே ஒண்ணும் பேச்சு வச்சுக்க வேண்டாம்" என்று மாயாண்டி பதறினார்.

பால்காரன், நல்ல கிராக்கியை இழந்துவிட மனமில்லாமல் ஒன்றும் பேசாமல், வெளியே போய்விட்டார்.

மாயாண்டிக்குள் நடந்து வரும் மாய விநோத மாறுதல்களை நீங்கள் பார்த்து வருகிறீர்களா? சாந்தமும் சத்தியமும் வேண்டுமென்று முழு மூச்சு விட்ட மாயாண்டி, உலகத்தை எப்படியாவது கட்டி ஆள வேண்டும் என்ற பேராசைக்கு ஆளானார். ஆகவே, சாந்தமும் சத்தியமும் பறந்துபோய் விட்டன.

மூர்க்கத் தனத்தில் இறங்கி விட்டதும், மல்லிகையைப்போல வாடி நிற்கும் மனைவியும் இயற்கையின் அற்புதமான குழந்தையும், மாயாண்டியின் சித்தத்தில், ஒரு பொருட்டாகவே படவில்லை. உலகத்தை ஜெயிக்க வல்லமை உண்டா மாயாண்டிக்கு? இல்லை. ஆகவே, அவருடைய பேராசை, பணச் சூதாட்டத்தில் போய் விழுந்து விட்டது.

பண ஆசையில் விழுந்துவிட்ட மாயாண்டி, பால்காரனை வெருட்டத்தான் செய்வார். நாணயத்தைக் காப்பாற்றி பெரிய மனிதனாக ஆகவேண்டும் என்ற எண்ணம் மாயாண்டியின் உள்ளத்தில் பதியவில்லை. மனைவியைக் காதலித்து, கற்பைக்காக்க வேண்டும் என்ற உறுதி, அவருடைய உள்ளத்தில் ஏற்படவில்லை. காந்தி சொன்ன சாந்தத்திலிருந்து, எம். ஏ. பட்டம் பெற்ற மாயாண்டி சறுக்கி விழுந்து கொண்டே போகும் விநோதத்தைப் பாருங்கள். கதை இன்னும் முடியவில்லை.

அன்றைக்கு சாப்பிடாமலே, ஆபீசுக்குப்போனார் மாயாண்டி. மனைவிக்கு உடம்பு நன்றாயில்லை என்று லீவு வாங்கிக்கொண்டு, கிண்டிக் குதிரைப் பந்தயத்துக்குப் போனார். பால்காரனிடம் காண்பித்த படாடோபம், இப்பொழுது முழுப்பொய்யாக மாறி விட்டது.

குதிரைப் பந்தயத்தில், மாயாண்டி, பத்து ரூபாயையும் தோற்றார். பக்கத்திலிருந்த ஒருவரிடம் 5 அணா கடன் வாங்கிக் கொண்டு வெளியே வந்தார் மாயாண்டி. வருகிறபாதையிலே, ஐந்தரூபாய்

நோட்டு ஒன்று கிடந்தது. சுற்று முற்றும் பார்த்தார். தான் திருடன் என்று எண்ணிக்கொண்டார் போலும்! நோட்டை எடுத்துப் பைக்குள் போட்டுக்கொண்டு, மாயாண்டி, நடையை, வேகமாகப் போட்டார்.

நோட்டை இழந்தவர்; மாயாண்டியைக் கேட்டார் நோட்டைப் பற்றி. தனக்கு ஒன்றுமே தெரியாது என்று மாயாண்டி சொல்லிவிட்டார். வலிய வந்த அதிருஷ்டமல்லவா ஐந்து ரூபாய்? அந்த அதிருஷ்டத்தை இழக்கலாமா? பொய்யைச் சொல்லியும் பொன்னைக் காப்பாற்ற வேண்டும் என்று அவருடைய பாட்டி சொன்னது, அவருக்கு நினைவு வந்தது. ஆபத்துக்கு பாபமில்லை என்று சொல்லிக்கொடுத்த பாட்டியை, மனதில் தியானம் பண்ணிக்கொண்டே போகிற பொழுது, வழியில் போய்க்கொண்டிருந்த ஒருவரின் பேரில், மோதிக்கொண்டார்.

ஹிட்லரைப்போல் உலகத்தை ஜயிக்க வேண்டும் என்று காலையில் எண்ணிய மாயாண்டி, மற்றவர் வெருட்டினதைக்கண்டு, ஓட்டம் எடுத்தார். மற்றவரோ, இவரை விடாமல், துரத்திக் கொண்டே போனார். ஹிட்லர் வீரன், குடல் தெறிக்க ஓடித் தடுக்கி விழுந்தார். மற்றவரோ, இவர் விழுந்த சமயம் பார்த்து இவருடைய சட்டைப் பையில் கையைவிட்டு, ரோட்டில்கிடைத்த ரூபாய் ஐந்தையும் தனக்கு அதிருஷ்டமாகச் செய்து கொண்டார்.

வாய் வேதாந்தத்தைக் காட்டிலும் கைத்துப்பாக்கி உயர்ந்தது என்று சொன்ன கம்பீர வீரன் மாயாண்டி வீட்டுக்கு, பழுத்த கோழையாகத் திரும்பிப் போனார். பை காலி. மனதில் சந்தோஷமே இல்லை. மனைவியை எப்படி காண்கிறது என்ற பயம்.

மாயாண்டி மாறின விநோதங்களைக்கண்டு, நம்மில் எவரும் நையாண்டி செய்ய வேண்டாம். நம்மில் பலர், முழு மாயாண்டிகள். வேறு பலர் முக்கால். வேறு பலர் அரை. இப்படியே, ஆளுக்குள் எத்தனை ஆள்கள், சம்பவத்தைக்கருதி, சந்தர்ப்பத்தைக் கருதி முளைக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டால் போதுமானது.

திடசித்தமில்லாதவர்கள் படும் அவஸ்தை இதுதான். உண்மையான மாயாண்டி கோழையா? மற்ற மாயாண்டிகள் வெறும் "மேக்கப்பு" களை (வேஷங்களை)ப்போல, உங்களுக்குத் தோன்றுகிறதோ!

குப்பைக்கூடை

(அசுவதி)

'பையா, குப்பைக் கூடை ஒன்றும் கிடையாதா?' என்று புதுப் பத்திரிகை ஆபீஸ் நாற்காலியில் உட்கார்ந்ததும் உட்காராததுமாகக் கேட்டேன்.

'இல்லெ ஸார், இன்னும் வாங்கவில்லை,' என்று பதில் தந்தான் பையன். 'சரி தான், குப்பைக் கூடைக்கே அவசியம் இல்லை என்று பத்திரிகை நிர்வாகிகள் நினைத்து விட்டார்கள் போலிருக்கிறது. பேஷ்! சரியான தீர்மானம்தான் அதுவும். கவலையில்லை. கூசாமல் என்ன வேண்டுமானாலும் எழுதலாம் இனி இந்தப் பத்திரிகையில்' என்ற அர்த்தம்தான் கொடுத்தது அந்தத் தீர்மானம்.

பத்திரிகை ஆபீஸின் குப்பைக் கூடை சம்பந்தமான ஹாஸ்யக் கதைகள், கட்டுரைகள் எல்லாம் வேணமட்டும் நீங்கள் படித்து வயிறு வெடிக்க சிரித்திருக்கிறீர்கள். இங்கு பிரஸ்தாபிக்கப்படும் விஷயமே வேறு. பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு லாயக்கற்றது எனக் கருதப்படுபனவற்றை யெல்லாம், இந்த குப்பைக் கூடையில் போடுவதுதான் சம்பிரதாயமாக, முதல் பத்திரிகை வெளிவந்த காலமுதல் இருந்து வருவதாகத் தெரிகிறது.

ஆனால் இந்த புதுப்பத்திரிகை ஆபீசில் குப்பைக் கூடை இல்லாததின் அர்த்தம் என்ன? இந்தப் பத்திரிகை ஆபீசில் எழுதப்படும் எழுத்துகளோ, வெளியேயிருந்து ஆபீசுக்கு கிடைக்கும் விஷயதானங்களோ, எதுவும் குப்பைக் கூடைக்குப் போக லாயக்கற்றவை. அதாவது, மேஜையில் மதிப்பாக இருந்து, பத்திரிகையில் பிரசுரமாகி வெளிவருவதற்கான அந்தஸ்து கொண்டவை, என்றுதான் கருதப்படும் என்பதுதானே.

அந்தமாதிரி ஏற்படும் பக்ஷத்தில் தமிழ் இலக்கியத்துக்கு, யாரும் அநுதாபமான நினைவுகள் காட்டவேண்டியதில்லை. எழுதும் எழுத்து அத்தனையும் ஒரு நிரந்தரமான மதிப்புடனே பிறக்கவேண்டும் என்பதுதான் நம் லக்ஷியம். அந்த சமயம் வந்துவிட்டது என்பதற்கு அறிகுறி அது.

ஆனால் நாம் எழுதும் எழுத்து அத்தனையும் அப்படி பிறக்கிறதா என்று ஒரு கேள்வி போட்டுக் கொண்டால், கொஞ்சம் யோசனை செய்யத்தான் வேண்டியிருக்கிறது. உள்ளக் கிளர்ச்சியின் அழுத்தத்திலே, ஒரு வெறியிலே கிளம்பிவரும் வார்த்தைகள் சாதாரண நிலையிலே வருவதில்லை. சாதாரண நிலையிலே வரும் எழுத்துக்களில் வலு அவ்வளவாக இருப்பதில்லை.

'இப்போதே ஒரு விஷயத்தைப் பற்றி எழுதிக் கொடுங்கள்' என்று உத்திரவு போட்டு விடுவது ரொம்ப எளிது. கலைஞன் எப்போதும் எதையும் பற்றி எழுதத் தயாராகக் கடிவாளம் பூட்டின குதிரையாக இருக்க வேண்டும் என்று சொல்வது சரிதான். ஆனால் கடிவாளம் பூட்டின குதிரை எடுத்த எடுப்பிலேயே 'கியா

லப்பில் போய்க்கொண்டே இருக்க வேண்டும் என்று எப்படி எதிர் பார்க்க முடியும்? நடை, டிராட்டில் கொஞ்ச தூரம் போய் எகிறிப் பிடித்துப் பாய அதற்கு அவகாசம் வேண்டும். நடுவே நடுவே அலுப்புக்கு நின்று, நடை, டிராட் போட்டுத்தான் ஆகவேண்டும்.

அதே போல எழுத்தாளனும் சுருதி சேர்த்த வாத்யமாக, முறுக்கேற்றின நாணாக, 'விடைப்பாக' இருக்கவேண்டுமென்றாலும், எதையும் பற்றி எழுதத் தயாராக இருக்க வேண்டும் என்றாலும், மனத்திற்குள்ளே இருந்து நெட்டித்தள்ளும் ஒரு வேகத்திலே, அதையே பற்றி எழுதினால், எதையும் பற்றி அவன் சிலாக்யமாக எழுத முடியும். அதற்கு அவன் காத்திருக்கத்தான் வேண்டும். க்ஷணத்திலே தோன்றின நினைப்பு வலிவடைவதற்கு மனதுக்கு அவகாசம் வேண்டும்.

மனநிலையை எவ்வளவு பக்குவமாக வைத்துக் கொண்டிருந்த போதிலும், கலைஞன் தன் முழு உணர்ச்சி வேகத்தின் அளவையும், கற்பனை நினைவின் எல்லையையும் எழுத்திலே காட்ட முடிகிறதில்லை. மனதின் வேகத்தை அப்படியே படம் பிடித்துக்காட்ட! எழுத்துக்கு சக்தியில்லை. எவ்வளவுதான் உயர்தரமான சிருஷ்டியான போதிலும், சிருஷ்டிகர்த்தாவுக்கு அதிலே திருப்தி எற்படுகிறதில்லை.

கடலைப்போல கொந்தளித்துக் கிளம்பும் உணர்ச்சி, பேனா முனையிலே வார்த்தைகளில் அடங்கி எழுத்தாக உருவெடுக்குமுன், அதன் வேகம் எவ்வளவோ குறைந்துவிடுகிறது. உணர்ச்சி வேகத்தின் அளவுக்கு தக்க அழுத்தமான வார்த்தைகள் கிடையாது. ஓரளவுக்குட்பட்டுத்தான் அவை மதிப்பிடுகின்றன.

சிருஷ்டிக்கடவுள் பிர்மா, யுகம் யுகமாக சிருஷ்டி ஒன்றிலேயே முனைந்து இருக்கும்கர்த்தா. அவன் மனம் பக்குவமடைந்துதான் எப்போதும் இருக்கவேண்டும். ஆனால் அவன் சிருஷ்டியிலும் எவ்வளவு மாறுபாடுகள்! ஒரு உருவத்தைப்போல் மற்றொன்று இருப்பதில்லை. திராசில் உயர்ந்தும் தணிந்தும் போகும் எத்தனைவித்தியாசங்கள்! அவன் சிருஷ்டியிலேயே எவ்வளவு எற்றத்தாழ்வு?

உணர்ச்சியை மனித உருவத்தில் சித்திரித்துக் காட்டி இருக்கிறான் பிர்மா. அந்த உருவமே உணர்ச்சிக்கு ஒருவரையறை எற்படுத்தி விடுகிறது. மனிதனின் உணர்ச்சியை எழுத்தில் சித்தரித்து காட்டுகிறான். கலைஞன். இன்னும் வரையறை குறைந்துதானே போகவேண்டும்.

நிற்க, 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு' என்பது ரொம்ப பழையமொழி. தான் எழுதுவதெல்லாம் சிலாக்யமானதுதான் என்ற ஒரு மனப்ராந்தி மனித சுபாவத்தில் கொஞ்சம் அதிகம் கலந்திருக்கிறது. இந்த நினைப்பில் வரும் எழுத்துக்களுக்காகத்தான் குப்பைக் கூடையும் முன் ஜாக்ரதையாக ஆபீசில் வைத்துக்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிகிறது எனக்கு.

அந்த குப்பைக்கூடை ஒரு பரிகாசப்பொருள் இல்லை. அது ஒரு அளவு கோல். எழுத்தின் மதிப்பை நிர்ணயிக்கும் ஒரு அளவு கருவி. மதிப்புள்ள ஒரு எழுத்தைத் தன்னிடம் இழுத்துக்கொள்ள அது மறுத்து, கவிழ்ந்து கொள்ளக்கூடியது. ஒரு பெரும்பான்மை அபிப்ராயத்தை பிரதிபலித்துக் காட்டும் வாசகச் சின்னம் அது.

இன்னும் அது ஒரு விமர்சகனும் கூட. அதற்குள் வந்து விழுந்தாலும், விழாவிட்டாலும் சரி; ஒருவிதமாக அந்த எழுத்தை நிர்ணயம் செய்து விடுகிறது.

இந்த கூடையை எழுத்தாளன் பொருட்படுத்தித்தான் ஆகவேண்டும். எழுத்துதான் அதற்குமுக்கியம்,

எழுத்தாளன் இல்லை. உருவம் அதற்கு பெரிதில்லை; உணர்ச்சிதான் அதற்கு பிரதானம். உணர்ச்சியை சரியாகக் காட்டாத எந்த பெரிய உருவத்தையும் அது பார்க்க மறுத்து விடுகிறது.

இந்த தொனியிலேதான் இலக்கியம் மதிப்பிடப்பட்டு வந்திருக்கிறது. ஒவ்வொரு எழுத்தும் காலத்தின் போக்கில் அலசி அலசி விமர்சனம் செய்யப்பட்டு வருகிறது. அந்த போக்கிலே எவ்வளவு புரட்சியான மாறுதல்கள்! எத்தனை உருவங்கள் மறைந்துபோய் இருக்கின்றன! எத்தனை எழுத்துக்கள் மங்கிப் போயிருக்கின்றன!

இந்த மங்காத எழுத்தையும், மறையாத உருவத்தையும் எற்படுத்தி விட்டுப்போவதுதான் கலைஞன் லக்ஷியம்.

அந்த நினைப்பில் எப்போதும் இருக்கும் பக்ஷத்தில் குப்பைக்கூடையைப்பற்றி அவன் கவனம் செலுத்த வேண்டிய அவசியமே இல்லை. சரியான விமர்சனத் தராசு தப்பு நிறுவை காட்டாது. அதைக்கொண்டு ஒரு மதிப்பு எற்படுத்திக்கொள்ள முடியும். இன்றைய எழுத்தைவிட நாளைய எழுத்திலே அதிக வலிவைக் கொடுப்பதற்கு, உணர்ச்சியிலே ஒரு வேகத்தை திணிப்பதற்கு அது ஒரு தூண்டுகோல். கலைஞனின் உணர்ச்சி, கருத்து, எழுத்து, இவைகளின் வளர்ச்சிதான் இலக்கியத்தின் வளர்ச்சி.

எண்ணிக்கை சரி

முதலியாருக்கு எதிலும் பரம சந்தேகம். வேலைக்காரனைக் கூப்பிட்டு "அடே மாம்பழம் வாங்கிவரச் சொன்னேனே வாங்கிவந்தாயா?" என்று கேட்டார்.

"வாங்கி வந்தேனுங்க."

"மொத்தம் எத்தனை பழம் என்று எண்ணிப் பார்த்தாயா?"

"பார்த்தேனுங்க."

"சரியாக இருந்ததா?

"இருந்ததுங்க."

"மறுபடி வீட்டுக்கு வந்த பிறகு எண்ணினாயா?"

"எண்ணியாச்சுங்க."

"எண்ணிக்கை சரியா யிருந்ததா!"

"உம்"

"மொத்தம் எத்தனை வாங்கி வந்தே?"

"ஒரு பழந்தானுங்க."

*　　*　　*　　*

கண்ணில் பட்ட குற்றம்

அவர் :—(நண்பரைப் பார்த்து) ஸார், நேற்று என் மனைவியின் கண்ணில் ஒரு சிறு தூசிப் பட்டு விட்டது. அதற்காக எனக்கு ஐந்து ரூபாய் செலவாயிற்று.

நண்பர் :—நானும் என் மனைவியும் நேற்று கடைத்தெரு வழியாகப் போய்க்கொண்டிருந்தோம். என் மனைவியின் கண்ணில் ஒரு புடவை பட்டுவிட்டது. எனக்கு முப்பத்தைந்து ரூபாய் செலவு.



என் சகோதரிகளுக்கு,

ரொம்ப நாளாக உங்களுக்கு எல்லோருக்கும் கடிதம் எழுத வேண்டும் என்று எனக்கு ஆசை. ஆனல், ஆசை எளிதிலே கைகூடுவதில்லை என்று பெரியவர்கள் சொல்லுகிறார்கள். அதற்காக, தவம் கிடக்க வேண்டுமாம்! பிரார்த்தனை செய்ய வேண்டுமாம்! அகம்பாவ மில்லாமல், அடக்க ஒடுக்கத்துடன், ஈசுவரனை ஸ்தோத்திரம் செய்யவேண்டுமாம்!

நான் தவம் கிடந்தால், பெரிய காரியம் ஆகிவிடுமா? "பாரத தேவியே" தவம் கிடப்பது என்று தீர்மானிக்கையில், நான் எம்மட்டு? நமது தாய், தவம் செய்தாலே போதும். அந்தத் தவத்தில் ஒரு கோடியில் ஒட்டிக்கொண்டு, கரை ஏறிவிடலாம். நான், உங்களிடம் சொல்லிக்கொள்ள வந்தது தவத்தைப்பற்றி அல்ல.

"பாரத தேவி" என்று பெண் பெயர் கொடுத்து பத்திரிகையை நடத்த, சிலர் தீர்மானம் கொண்டிருப்பதால், எனக்கு உள்ளத்தில், ஒருவகை பூரிப்பு உண்டாகிறது. பெண், பேதை என்று யாதொரு கவலையும் பொறுப்பும் இல்லாமல், சொல்லிக்கொண்டு வரும் இந்த நாட்டிலே, பெண்களுக்கு என்ன பதவி இருக்கிறது என்று நம்மில் யாராவது யோசித்துப் பார்த்ததுண்டா?

பெண்ணுக்குத் தாயாக இருக்கிற பாத்தியம் உண்டு; வேலைக்காரியாக இருக்க உரிமை உண்டு. வாய் பேசாமல், கிடைத்ததைக் கொண்டு திருப்தி யடைந்து, பூர்வஜன்ம பலன் என்று சமாதானம் செய்துகொள்ள பாத்தியம் உண்டு. மற்ற எந்த விஷயத்திலும், பெண்களுக்கு என்ன பாத்தியமிருக்கிறது?

இதைத்தான், நான் உங்களிடம் சொல்லிக்கொள்ள வேண்டும் என்று ஆவல் பட்டேன். இவைகளைப் பற்றி உரக்கப் பேசுவதற்கு, எனக்கு, இப்பொழுது தைரியம் பிறந்திருக்கிறது.

நம்மை, ஆண்பிள்ளைகள் ஏன் கேவலமாக மதிக்கிறார்கள்? நாம் என்ன பாவம் செய்துவிட்டோம்? நாம் என்ன தகாத காரியம் செய்ய எத்தனித்தோம்? நமக்கு, கடவுளிடம் பக்தி இல்லையா? மனிதர்களிடம் அன்பு இல்லையா? மனிதர்கள், உயர்ந்த இலட்சியத்

தைக் கைக்கொண்டு வாழவேண்டும் என்பதில், நமக்கு நம்பிக்கை அபரிமிதமாக இருக்கிறதே!

ஆண்பிள்ளைகள் எப்படிக் கோடு கிழித்தாலும் அதைத் தாண்டாமல், நாம் நடந்து வந்தோமே! எள் என்பதற்குமுன் எண்ணெயாக எந்தக் காரியத்தையும் செய்து, அவர்களுக்கு நாம் ஒத்தாசையாக, இருந்து வரவில்லையா? அவர்கள் இஷ்டம் போல நம்மை ஆட்டி வைத்தபடி யெல்லாம் நாம் ஆடி வந்ததற்கு என்ன பயன்? அவர்களுக்கு நம்மிடத்தில் மரியாதையும் நம்பிக்கையுமில்லை.

இதற்குக் காரணத்தை நீங்கள் யாராவது சொல்ல முடியுமா? வீட்டுக்கு ராணி என்று எழுத்திலும் பேச்சிலும் நமக்குப் பட்டம் கட்டிவிட்டார்கள். ஆனால், அனுபவத்தில், நாம், அதாவது பெண்கள், அடிமைகள் என்பதைத் தவிர, வேறு எதையும் உண்மையாக, உண்மையுடன் சொல்ல முடியாது.

சரித்திரம், சரித்திரம் என்று ஆண்பிள்ளைகள் அடிக்கடி பேசிக் கொள்ளுகிறார்களே, அந்த சரித்திரக் கதைகளைக் கேட்கும்போது, எனக்கு துக்கம் உண்டாகிறது. பழைய ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால், போர் உண்டானது பெண்ணாலே: கலகம் உண்டானது பெண்ணாலே; கொலை ஏற்படுவதும் பெண்ணாலே. இந்த மாதிரி, கதைகளிலும் சரித்திரங்களிலும் வர்ணித்து எழுதியிருப்பதை, நீங்கள் படித்திருக்கிறீர்களா?

குழந்தைகளைப் பெறும் பாக்கியமும் துர்ப்பாக்கியமும் பெற்ற நமக்கு, கொலையில் விருப்பமிருக்குமா? நமது குழந்தைகளை, நாமே கொல்லத் தயார் என்றால், வேலியே பயிரை அழிக்கும் கதையாக வல்லவா இருக்கிறது? நமக்கு அசுரத்தன்மையைக் கற்பிக்கும் வழக்கத்தை ஒழிக்கும்படியாக, நாம் போராடவேண்டும்.

பிரபஞ்ச உற்பத்திக்கு காரணமாயிருக்கும் தாய்மார்கள், பிரபஞ்சத்தின் அழிவைத் தேடுகிறார்கள் என்ற பழியை வாங்கலாமா? அந்தப் பழி, இனியும், நம்மிடம் வராதபடி பார்த்துக்கொள்ள, நாம் முயற்சி செய்யவேண்டும். உங்களில் யாராவது கடிதம் எழுதினால், அதற்குப் பிறகு, வேறு சங்கதிகளை எழுதுகிறேன்.

உங்கள் சகோதரி,

அழகி.

* * *

பெரிய முதலாளிக்கு,

நான் ஒரு சின்ன முதலாளி என்று பெயர். நான் வியாபாரம் செய்து வருகிறேன். நாளைக்கு 300 ரூபாய்க்கு எங்க கடையில் வியாபாரம் ஆகும். நாலைந்து ஆள்கள் எங்க கடையில் வேலை செய்கிறார்

இருபது வருஷங்களுக்கு முந்தி, நானும் கடையிலே வேலை செய்த பையன்தான். அப்போ, எனக்கிருந்த முதலாளி ரொம்ப நல்லவர். அவர் எனக்கு, எவ்வளவோ புத்தி சொல்லி, என்னை நல்ல வழிக்குக் கொண்டு வந்தார். தேர், திருநாள் என்றால், கடையிலே சொல்லிக்கொள்ளாமலே, கடைக்கு "மட்டம்" போட்டு விடுவேன்.

மறுநாள் போனல், முதலாளி என்னை ஒரு வார்த்தை கேட்க மாட்டார். என் பாட்டிலே, நல்ல பிள்ளையைப் போல வேலையைச் செய்வேன். ஆனல், முதலாளி, என்னைக் கூப்பிட்டு, எந்த சமயத்தில் என்ன என்று கேட்டுவிடப் போகிருரோ என்று பயம், மாரிலே, " திக்கு திக்கு " என்று அடித்துக்கொள்ளும்.

சாயந்திரம் வீட்டுக்குப் போகிற சமயத்திலே என்னைத் தனியாக முதலாளி கூப்பிட்டு, "என்னப்பா! உனக்கு முதலாளி ஆகணும் என்கிற எண்ணமே இல்லேபோலிருக்கிறது. எப்பவும் வேலைக்காரனகவே இருக்கணும் என்று உன் ஆசையா? ஆனல், துள்ளுகிற மாடுதான் பொதி சுமக்கும். உனக்கும் சீக்கிரத்திலே, புத்தி வந்துவிடும். நாளைக்கு ராத்திரி, என்கூட, எங்க வீட்டிலே உனக்கு சாப்பாடு. ஓங்க வீட்டிலே சொல்லிவிட்டுவா" என்பார்.

கடையிலே சொல்லிக்காமல், தேர் பார்க்கப் போனதற்காக, முதலாளி வீட்டிலே சாப்பாடு! என்ன சொல்றீங்க! போங்க! முதலாளி என்றல் அப்படியல்லவா இருக்கணும்? எனக்கு வெட்கமா பிடுங்கித் தின்னும். பொறுப்பில்லாமல் திரிந்த எனக்கு, அவர் பொறுப்பு சொல்லிக் கொடுத்த வகையே, மிகவும் வேடிக்கையானது. கையில் பணம் இல்லாமல் திரிந்த எனக்கு, கையில் பணம் தங்கும் படியான வித்தையைச் சொல்லிக் கொடுத்தார். வேலைக்காரனைச் சேவித்த என்னை, முதலாளியாகும்படியாகச் செய்தார்.

எங்க முதலாளியை, நான் வாயார வாழ்த்துவதைப் போல, உங்களையும், உங்களுக்குக் கீழ் வேலை செய்யும் அத்தனை பேர்களும் வாழ்த்துகிற மாதிரி நடந்துகொள்ளவேண்டும்.

பணத்தின் தத்துவம்தான் என்ன? உழைப்புத்தானே பணம்? மூளை உழைத்தால் என்ன? கை உழைத்தால் என்ன? பழைய காலத்திலே, பெரியவங்க சொல்லிக் கொண்டது ரொம்பவும் உண்மை. "மெய் வருந்தக் கூலி தரும்" என்று சொன்னது, ஒரு நாளும் பொய் போகாதுங்க.

எல்லாரும் கூடி உழைத்த ஒரு இடத்தில், ஒருவன் மட்டும் ஏகபோக சுகத்துடன் வாழ்வது தவறு என்று எங்க பழைய முதலாளி அடிக்கடி சொல்லுவாரு. வேலைக்காரர்கள் முணுமுணுக்கப் படாது என்று சொல்லுவாரு.

தனியாக, நாம் ஒவ்வொருத்தரும் சம்பாதிக்க முடியாதுங்க. பத்துப் பேர் சேர்ந்தால்தான் சம்பாதிக்க முடியும். ஆகவே, பழகுகிற பொழுது, அண்ணன் தம்பி மாதிரி பழகுகிறோம். சம்பாத்தியத்தை பங்கு போடுகிறபொழுது, பங்காளி மாதிரி அடித்துக் கொள்ளலாமா?

நல்ல எண்ணம் இருக்கணும். தாராளசித்தம் இருக்கணும். நாக்கிலே, பொய் இருக்கப்படாதுங்க. லட்சுமி தானு வருவாளுங்க. எங்க முதலாளி மாதிரி நீங்களும் நடந்துகொண்டால், ஒரு தொல்லையும் ஏற்படாதுங்க. என்னமோ சொன்னேனுங்க!

உங்கள் அன்பன்
சின்ன முதலாளி

மோஷன் பிக்சர் ப்ரொட்யூஸர்ஸ்

கம்பைன், லிமிடெட்.

"ஸ்பிரிங் கார்டன்ஸ்", மவுண்ட் ரோடு,

சென்னை.

❋

தயாரிக்கப்பட்டுவரும் படங்கள் :

1. பக்த சேதா தமிழில்	மதராஸ் யுனைட்டெட் ஆர்ட்டிஸ்ட்ஸ் கார்ப்பொரேஷன் சென்னை.
2. சண்டிகா தெலுங்கில்	பவானி பிக்சர்ஸ், பெஜவாடா டைரெக்டர்: ஸ்ரீ ஆர். பிரகாஷ்
3. 'ஒரே ஹாஸ்யம்' தமிழில்	சூரியா ஸௌண்டு பிக்சர்ஸ்
4. சுகன்யா தமிழில்	ஷைனிங் ஸ்டார் ஸொஸைட்டி நடிகர்கள் நடிப்பது டைரெக்டர் ? ?
5. பால பக்தன் தமிழில்	ஷைனிங் ஸ்டார் ஸொஸைட்டி நடிகர்கள் நடிப்பது டைரெக்டர், தயாரிப்பாளர்: ஜோதிஷ் சந்திர ஸின்ஹா

பெற்றோர்களின் பள்ளி

(சஞ்சாரி)

ஆபீசிலிருந்து வந்தார் கணபதி. அவருக்கு, மனதில் சந்தோஷமே இல்லை. அகத்தின் அழகை முகத்திலே காண்பித்துக் கொண்டு, வீட்டுக்குள் நுழையும்பொழுது, "இந்த சங்கதியை, அவள் காதில் எப்படிப் போடுகிறது" என்று தனக்குள் சொல்லிக் கொண்டே கணபதி நுழைந்தார்.

கணபதிக்கு வயது நாற்பதிருக்கும். அவள் என்று கணபதி சொன்ன, அவருடைய மனைவிக்கு, முப்பதிலிருந்து முப்பத்தைந்துக்குள் இருக்கலாம். தாங்கள் எப்பொழுதும் இளமை என்று எண்ணிக் கொள்ளுவதில், பெண்கள் ஆண்களை தோற்கடித்து விடுவார்கள். ஆகவே, பெண்களின் வயதைக் குறைத்துச் சொல்லுவதில், ஒரு பொருத்தமிருக்கிறது. கணபதியின் சம்சாரத்துக்கு காமாட்சி என்று பெயர்.

கணபதி—காமாட்சி தம்பதிகளுக்கு இரண்டு குழந்தைகள் 'ஆசைக்கு ஒரு பெண்; ஆஸ்திக்கு ஒரு பிள்ளை'; இந்தப் பழமொழியை, நீங்கள் அடிக்கடி கேட்டிருப்பீர்கள். ஆனால், இதைப் பற்றி, யோசித்துப் பார்த்திருக்கமாட்டீர்கள். பெண்ணுக்கு சொத்து கிடையாது என்றும் மகன்பேரில் பெற்றோர்களுக்கு அன்பு கிடையாது என்றும் இதற்கு அர்த்தமா?

அது எப்படி வேண்டுமானாலும் போகட்டும். பழமொழியையும் பொதுமொழியையும் பற்றி, மண்டையைக் குழப்பிக்கொள்பவர்கள் அதைப்பற்றி வேதனைப்பட்டு, வியாக்கியானம் செய்யட்டும். பெண் குழந்தையின் பெயர் பார்வதி; ஆண் குழந்தைக்கு பரமசிவன் என்று

பெயர். இரண்டு குழந்தைகளுக்கும் ஒன்பதிலிருந்து பன்னிரண்டு வயது வரையிலும் இருக்கலாம். இருவரும் பள்ளிக்கூடத்தில் படிக்கிறார்கள்.

கணபதி ஆபீசிலிருந்து, வீட்டுக்கு வரும்பொழுது, முகவாட்டத்துடன் வந்த காரணமென்ன? எந்த சங்கதியை, அவர் தமது மனைவியின் காதில் போட அஞ்சுகிறார்? வெளியே, ஆண் பிள்ளைகள் எவ்வளவு படாடோபமாய்ப் பேசினாலும், வீட்டிலே, பெட்டிப் பாம்பைப்போலத்தான் அடங்கிக்கிடக்கிறார்கள். இது முக்காலே மூணு வீசம் முக்கால் வீசம் வீடுகளில் உண்மை.

கணபதி, தமது உடுப்புடனேயே, நாற்காலியில் சாய்ந்து விட்டார். குழந்தைகள் இரண்டும், அவருடைய பக்கத்தில் வந்து, ஒண்டிக் கொண்டன. இந்த சமயத்தில், பின் புறத்தில் மெதுவாக வந்து நாற்காலியின் பின்னே, நின்று கொண்டாள் காமாட்சி அம்மாள். தனது மனைவி, பின்புறமாக வந்தது கணபதிக்குத் தெரியாது.

கணபதி குழந்தைகளோடு பேசத் தொடங்கினார்.

கணபதி :—பரமசிவம்! உங்க பள்ளிக்கூடத்திலே, உனக்கு என்ன சொல்லிக் கொடுக்கிறா!

பரமசிவன் :—பாடம் சொல்லிக் கொடுக்கிறா, அப்பா!

கணபதி :—விளையாட்டுப் பண்ணாதே! நீ சொல்லு, பார்வதி!

பார்வதி :—எங்க பள்ளிக்கூடத்திலே பாடச் சொல்லித்தரா.

கணபதி :—சரிதான்! ஒரு பள்ளிக்கூடத்திலே, பாடம்; இன்னொரு பள்ளிக்கூடத்திலே பாட்டு! அதைத்தான் அவர் சொன்னார். அவர் சொன்னதிலே, ஒன்றும் தவறு இல்லை. அவர்......

காமாட்சிஅம்மாள் :—(குறுக்கிட்டு) அவர் என்ன சொன்னார்? அவர் எங்கிறவர் யாரு? யாரோ, எதையோ, சொல்லிப்பிட்டார் என்று, குழந்தைகளை "கிராசெல்லாம்" பண்றேளே?

கணபதி பயந்து போனார். தனதுமனைவியின் "கோடை இடி"யை அவர் எதிர்பார்க்காமல் இல்லை. ஆனால், திடீரென்று, பின்புறத்திலிருந்து, அவர் எதிர்பார்க்கவில்லை. ஆகவே, அவரைக் கொஞ்சம் தூக்கிவாரிப் போட்டது. அதிர்ச்சி தெளியும் வரையில், அவர்

மௌனமாக இருந்தார். ஆனால், "காதல் மனையாள்" மௌனமாக இருக்க, விடுவாளா?

காமாட்சி:—என்னமோ, பேந்தப்பேந்த முழிக்கிறீர்களே! ஆபீசிலிருந்து வருகிறப்போ, யார் உபதேசம் செய்துவிட்டா! அதை நினைத்துக்கொண்டு, கஷ்டப்படுகிறீர்கள்!

கணபதி:—இல்லே! அவர் சொன்னது எல்லாம் நிஜம் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

காமாட்சி அம்மாளுக்குக் கோபம். தன் அதிகாரத்துக்கு உட்பட்டவர் கணபதி. அந்த அதிகாரத்தைக் கெடுக்க, இன்னொருவர் எப்படி முளைக்கலாம் என்று அவளுக்கு ஆத்திரம். இன்னொருவர், கணபதியின் மனதில், ஆதிக்கம் செலுத்துவதை, காமாட்சியம்மாள் சாந்தமாகப் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா?

காமாட்சி:—எவன் என்ன சொன்னான்? ராத்தூக்க மில்லாமல் எதையாவது பற்றி நினைச்சு, ஏதாவது கோடிச்சு, எதையாவது, உங்க காதிலே ஒருத்தன் உளறினால், அதையெல்லாம் கேட்கிறதற்குத்தானா, இந்த ஜன்மம் எடுத்திருக்கிறீர்கள்!

கணபதி:—இல்லே! நீ சொல்லறத்தையே, கேட்டுண்டு இருக்கத் தான், இந்த ஜன்மம் எடுத்தேனா?

பார்வதி:—என்ன அம்மா! எப்பவும் அப்பாவை, கோவிச்சிக்கிறே! அவர் என்ன சொல்லவரார் என்று கேக்கப்படாதா?

பரமசிவன்:—அம்மா சொல்றதைத்தான், அப்பா கேக்கட்டுமே!

காமாட்சி:—நான் சொல்றதைக் கேட்கவேண்டாம்; ஊரார் சொல்றதைக் கேட்டு, கூத்தாடுங்கோ!

கணபதி:—எனக்கும், யோசிப்பதற்கு, ஆண்டவன் மூளை கொடுத்திருக்கிறான். நல்லதை யார் சொன்னாலும், எப்படிச் சொன்னாலும், கேக்கணும். சேற்றிலிருந்து வந்த செங்கழுநீர்ப்பூ, தள்ளுபடியா?

காமாட்சி:—எனக்கு, பாட்டு, இலக்கணம் எல்லாம் தெரியுமா? உங்களுக்குத்தான் எல்லாம் வக்கணையாகத் தெரியும். அவன் என்னசொன்னான்?

கணபதி:—அவன், இவன் என்று யாரையும் அவமரியாதையாகப் பேசப்படாது. ஒருவர் நேரே இருந்தால், அவர், கண்ணை

விட்டு மறைந்து போனால், அவன் என்று மரியாதை இல்லாமல் பேசும் வழக்கத்தை நிறுத்திவிடு.

காமாட்சி:—இது, அவன் உபதேசத்திலே ஒண்ணோ?

பார்வதி:—அம்மா! எதுக்காக, வேணும்னு, அப்பாவுக்கு கோபமூட்றே! அவர் சொல்லுகிறது சரித்தானே? மரியாதையாய்த்தான் பேசணும்!

பரமசிவன்:—பார்வதி! உன்னை, பார்வதிதேவி வாருங்கள் என்று சொல்லணும்போலிருக்கிறது.

இதற்குள் அவர்கள் இருந்த இடத்தில், அதிகமான பரபரப்பு உண்டாகி விட்டது. கணபதி, பெருமூச்சு விட்டார். "உண்மைதான்; அவர் சொன்னதிலே. அணுப்பிரமாணங்கூட பொய்யில்லை இவ்வளவு நாளும், நான் யோசிக்காமல் இருந்தது தவறு" என்று கணபதி முணுமுணுத்தார்.

பரமசிவன்:—அப்பா! என்னை, சினிமாவுக்கு எப்போ அப்பா கூப்பிட்டுண்டு போகப்போறீர்கள்? இப்படியே ஏச்சுண்டு வருகிறீர்களே!

கணபதி:—போன வாரம்தான் போனியே! வாரம் தவறாமல் போகணுமா? அதைத்தான் அவர் சொன்னர்.

காமாட்சி:—அவரைப் பத்தியே, ஜபம் பண்ணிண்டு இருக்கேளே! அவர்தான் என்ன சொன்னர்? நாங்களும் கேட்கிறோம், சொல்லுங்கள்.

பரமசிவன்:—குழந்தைகள் எல்லாம், வரவரக் கெட்டுபோய்க் கொண்டே வருகிறார்கள் என்று காரமாய்ப் பேசியிருப்பான்.

கணபதி:—அப்படிச் சொன்னல் அது தப்பா?

பரமசிவன்:—எல்லாரும் குழந்தையாயிருக்கச்சே, தப்பும் தவறுமாத்தான் எதையும் செய்திருப்பா! அப்புறம் தான் புத்தி வந்து சரியாக்காரியம் செய்வா, இதிலே என்ன அதிசயமிருக்கு!

காமாட்சி:—உன் வாய்க்கு சக்கரை போடணும்டா, அப்பா! அதிருக்கட்டும். உங்க, அவர் இருக்காரே, அவர், என்ன சொன்னர்?

கணபதி:—அவர், அவர், என்று கேலியாகப் பேசாதே. அவர் சொன்ன தெல்லாம், உண்மைதான். சொல்லுகிறேன் கேள்; கொஞ்சம் குடிக்கத்தண்ணீர் கொண்டுவா.

கணபதிக்கு, இப்பொழுது கிடைத்த நேரம் ஆறுதல்நேரம். அவர், தமது நினைப்புகளையெல்லாம் ஒன்று சேர்த்து, தனது மனைவியிடம், அவைகளைப் பக்குவமாகச் செல்லும் வழியைப் பற்றி யோசித்துக்கொண் டிருந்தார்.

காமாட்சி அம்மாள் ஜலம் கொண்டுவந்தாள். அதைக்குடித்து விட்டு, "இன்னொரு லோட்டா" என்றார். சொல்லவேண்டியதை யெல்லாம் சரிவர யோசித்து சொல்லவேண்டாமா? அதற்காகத்தான் இந்தக் காலதாமதம்! இரண்டாவது லோட்டாவும் வந்தது. அதையும் குடித்தார்.

கணபதி சொல்லத்துவக்கினர். "கேளுங்கள். அவர் என்று நீ, ரொம்பவும் இளப்பமாகப்பேசினயே, அவர் யார் தெரியுமா? அவர் ஒரு காந்தி சீடன். படாடோபமே அவரிடம் கிடையாது. அவரை, ரொம்ப நாளாக எனக்குத்தெரியும். க்ஷேம சமாசாரங்களைப் பேசிவிட்டு, பிரிந்து விடுவோம். இன்றைக்கு பட்டணத்திலிருந்து, திருவல்லிக்கேணிக்கு, கடற்கரை வழியாக நான் வந்து கொண்டிருந்த பொழுது, அவரைப்பார்த்தேன்....................

காமாட்சி:—அவர் குல்லாயை, உங்க தலையில் போட்டு, சரி பார்த்தார் போலிருக்கு.

கணபதி:—உனக்கு, இவ்வளவு வாய்ப் பதட்டம் கூடாது. நீயும் நானும் இப்போ பேசிக்கிறமே, இது ஒரு பள்ளிக்கூடம் என்றும் இதைப்பார்த்துத்தான் குழந்தைகள் பழகிக்கொள்ளும் என்றும் அவர் சொன்னது எவ்வளவு உண்மையும் பொருத்தமும் கொண்டது!

பார்வதி:—ஆமாம்! அப்பா.

கணபதி:—வீட்டிலே, பெற்றோர்கள் எப்படி நடந்துகொள்ளுகிறார்களோ, அதற்குத் தகுந்தால்போலத்தான், குழந்தைகளும் நடந்துகொள்ளும். நீ மரியாதை இல்லாமல் பேசினல், குழந்தைகளும் மரியாதை இல்லாமல் பேச ஆரம்பித்துவிடும். நாம் பொய் பேசினல், குழந்தைகளும் பொய் பேசும்.

காமாட்சி:—ஆமாம்! வேதாந்தமாயிருக்கு!

கணபதி :—குழந்தைகளுக்கு உடம்புக்கு வந்த சமயத்தில், நீ எத்தனை தடவை மருந்து சாப்பிட்டு, பத்தியம் இருந்திருக்கிறாய்? அது உனக்கு ஞாபகம் இல்லையோ? மாதா பிதாக்கள் செய்கிற பாபமெல்லாம் மக்கள் தலையிலே என்று அவர் சொன்ன வாக்கியம் அருமையான வாக்கியம்.

காமாட்சி :—ஆமாம்!

கணபதி :—நீ அலட்சியமாகப் பேசாதே! 'தொட்டில் பழக்கம்தான் சுடுகாடு மட்டும்'. நீ என்ன தொட்டில் ஆட்டும்போது சொல்லுகிறாயோ, அதை, லோக ரட்சகன் நாராயணன், வாத்தியாராக வந்தால் கூட, குழந்தை மனசிலிருந்து, எடுத்துவிட முடியாது. நீதான், நம்ம பார்வதிக்கும் பரமசிவனுக்கும் முதல் வாத்தியார்.

காமாட்சி பெருமூச்சு விடுகிறாள். தனது புருஷன், இந்தமாதிரி பேசினது, இதுதான் முதல் தடவை. ஆகவே, இன்னும் அவர் என்ன சொல்லப் போகிறார் என்பதை கவனித்துக் கொண்டேயிருந்தாள்.

கணபதி :—நீ முதல் வாத்தியார் ; நான் இரண்டாவது வாத்தியார். நாம் இரண்டு பேரும் பேசறது, நடக்கிறது, பழகுகிறது எல்லாம் சேர்ந்தது ஒரு பள்ளிக்கூடம். அதற்குப் பெற்றோர்களின் பள்ளி என்று பெயர். அதிலேதான், குழந்தைகள் முதலில் படித்து, எல்லாவற்றையும் தெரிந்துகொள்ளுகிறார்கள். ஆகவே, நாம் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இதுவும் இன்னும் எவ்வளவோ, அவர் சொன்னார். பிறகு சொல்லுகிறேன்.

பார்வதி :—இப்பவே, சொல்லுங்க, அப்பா!

கணபதி :—நாளைக்கு. நீ ஒரு பாட்டு பாடு இப்போ.

கதவு திறந்தது

(1) காலமெல்லாம் தவங்கிடந் தோம்!—மதுரைமீனாச்சி
உன்னைக்காண வென்று ஆவல்கொண்டோம் மதுரைமீனாச்சி!
ஆலயம் திறந்துவிட்டார் மதுரைமீனாச்சி!—எங்கள் ஆசைதீர
உன்னைக் கண்டோம் மதுரைமீனாச்சி!

(2) முந்தி பல ஆயிரங்கள் வருஷமுன்னேயே!—எங்கள்
முந்தையரில் நந்தன் கண்டான் மதுரைமீனாச்சி!
பிந்தி பல ஆயிரங்கள் காத்திருந்தோமே!—இந்த
புதுமைதனைக்காண இன்றே மதுரைமீனாச்சி!

(3) காந்தி யென்றும் கடவுளென்றும்!—மதுரைமீனாச்சி
நாங்கள் காதாலேதான் கேட்டிருந்தோம் மதுரைமீனாச்சி!
சாந்தியுடன் உன்னை இன்று நாங்கள் காணவே—இன்று
சண்டைபல போட்டாரவர் மதுரைமீனாச்சி!

(4) பட்டினிப் பல கிடந்தார் மதுரைமீனாச்சி—இந்த
வட்ட மெல்லாம் பேசினாங்க மதுரைமீனாச்சி!
சட்டென நிறுத்திவிட்டார் மதுரைமீனாச்சி—ஒரு
சட்டமொன்று கொண்டுவந்தார் மதுரைமீனாச்சி!

(5) கள்ளு ஒரு மொந்தை என்று—மதுரைமீனாச்சி
சொன்ன காலம் போச்சேயம்மா மதுரைமீனாச்சி!
பள்ளுபறை யாவருக்கும் மதுரைமீனாச்சி
நல்ல பாக்கியம் கிடைத்ததின்று மதுரைமீனாச்சி!

—அவிட்டம்

தம்—பிடி

(வே. ம.)

நமது பாரதபூமிக்கு மேற்கில் அரபிக்கடல். இந்த அரபிக்கடலின் மேற்குக் கரையில் ஏடன் என்ற துறைமுகம். அங்கு சுறுசுறுப்பான ஏழை அரபிக் குழந்தைகள் உண்டு. பிரயாணிகளிடம் பிச்சை கேட்கும் குழந்தைகள். பிரயாணிகள் ஒரு செல்விக் காசை சமுத்திரத்தில் போட்டுவிடுவார்கள். இந்தக் குழந்தைகள் சமுத்திரத்தில் மூழ்கி சமுத்திரத்தின் தரையை அடைந்து, அந்த செல்விக்காசைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு மேலே வருவார்கள்.

அந்தக் குழந்தைகள் தம்-பிடித்து அந்த செல்விக் காசை சம்பாதித்ததனுல், செல்விக் காசுக்கே தம்பிடி என்ற பெயர் வழங்கப்படலாயிற்று.

அரபிக்கடலின் மேற்குக் கரையிலிருந்து, கிழக்கு கரையிலிருக்கும் இந்தியாவிற்கு அந்தப் பேச்சு, பிரயாணம் செய்து வந்துவிட்டது. இங்கும் நமது ஏழ்மையில் நாம் ஒரு செல்விக்காசுக்கு தம் பிடிக்க வேண்டியிருப்பதால், செல்விக்காசுக்கு தம்பிடி என்ற பெயர், இங்கும் வழக்கத்தில் வந்து விட்டது.

தம்பிடி அல்பம்தான். ஆனுல் தம் அல்பம் அல்ல. தம் மஹத்தான விஷயம்.

கடினமான வேலைதான் வேலை. கடினமில்லாதது தானுகவே நடைபெறும் ஓர் விஷயம். கடினவேலை செய்வதற்கு தம் அவசியம்.

வேலை மிகவும் கடினம் என்ருல், அதற்குச் தகுந்த தம் வேண்டும்.

தம்—தந்தம் (பல்) இரண்டிற்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. பல்லை இறுகக் கடித்துக் கொண்டால், தம் பெருகும், இறுகும்.

பல்லைப்பற்றிப் பேசும்போது—'அப்பாடா, எல்லோருக்கும் வாயில் பல்லென்ருல், இவனுக்கு வயிற்றில் பல் அப்பா!'—என்ற சொல் ஞாபகத்திற்கு வருகிறது. இதன் அர்த்தம் என்ன? இவன் வெளித் தோற்றத்திற்கு உல்லாசமாக இருந்தபோதிலும் உள்ளத்தில் ஒரே திடத்தில், ஒரே கொள்கையை, ஒரே அலுவலைப் பிடிவாதமாக அனுசரித்து வருகிருன் என்று அர்த்தம். அதாவது, இவனது மனதில் ஒரு விஷயத்தில் தம் திரண்டு வருகிறது—என்றுதான் அர்த்தம்.

இதிலிருந்து ஏற்படுவது என்ன? தம்—என்ருல் மூச்சுப் பிடிப்பது மாத்திரம் அல்ல. மனக்கண் என்பது போல, மன-தம் என்றும் ஒன்று இருக்கிறது. அந்த மனதம்மைத் திரட்ட வேண்டும்.

இந்த மனதம்மிற்குப் பெரிய உதாரணம்—தம்பதி வாழ்க்கை என்பது. பதி, பத்தினியில் அடக்கம்—பத்தினி, பதியில் அடக்கம்—இந்த தம்முடன் குடும்ப வாழ்க்கை நடத்தப்படவேண்டும். இது போன்ற தம்மிற்கு, நாரத-பக்தி-சூத்திரத்தில், அருமையாகப் பொருந்தும் ஒரு வசனம் காண்கிறது. அது அவிச்சின்னனுராகம் என்பது. அனுராகம், என்றால் அன்பு. அவிச்சின்னம் என்றால், அறுபடாதது. மேற்படி வசனத்திற்கு, அறுபடாத அன்பு என்று அர்த்தம்.

ஹரிச்சந்திரன் பெரிய தம்-காரர். சத்தியத்தில் அவருக்கு அறுபடாத அன்பு. பீஷ்மர் பெரிய தம் - காரர். பிரமசரியத்தில் அவருக்கு அறுபடாத அன்பு. கர்ணன் பெரிய தம் - காரர். தானத்தில் அவருக்கு அறுபடாத அன்பு. காந்திஜி பெரிய தம் - காரர். சத்தியத்திலும் அஹிம்சையிலும் அவருக்கு அறுபடாத அன்பு.

அறுபடாதது - என்பதில் தான் விசேஷம் இருக்கிறது. அறுபடாததாக இருந்தால்தான் அதற்கு தம் என்று சொல்ல முடியும். தம்மைக் காப்பாற்றுவது இலேசல்ல.

அதற்கு சாதனங்களுண்டு. நமது தமிழ்நாட்டு நாயனர்கள் சிவபக்தியில் தங்களுடைய தம்மை வளர்த்தார்கள். அவர்கள் முக்கியமாக உபயோகித்த சாதனம் விபூதி என்ற திருநீறு. இந்த நீறைப்பற்றி தோத்திரம் செய்து, அவர்கள் அநேகம் பாடல்களைப் பாடி யிருக்கிறார்கள். அவைகளால், மற்றும் இலட்சக் கணக்கானவர்களைப்போல் நானும் பன்முறை ஆனந்தத்தில் மூழ்கியதுண்டு. ஆயினும் நான் வெகு காலம் திருநீறின் சக்தியை நேரில் அறிந்துகொண்ட தில்லை.

காலம் சென்ற...... அவர்களின் பிரசண்டமான கதாப்பிரசங்கங்களை நான் கேட்டதுண்டு. அவர் கையில் ஒரு விபூதிப் பையுடன் தான் பிரசங்க மேடையில் வந்து உட்காருவார். அது நிறைய, விபூதி போட்டிருக்கும். கதை முடிவதற்குள்ளாக பை காலியாகி விடும். பிரசங்கம் சளைக்க ஆரம்பிக்கும் பொழுது—அதாவது ஒவ்வொரு பதினைந்து நிமிஷத்திற்கும்—கையை விபூதிப் பைக்குள் நுழைத்து நிரம்ப விபூதியை எடுத்து, 3, 4 தடவை வெகு வேகமாக நெற்றியில் பூசிக்கொள்ளுவார். உடனே பிரசங்கம் ஓங்கி விடும். இப்படி பல பிரசங்கங்கள் நடந்தன. இதிலிருந்து திருநீற்றின் பிரபாவத்தை நிதர்சனமாகக் கண்டறிந்தேன். மன-தம்மிற்கு அது ஒரு பெரிய ஸாதனம்.

இவ்விதமாகவே—இந்தக் காலத்தில் பொருளாதார பக்தியும் தர்க்க குணமும் பஹிஷ்கார பக்தியும் அதிகமானதால்—அந்த மனப்பான்மைக் கேற்றவாறு—சுயராஜ்ய தம்மிற்கு, ஒரு சாதனத்தை காந்திஜி ஸ்தாபித்திருக்கிறார். அதுதான் கை ராட்டினம். இந்த சக்கிரம் சுழலச் சுழல தேசத்திலும் மஹாத்மா காந்தியின் மனதிலும், சுயராஜ்ய-தம் பெருகும், இறுகும்.

மஹாத்மாவின் சத்தியமும் அஹிம்சையும் ஒரு நாளும் குன்றாது. அது அவருடைய சொந்த தர்மம். அதற்கு முரண்படாத

இயக்கத்தில்தான் அவர் சேர்ந்து கொள்ள முடியும். சுயராஜ்ய இயக்கம் அதற்கு முரண்படுமா என்பதுதான் இப்போதைய பிரச்னை.

சமீபத்தில் வந்த செய்தி என்ன? காந்திஜி எல்லைப் புறத்திற்குச் செல்லும்போது பம்பாயில் ஒரு கிழவி, அவருக்குத் தேங்காய் கொடுத்து, திலகமிட்டு, ஆசிர்வதித்து வழியனுப்பினள். அப்போது, "ஏன், இந்த வயதில் நீ அலையவேண்டும்? ஓரிடத்திலேயே உட்கார்ந்து ஓய்வெடுத்துக்கொள்" என்றாள் கிழவி. இதற்கு காந்திஜி, "அதையும் யோசித்துக் கொண்டுதான் இருக்கிறேன்" என்றார்.

கைராட்டினம் நன்றாகச் சுழன்றால் அவர் விலகமாட்டார். இல்லாவிட்டால் அவர் சுயராஜ்ய இயக்கத்திலிருந்து விலகியே தீருவார்.

சத்தியத்திலேயே எல்லையற்ற சாமர்த்தியம் அடங்கியிருக்கிறது.

ஆனால் வெறும் சாமர்த்தியத்தைக்கொண்டாடும் பூசாரிகளுக்கு சத்திய-தம் கிடையாது. சாமர்த்திய-தம்தான் அவர்களுக்கு உண்டு. காந்திஜியின் பிரபாவத்தால், சத்தியத்தின் சாமர்த்தியம் பிரகாசிக்கிறதே என்று அவர்கள் இயக்கத்தில் நுழைந்து கொண்டனர். ஆயினும், அவர்கள் சாமர்த்தியத்திலேயே ஈடுபட்டதனால், எதிரிகள் தைரியம் கொண்டார்கள்.

"இந்த சாமர்த்தியப் பிரயோகத்திற்கு பதில்—சாமர்த்தியம் நம்மிடம் இல்லையா?" இந்த காங்கிரஸ்காரருடைய சாமர்த்தியம் சத்தியத்திற்கு உள்ளடங்கி விளையாடவேண்டும். "நமக்கு சர்வ சுதந்திரம் இருக்கிறது. எவ்வளவோ பொய்களையும் சேர்த்துக் கொண்டு, நமது சாமர்த்தியத்தை நாம் பரிமாறலாம்," என்று தைரியம் கொண்டு, எதிரிகள் பொது ஜனங்களுடைய சுய-ராஜ்ய-தம்மை சின்ன பின்னமாக்கியிருக்கிறார்கள்.

சத்தியத்தி லிருந்து ஒரு மயிரிழைகூடப் பிறழாத நமது சி. ஆர். அவர்களின் பிரசங்கங்களிலேயும், எதிரிகள் முகருவது சத்தியத்தை யல்ல, சாமார்த்தியத்தைத்தான். இவருடைய சத்தியத்தை எதிரிகள் முகர்ந்துவிட்டால், அவர்கள் எதிர்க்கமாட்டார்கள்; அவர்கள் ஊமையாகி விடுவார்கள்.

ஆனல் சட்டசபை வாதங்களிளெல்லாம் இவருடைய சாமர்த்தியம் இடைவிடாது பிரகாசித்துக் கொண்டே இருந்தது. சத்தியம் அப்படியே குன்றாது, நழுவாது இருந்தபோதிலும், அந்த சத்தியம் மறைந்துபோகும்படி சாமர்த்தியம் பிரகாசித்தது.

தீவிர தேசியப் பத்திரிகைகளும் பிரசங்கிகளும் ஸ்ரீ சி. ஆர். அவர்களின் சாமர்த்தியத்தையே வற்புறுத்தி வந்தார்கள்.

சட்டசபையில் சூரியன்போல் விளங்கிய தெய்வீகமான ஒற்றுமையும், அந்த ஒற்றுமையின் சத்தியமும் இந்த பூசாரிகளுடைய கண்களுக்குப் புலப்படவில்லை.

இந்தத் தேஜோமயமான ஒற்றுமைக்கு; காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களின் சத்தியம்தான் காரணம் என்பதை, இந்தப் பூசாரிகள் உணராமல் — தங்களுடைய

சாமர்த்தியமும்; ஸ்ரீ சி. ஆர். அவர்களின் சாமர்த்தியமும் தான் காரணம், என்று வற்புறுத்தி வந்தார்கள்.

தினசரி நால்நூற்காதவர்கள் காங்கிரசின் சார்பாக பிரசங்கம் செய்யா்மலிருந்தால், சாமர்த்தியத்தின் கொட்டம் சற்று குலேந்து எதிரிகளும் பொது ஜனங்களும் சத்தியத்தை உணருவதற்கு கொஞ்சம் இடம் கிடைக்கும்.

காங்கிரசில் சாமர்த்திய-தம் ஒழிய வேண்டும், சத்திய-தம் திரளவேண்டும். அது கைராட்டினம் சுழன்றுல்தான் முடியும். அதன் பின்புதான் சுயராஜ்ய-தம் திரும்பவும் திரளும்.

விளம்பர விகிதம்

உட்பக்கங்கள்

	1 பக்கம்	½ பக்கம்	¼ பக்கம்
	ரூ.	ரூ.	ரூ.
ஒரு தடவை விளம்பரம்	30	17/8	10
13 ,, தொடர்ந்த ,,	25	14	8
26 ,, தொடர்ந்த ,,	22/8	13	7
52 ,, தொடர்ந்த ,,	20	11	6

ராப்பர் பக்கங்கள்

உள் ராப்பர் விளம்பரத்திற்கு 25% அதிகம்.
கடைசி பக்கம் ,, 50% அதிகம்.

இரண்டு கலரில் விளம்பரம் செய்ய விசேஷ கட்டணம்.
முன்பக்கத்தில் விளம்பரம் செய்யப்படமாட்டாது.

பாரத தேவி
31, பிராட்வே, சென்னை.

கர்னாடக கந்தன்

பொன்னி எழுதியது.

சோமு. கந்தன். வேலப்பன் முதலிய பையன்கள். நாகப்பழம் பறிக்கச் செல்லுகிறார்கள்.

சோமு மரத்திலேறிக்கொண்டு கிளைகளை உலுக்குகிறான்: உதிர்ந்து நாலா பக்கங்களிலும் விழும் பழங்களை கீழே இருப்பவர்கள் ஒன்று சேர்த்துக் கொண்டும் தின்று கொண்டும் இருக்கிறார்கள்.

கந்தன், மற்றவர்களைக் காட்டிலும் அதிகமான பழங்களைச் சாப்பிடவேண்டும் என்ற பேராசையால் அவசர அவசரமாக கொட்டைகளையும் சேர்த்து விழுங்கிக் கொண்டே வருகிறான்.

கந்தனை, விளையாட்டுச் செய்து இம்சைப்படுத்த மற்ற பையன்கள் சங்கேதம் செய்கின்றனர்.

வேலப்பன் :—ஏ ! சோமு ! கந்தனைப் பார். அப்படியே முழுசு முழுசாக பழங்களைத் தின்று கொட்டைகளையும் விழுங்கி விட்டான்.

சோமு (மரத்திலிருந்து கொண்டே) :—கந்தா ! நீ தொலைஞ்சே ! மரத்திலிருந்து கீழே இறங்கி வந்து சொல்றேன்.

கந்தன் :—ஏ ! சோமு ! என்னடா ! அங்கே யிருந்தபடியே சொல்லேன் !

(சோமு மரத்திலிருந்து கீழே இறங்கி வந்து " அசடே ! கந்தா ! யாரையும் கேட்டுக் கேள்வியில்லாமல், இப்படிச் காரியம் செய்யலாமா ? குடிகெட்டுப் போச்சே !" என்றான்.)

கந்தன் (கண்ணைப் பிசைந்து கொண்டு)—என்னடா ?

சோமு :—கொட்டையையும் சேர்த்து விழுங்கி விட்டாயே! வயிற்றிலே மரம் முளைத்துவிடுமே! என்ன செய்யறது! மரம் முளைத்து, வாய் வழியாக வருமே! என்னடா, அசடுமாதிரி, இப்படி காரியம் செய்துட்டே !

கந்தன் :—என்னடா இப்போ செய்கிறது !

சோமு :—நாக்கை வெளியே இழுத்துக் கொண்டு, வாந்தி எடு.

கந்தன் :—கொட்டை யெல்லாம் வந்துடுமா ?

சோமு :—வந்துவிடும். அப்படி எல்லாம் வராவிட்டால், வீட்டுக்குப் போய், அம்மாவுக்கு முன்னால், சுவரிலே சாய்ந்துகொண்டு தலை கிழாய் நில்.

[கந்தன் வாந்தி எடுக்கிறான். நாக்கிலே வலி எடுத்ததுதான் மிச்சம். பறக்கப் பறக்க வீட்டுக்கு ஓடி, கூடத்தில் கறி நறுக்கிக் கொண்டிருந்த அவனது தாயின் முன்பாக, சுவரோடு ஒட்டிக்கொண்டு தலை கிழாக நிற்கிறான். தாய் திடுக்கிட்டுப் போகிறாள்.]

தாய் :—என்னடா ! கந்தா ! உனக்குப் பைத்தியமா ?

(கந்தன் வாய் திறக்கவில்லை.

தாய் கந்தனைக் கீழே பிடித்து இழுத்து, சங்கதியை விசாரிப்பதற்காக "உனக்கு என்ன இப்போது வந்திருக்கு" என்று கேட்கிறாள்.)

கந்தன் :—நாகப்பழக் கொட்டைகள் வெளியே வரவேண்டாமா ? சோமு தானே தலைகிழாக நிற்கச் சொன்னான் ?

தாய் :—அல்பாயுசு சோமு பண்ணிவிட்ட விஷமமா இது ? சரி ! இருக்கட்டும். நீ வாணிய சிங்காரம் வீட்டுக்குப் போய் இரண்டு சேர் நல்லெண்ணெய் வாங்கிக் கொண்டுவா. வருகிற வழியிலே, வாய்க்காலிலே, எண்ணெயைக் கொட்டி விடாதே.

கந்தன் :—காசுக்கு ரெண்டு மிட்டாய்
கந்தனுக்கு மூணு மிட்டாய்
சோமுக்கு இல்லை யப்பா
சொன்னேனடா இப்பொழுதே

(தில்லாத் தான் . . . .)

என்று உல்லாசமாகப் பாடிக்கொண்டே போய், எண்ணெயை வாங்கிக் கொண்டு வந்து, வாய்க்காலின் கரையில் வைத்துவிட்டு, தண்ணீரை அள்ளி அள்ளிக் குடிக்கிறான்.

காற்றின் வேகத்தால், எண்ணெய்ப் பாத்திரம் தலைகீழாகக் கவிழ்ந்து போகிறது. கந்தன் தண்ணீரின்மேல், எண்ணெய் மிதப் பதைக்கண்டு, சந்தோஷத்தோடு, மிதக்கும் எண்ணெயை பாத்திரத் தில் மொண்டுகொண்டு, வீட்டுக்குத் திரும்புகிறான்.

எண்ணெய் வாய்க்காலில் விழுந்தும் நஷ்டமில்லாமல், அதைத் திரட்டிக்கொண்டு வந்து விட்டதற்காக, கந்தன் பாடுகிறான்.

சாலையிலே ரண்டு மரம்
சர்க்காரு வைத்த மரம்
ஓங்கி வளர்ந்த மரம்
ஒனக்கேத்த தூக்கு மரம்

(சோமு ! ஒனக்கேத்த தூக்குமரம்)

(வீட்டுக்கு வந்ததும், தாயார் எண்ணெய்ப் பாத்திரத்தை வாங்கிக் கொண்டு சிறிது நேரத்துக்கெல்லாம், அடுப்பில் எண்ணெயை வைக்கிருள். தண்ணீர் "சொடசொட" வென்று சத்தம் கேட்கிறது. எண்ணெய் கொஞ்சங்கூட இல்லே.)

தாய் :—கந்தா! உன்னைப் பெற்ற வயிற்றில் பிரண்டை யையும் பெருங் காயத்தையும் வைத்துக் கட்டிக்கலாம்.

(கந்தன் ஓடிக்கொண்டு வந்து, "அம்மா! சோமுவைப் பார், அம்மா! தண்ணியிலே எண்ணெய் கொட்டிப் போனல், அதை திரட்டி எடுக் முடியாது இன்னு சோமு சொல்ருன். பார், அம்மா! நான் திரட்டி எடுத்துக் கொண்டு வரலேயா அம்மா!" என்று ரொம்பவும் சந்தோஷமாகச் சொல்லுகிருன்.)

* * *

தாய் :—அப்படியாப்பா! சோமு கிடக்கிருன் போ! அவனுக்கு என்ன தெரியும்?

சோமு :—(ஒளிந்து கொண்டு) கந்தன் பிரகஸ்பதி, கந்தனம்மா சரஸ்வதி.

(சோமு ஓட்டமெடுக்கிருன்)

(தெருவிலே பையன்களின் விளையாட்டு; கந்தனே சோமு விளையாட்டில் சேர்த்துக் கொள்ளமாட்டேன் என்கிருன்.)

கந்தன் :—சோமு! என்னே சேர்த்துக்கோடா!

சோமு :—முட்டிக்கால் தோப்பிக்கரணம், சுவாமியைப்பார்த்து முப்பது போடணும் நீ.

கந்தன் :—ஏய், பத்து போடரேண்டா!

சோமு :—ஏன் சோமுக்கேத்த தூக்குமரம் என்று பாடிக்கொண்டு வந்தே அன்னிக்கு.

கந்தன் :—ஏய்! நான் வாய்க்குள்ளே தானே பாடிக்கொண்டு வந்தேன்!

சோமு :—அது கிடக்கட்டும். காதைப் பிடித்துக்கொண்டு, முப்பது போட்டாலொழிய சேத்துக் கொள்ள முடியாது.

கந்தன் :—எண்ணிக்கோ.

சோமு :—பயங்களா! பள்ளிக்கூடத்துக்கு போவோம்.

* * *

(பள்ளிக்கூடத்தில் வாத்தியார் பையன்களே கேள்விகேட்கிருர்.)

வாத்தியார் :—பையன்களா! சந்திரன் பெரிசா! சூரியன் பெரிசா!

சோமு: —சூரியன்.

வேலப்பன் :—இரண்டும் பெரிசு, ஸார்.

கந்தன் :—சந்திரன்தான், ஸார் பெரிசு.

சோமு :—கந்தன் அசடு, ஸார்.

கந்தன் :—நானு அசடு, ஸார்? ராத்திரியிலே வெளிச்சம் கொடுக்கிற சந்திரன் பெரிசா? பட்டப்பகலிலே வெளிச்சம் கொடுக்கிற சூரியன் பெரிசா? சோமுதான் அசடு, ஸார்.
(வாத்தியார் சிரிக்கிறார் ; சோமுவும் சிரிக்கிறான்.)

வாத்தியார் :—ஏண்டா! சோமு! கந்தன் சொல்வது சரித்தானே!

சோமு :—கந்தன் அசடு ஸார். சூரியனுடைய வெளிச்சத்தினாலே தான் பகல், ஸார்; சூரியன் இல்லாவிட்டால், எப்போதும் இருட்டாகவே இருக்கும், ஸார்.

வேலப்பன் :—ஸார், சூரியன்தான் பெரிசு; சந்திரன் தேஞ்சு தேஞ்சு போறதே. சூரியன் தேயறதேயில்லே, ஸார்.

சோமு :—ஸார்! கந்தனுக்கு கலியாணமாம், ஸார்.

வாத்தியார் :—ஏண்டா, கந்தா! உனக்கு கலியாணம்தான் பாக்கிடா!

கந்தன் :—எங்க தாத்தா ஆத்து ஊரிலேருந்து வந்து, என்னைக் கேட்டு கிறாளாம், ஸார், அம்மா சொன்னா, ஸார்.

* * *

(கந்தன் வீடு)

தாய் :—ஏ! கந்தா! உன்னை மாப்பிள்ளைபார்க்க வரப்போராள்! அசட்டுப் பிசட்டு என்று முழிக்காதே; எப்போ பார்த்தாலும் கையும் புஸ்தகமுமா யிருக்கணும்.

தகப்பன் :—ஒன்றும் அசடாய்ப்பேசாதே.

கந்தன் :—நான் அசடா, அசட்டுத்தனமா பேசறதுக்கு!

தாய் :—கந்தா! அடுத்தாத்துக்குப் போய் கொஞ்சம் முந்திரிப் பருப்பு இருந்தால் வாங்கிண்டுவா.

(கந்தன் இரண்டு கையிலும் புஸ்தகத்தை வைத்துக்கொண்டு விழிக்கிறான்.)

தாய் :—என்னடா முழிக்கிறே!

கந்தன் :—இரண்டு கையிலும் புஸ்தகம் இருக்கே, அம்மா! வாயிலே முந்திரிப்பருப்பு வாங்கிண்டு வரட்டுமா!

தாய் :—அசடே! நான் வயிறுகிறந்தவேளை! என்னைச்சொல்லி என்ன பண்ண!

* * *

(கலியாணமாகி, கந்தன் மாமனார் வீட்டுக்குப் போவதற்குமுன்.)

தாய் :—அந்த ஊரிலே போயும், அசடாய் விளங்காதே! கண் பார்த்தது கை செய்யணும், மாமனார் ஆத்தில் கட்டின பசுப்

போலே இருக்கணும், ஆம்படையாளை வெறிச்சிப் பார்க்கப் படாது. அந்த ஊரிலே பெரியவாளைப்போல நடக்கணும். ஊரெல்லாம் பேசிக்கிருப்பலே காரியம் செய்யணும். தெரிஞ்சுதா?

கந்தன் :—சரியம்மா! வண்ணான் இஸ்திரி வேஷ்டி கட்டிக்கலாமா, அம்மா?

தாய் :—எந்த சனியனை வேண்டுமானாலும் போட்டுக்கொள்.

* * *

(மாமனார் ஊர்—குளக்கரையில் மரம்—அங்கே, மரத்தடியில், கந்தன் தாவித் தாவிக்கொண்டே யிருக்கிறான்)

மைத்துனன் :—என்ன மாப்பிள்ளை; என்ன செய்கிறீர்!

கந்தன் :—கிளையைப் பிடிக்கப் பார்க்கிறேன்.

மைத்துனன் :—கிளை கையில் அகப்படுமா?

கந்தன் :—கண்பார்த்தது கை செய்யணும் என்று அம்மா சொன்னாளே!

மைத்துனன் :—அது அம்மா ஆத்திலே; ஆம்படையாள் வீட்டிலே இல்லே.

(ஊரில் பெரியவரை கந்தன் ப்பார்க்கிறான்; அவர் நொண்டி. அவரை நமஸ்காரம் செய்துவிட்டு "அம்மா! உங்களைப்போல் நடக்கணும்ன்னு!" என்றான். "மகாராஜனாயிரு" என்று கிழவர் சொன்னார். உடனே, அவரைப்போலவே, நொண்டிக்கொண்டு வந்தான் கந்தன்.)

மைத்துனன் :—காலிலே என்ன? மாப்பிள்ளை? ஏன் நொண்டுகிறீர்கள்

கந்தன் :—நான் நொண்டவில்லையே! ஊர்ப் பெரியவாளைப்போலே நடக்கிறேன். அப்படி, பெரியவா மாதிரி நடக்கணும்ன்னு அம்மா சொன்னா.

மைத்துனன் :—அது அம்மா ஊரிலே; ஆம்படையாள் ஊரிலே இல்லே.

கந்தன் :—அம்மாவைவிட ஆம்படையாள் பெரியவளோ?

மைத்துனன் :—அம்மாவைவிட ஆம்படையாள் பெரியவள்; ஆம்படையாளைவிட மச்சுனன் பெரியவன். பொண்டாட்டி ஆசைக்கு மைத்துனன் காலேப்பிடித்துக்கணும், மாப்பிள்ளை!

கந்தன் :—யார் காலே!

மைத்துனன் :—என் காலே.

கந்தன் :—அம்மா சொல்லல்லியே!

மைத்துனன் :—அம்மா பேச்சு அந்த ஊரிலே; அது இங்கே செல்லாது.

கந்தன் :—அப்படியா!

(எல்லோரும் ஊரிலே கந்தனைத் தேடுகிறார்கள். மாப்பிள்ளை அகப்படவில்லை. கடைசியாக கோபுரத்தின் பேரிலே உட்கார்ந்துகொண்டிருக்கிறான். எல்லோரும் கீழேயிருந்துகொண்டு கத்துகிறார்கள். ஆற அமர, கந்தன் கீழே இறங்கி வருகிறான்.)

மைத்துனன் :—என்ன மாப்பிள்ளை, கோபுர வஸ்துவாக ஆகிவிட்டீரே!

கந்தன் :—உயர்ந்த இடத்திலே இருந்தால்தான் மதிப்பு என்று அம்மா சொன்னாளே!

மைத்துனன் :—அம்மா பேச்சு அந்த ஊர்ப்பேச்சு, மாப்பிளே!

கந்தன் :—இந்த ஊரிலே!

மைத்துனன் :—ஆம்படையாள் பேச்சு!

(கடிதம் ஒன்று வருகிறது; வீட்டில் ஒருவரும் இல்லை. கடிதத்தைப் படிப்பதற்கு, அதை கந்தனிடம் அவன் அகமுடையாள் கொண்டுவருகிறாள்.)

கந்தன் :—(அந்தப்புறம் திரும்பிக்கொண்டு) "உன்னைப்பார்க்கப் படாது என்று அம்மா சொன்னாள்."

மனைவி :—என்னைப்பார்க்க வேண்டாம்; அம்மாவையே பார்த்துண்டு இருங்கோ! ஆத்திலே ஒருத்தரும் இல்லே. அண்ணாவுமில்லே. இந்தக் கடிதாசியைப் படிச்சு சொல்லுங்க.

(கந்தன், கடிதத்தைத் திருப்பித்திருப்பிப் பார்த்து, சிறிது நேரத்துக்கெல்லாம், தேம்பித்தேம்பி அழுகிறான். மாமியார், மனைவி இருவரும் அழுகிறார்கள்.)

மாமியார் :—உங்க மாமனார் கடிதாசு ஆச்சே! அவாளுக்கென்ன! மாப்பிள்ளை! சொல்லுங்கோ!

(இவர்கள் பலமாக அழும் குரல்களைக்கேட்டு அக்கம்பக்கத்துக்காரர்கள் கூட்டமாக வருகிறார்கள்.)

ஒருவர் :—என்ன மாப்பிள்ளே! ஏன் அழறீர்கள்! மாமனாருக்கு உடம்பா!

கந்தன் :—இல்லை. . . அவாளுக்கு ஒண்ணுமில்லை.

ஒருவர் :—பின்னே என்ன?

கந்தன் :—அச்சுப்புஸ்தகத்திலே பார்த்த எழுத்தெல்லாம், கடுதாசியிலே இளைச்சுப் போச்சென்று வருத்தமாயிருக்கு.

(கந்தன் அழுகிறான். எல்லோரும் சிரிக்கிறார்கள்.)

மைத்துனன் :—என்ன மாப்பிள்ளை! உங்க அம்மா சொல்லி அழுகிறீரோ, சொந்த அழுகையோ!

ஒருவர் :—மாப்பிள்ளை ரொம்ப நல்வர்; எழுத்து இளைச்சுப்போச்சென்று அழுகிறார்.

மைத்துனன் : மாப்பிள்ளை! ஒங்க அம்மா சொல்லி, இளைச்சுப் போச்சோ, என்னமோ!

(எல்லோரும் சிரிக்கிறார்கள்.)

"கடன் தீர்ந்த கதை"

(கோத்தமங்கலம் சுப்பு) 18690

[மாமரப்பட்டிக் கடைவீதி. அதில் ஒரு கிழக்குப் பார்த்த கட்டிடத்துக்குமுன் உயர்ந்த திண்ணை. "தெ. ச. சு. காசுக்கடை" என்ற பலகை முன்னால் தொங்குகிறது. கீழே கோரைப்பாய் விரித்திருக்கிறது. அதன் மேல் மரத்தால் ஆகிய கைப்பெட்டி ஒன்று. ஒரு அடி கனத்தில் தோல் தலையணை ஒன்று சுவரில் சாத்தி யிருக்கிறது.

தலையணைக்கும், பெட்டிக்கும் நடுவில் சுந்தரப் பத்தர் உட்கார்ந்திருக்கிறார்.

அருப்புக்கோட்டைத் துண்டு கட்டி, மேலே யெல்லாம் விபூதி பூசி, நெற்றியில் கீர் சந்தனமும், புருவமத்தியில் ஒரு சந்தனப் பொட்டும் வைத்திருக்கிறார். அவை தங்கம் நிறுக்கும் திராசுப் பெட்டியை ஞாபகப் படுத்துகின்றன. வைர மோதிரங்கள் மின்னுகின்றன.

(எதிரில் சிறைசென்ற தேசபக்தர் ஸ்ரீஜத் பாலு உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண் டிருக்கிறார்.)

சு. ப. :—நீங்கள்ளாம் முயற்சி பண்ணி ஒரு வழியாகக் காங்கிரஸ் அதிகாரம் கொண்டு வந்து விட்டீர்கள். அந்த வரையிலே அய்யராலே நம்ப ஊருக்கும் அதுலே கொஞ்சம் பங்கு இருக்கு. (சிரிக்கிறார்)

பாலு :—(சிரித்துக்கொண்டே) வோட்டுப் போட்டிருந்தால்தான் பங்கு என்பதில்லை; உங்களுக்கும் கூடப் பங்கு உண்டு.

சு. ப. :—அது சரிதான், சரடுவிடாதீர் ஐயரே! பொய்யா சொல்லச் சொல்கிறீர்? நான் காந்திக் கக்ஷிக்கும் போடல்லெ, மற்ற கக்ஷிக்கும் போடல்லெ. நமக்கென்னத்துக்கு இதெல்லாம்? "சொக்கனுக்குச் சட்டியளவு," நாமுண்டு கடையுண்டு, சரிதானே?

பாலு :—அப்படியில்லை ஐயா, உங்களைப் போலுள்ளவர்களெல்லாம் கொஞ்சம் அரசியல் விஷயம் தெரிஞ்சிக் கிண்டா.....

சு. ப. :—விஷயமாவது தெரியவாவது. வியாபாரத்தைத் தெரிஞ்சிக் கிட்டாலாவது நன்மையுண்டு. (ஆவலுடன்) சரி, ஐயரே! எல்லாரும் சொல்லுகிறார்களே அது......யுத்தம் வருமா?

பாலு. :—யார் கண்டது? ஏற்கனவே கலங்கின குட்டை, இப்பொ மட்டை விழுந்த மணியமாக இருக்கு. கலகம் வந்தாலும் கலக்கம் தெளிய நாள் ஆகும்.

(அடிவயிற்றிலிருந்து ஒரு பெருமூச்சும் ஒரு புன்முறுவலும்.)

சு.ப. :—இல்லெ, போன யுத்தத்திலேயே நான் கொஞ்சம் கவனிக்காமலிருக்கப் போக பக்கத்துக் கடைக்காரன் பணம் தட்டிப்பிட்டான். அப்புறம் யோசிச்சி, யோசிச்சி இப்ப ஒரு வருசமா கொஞ்சம் பவுன் பிடிச்சிருக்கேன். நம்ம அதிட்டம் வராப்புலே இருந்த யுத்தம் ஒண்ணுமில்லாமெப் போச்சு. 24-8-0 விலே வந்துச்சே பவுன். அம்புட்டுத்தானு இன்னும் 30 ரூபா வரையிலே வருமா? என்று கேட்கிறேன்.

பாலு. :—தெரியல்லே, அரிசி விலேகூட, இப்பத்தான் ரெண்டு வருஷமாய் எனக்குத் தெரியும்.

(சிரிக்கிறார், உடனே முகம் வர்டுகிறது. சிறையிலிருந்த ஞாபகமோ என்னவோ!)

(அந்த வழியாக வந்த முத்தையா சேர்வை கடைக்குள் வருகிறான்.)

மு. சே. :—சாமியா? கும்பிடரேன், வாங்க. வோட்டும் போது பார்த்தது தான். அப்புறம் இங்கிட்டுத் தலேநீட்டவே இல்லேயே. (உட்காருகிறான்) எஞ்சாமி, காந்தி ராச்சியத்திலே யாச்சும் குடியானவங்களுக்கு விடிமோச்சம் உண்டா? தலே தூக்க முடியுமா?

பாலு. :—என்னப்பா இப்படி கேக்கரே? இப்பவே உங்களுக்குச் சவுகரியமாகச் சட்டமெல்லாம் வந்திருக்கே. பத்திரிகையிலே படிக்கல்லேயா?

சு. ப. :—ஐயரே, மெள்ளப் பேசும். நமக்கென்னத்துக்கு ஊர் வம்பு—

மு. சே. :—போங்கசாமி. பத்திரிகையைத் தான் அனுப்புவிய. படிக்கவுமா ஆளனுப்ப முடியும்? என்ன சட்டம் சாமி வந்திருக்கு?

சு. ப :—அடெ, நல்ல ஆளுப்பாத்தே கேளுவி கேக்க. அவருக்கென்ன தெரியும்? வக்கிலா? ப்ராட்டீசா பண்ணுராரு.

பாலு :—பத்தரவாள், சட்டம் வக்கீலுக்கு மாத்திரம்தான் தெரியணும் கறதில்லே. எல்லோரும் தெருஞ்சுக்கலாம்; ஆனல், இரும்பு பிடிச்சவன் செய்ரது மாதிரி, சட்டம் படிச்சவனும் செய்ய நினேக்கும்போதுதான் ஆபத்து. . . ஏனப்பா சேர்வை, கள்ளே வெலக்கினது, கடனுக்குச் சட்டம் கொண்டு வந்தது, எல்லாம் உங்களுக்குக் காங்கிரஸ் கமிட்டி சொல்லலேயா?

மு. சே :—கமுட்டியா? அது எங்கேயோவுல்லே இருக்காம். இங்கே யெப்படி வந்து சொல்லப்போகுது.

பாலு :—இல்லேப்பா; கிராமக் காங்கிரஸ் கமிட்டியைச் சொல்கிறேன்.

மு. சே :—அவுகளா? ஏதுங்க. மிந்தி வோட்டும்போது வந்தாக, சொன்னுக. நாங்களும் சரி சொல்லி சந்தனம் பூசி, காதுலே

செவந்திப்பூச் சொருகிக்கிட்டு, யாது பெசகாமெ மஞ்சப் பெட்டியிலே போட்டம். அதுக்குப் பொறகு வோட்டும் வல்லே, அவுகளும். . . .

சு. ப :—அவன் தெரியாமெச் சொல்ரான். இந்த வருசம் நாங்கூட நாலணாக் கொடுத்து மெம்பராகச் சேந்திருக்கேன். போன ஞாயித்துக்கிழமை கூட. . . .

மு. சே :—ஆமா சாமி, மறந்துட்டேன்; கொடியேத்து விளா பெரிய தேர் திருவிளா வாட்டம் நடந்துச்சு, மேளம் தாளம்.

பாலு :—அதுதானே கேட்டேன். நம்ப ஊர்க் கமிட்டி நல்ல சேர்க்கையாச்சே!

மு. சே:—அது இருக்கட்டுஞ்சாமி; சட்டத்துலே எது எதுமோ நல்லதெல்லாம் வந்திருக்கூங்கராக. ஆனுப் புரியச் சொல்லரவு களைக் காணம். மொதவே இருளாட்டம் தெரிஞ்ச தொயரம் இப்போ யெண்ணையைப் பூசிக்கிட்டுப் பளபளப்பாத் தெரியுது. என்னைக்குத்தான் விலகுமோ தெரியலே. (பெருமூச்சு விடுகிருன். குளுந்த காற்றிலேகூட நெஞ்சிலே வேர்க்கிறது. அதைத் துடைத்துக்கொள்கிருன்).

சு. ப:—(அதிருப்தியோடு) ஏன் ஸார், சாப்பிடப் போகல்லியா ?

பாலு:—போவோம் . . என்ன சேர்வை பெருமூச்சு விடறே, ஏங்களுக்குத்தான் கவலேன்னு உனக்குமா ?

மு. சே:—உங்களுக்கு, மெத்தைக்குப் பஞ்சில்லேன்னு கவலே, எனக்கு வவுத்துக்கு கஞ்சியில்லேன்னு கவலே. போன தீவிளிக்கு வாங்கின பாக்கி, புடவைக் கடைக்காரனுக்குக் கொடுக்கல்லே. இந்தா டும்னு மறுபடியும் வந்திடுச்சு, இதைக்கேளுங்க சாமி. சொன்னுக்கூட மானம் போயிரும்.

சு. ப:—என்னப்பா அது ? புதுச்சேதி கொண்டாரே.

மு. சே:—எல்லாம் உங்களுக்குத் தெரிஞ்ச சேதிதான்.

பாலு:—சொல்லு சேர்வை.

மு. சே:—குடி படைகளெல்லாம் அச்சய வருசத்திலே அடிபட்டு, ஒருத்தங்கிட்டேயாவது, தம்பிடீன்னு தம்பிடிகூடக் கிடையா துங்க. அப்போ, அந்த முட்டுக்கு ஆத்தமுடியாமெ நானும் ஒரு நாற்பது ரூபாய் கடன் வாங்கினேன்.

பாலு:—எந்த வருசம் ?

மு. சே:—பிரசோப்பத்தி வருசமுங்க, தைப்பொங்கலுக்குக் குட்டிக்குச் சீரனுப்பப் பணமில்லெ, வாங்கினேன்.

பாலு:—என்ன. . . நோட்டிலேயா? அடமானமா ?

மு. சே:—நோட்டும் அடமானமும்—மொடைக்கா ஒதவப்போகுது! நல்லா வெக்கம் வாராப்லே பொம்பிளே களுத்துலே கெடந்த தாம்பையும்—ஆமா—பூடியையும் உருவி அடவு போட்டுப்பிட்டு வாங்கினேன்.

பாலு:—அட பாவமே, வட்டி என்ன ?

மு. சே:—அதெல்லாம் சல்லிசுதான். மூணுகாசு வட்டிக்கி.

பாலு:—மூணுகாசு வட்டி சல்லிசா ?

மு. சே:—மொடைக்கிப் பணம் அம்பிட்டாப் போதுஞ்சாமி. வட்டியை எவன் பாக்கிறான்? சமயங்கள்ளே அணு வட்டிக்குக் கூடப் பணம் கெடைக்காது. உருப்படியும் ஆறு பவுனுக்குப் பக்கம் வரும். முத்தையா நல்ல மனிசன். ரோக்கியதையும் சேர்ந்திச்சு. கடையிலே பணம் தந்தாக.

சு. ப:—ஆமா பணமில்லே? சும்மாவா?

பாலு:—திருப்பியாச்சோல்லியோ?

மு. சே:—அந்தக் கதையைத்தானே சொல்ல வாரேன். மாசத்துக்கு ஒண்ணேகா ரூபாய். வருஷத்துச்குப் பதினைந்து ரூபாய் வட்டியா, ரெண்டு வருஷம் கொடுத்துப் பாத்தேன். ஒரு வளியிலேயும் பூரா அடைபடலே.

பாலு:—கடசிலே என்ன? வித்துப்பிட்டியோ?

மு. சே:—வாரேஞ்சாமி இருக்க. வித்து ஒளிச்சுப்புடனும்னு நெனச்சுத்தான் ஒரு நாள் கிளம்பினேன். அன்னைக்கின்னு 13 ரூபாய் பவன் 18 ரூபாய் ஆயிருச்சுரான்னுக. கடைக் காரரும் கடிசு பண்ணலே. சரி இப்பொ விக்கவேண்டாம்னு விட்டுட்டேன்.

பாலு:—அடபாவமே! அப்புறம்? வட்டியா யெத்தனை ரூபாய் கொடுத்திருப்பே?

மு. சே:—இதையென்ன குடியானவன் கணக்கா யெழுதி வச்சிருக் கான்? இல்லெ ரூபாய்தான் முளுக்கக் கொடுத்தமா?

பாலு:—பின்னே?

மு. சே—ஒரு தடுத்தம் வைக்கக்கட்டாக் கொடுக்கிறது. அப்பறம் ஒரு தடுத்தத்திலே அவுக வீட்டுக் கலியாணத்துலே வண்டியா அடிச்சு வாடகையிலே களிச்சுத் தீத்தேன். அப்பறம் அப்பறம்—அ—ஆம்—ஒரு—தபா பேச்சு கொம்பச் சூடாகச் சொல்லிரவே, இருந்த வெதை நெல்லே அளந்து விட்டுப்பிட்டு குப்பற விளுந்து படுத்தேன். அப்பறம் மத்த தபாலெல்லாம் பணமாவே கொடுத்திட்டேன்.

சு. ப:—அதுக்கு நடந்த நடை கொஞ்சமா?

பாலு:—ஆக மொத்தம் அசல் 40 ரூபாய் கொடுத்து இப்போ அதைத்திருப்பனுமாக்கும்?

மு. சே:—சொச்சம் எங்கே போச்சு? 40 ரூபாயும் கொடுத்து, எங்க அய்யாவுக்கு ஒரு வருசத்து வட்டி 15 ரூபாயும் கொடுத்துத் திருப்பணும்.

பாலு:—எதையாவது கெஞ்சி, கொஞ்சம் தள்ளுபடி செய்து பார்க்கிறதுதானே?

மு. சே:—எவ அனுகாப்பிலே பூனே விட்டுடுமா? இதுக்குன்னு வட்டிக்குக் கொடுத்தவுங்க தள்ளிக் குடுப்பாகளா—என்ன பத்தரய்யா?

சு. ப:—அந்தா ஆமா. நல்ல எண்ணம் மாத்திரம் கடன்காரனுக்கு இருந்தாப் போதும்.

மு. சே:—கடாசியா, போனவருசத்திலேயே வித்துப் புடுவம், தீபாவளிச் செலவுக்கும் ஆச்சு, கடனையும் ஒளிச்சுப்புடுவம்னு

பார்த்தேன். அந்தச் சமயத்துக்குன்னு சந்தணங் குடுக்கையிலே விசவாமித்திரன் தோணினுன்னு கூத்துலே சொன்னப்பிலே, ராக்கப்பண்ணன் மகன் பட்டனத்துக்குப் போயித்து வந்தான். அவஞ் சொன்னன். 'சட்டம் வந்திருக்கு' அப்படி இப்படீன்னன். அது ஒண்ணும் உருப்புரியலே. "குருடங் கோலேக் குருடன் புடிச்சாப்பிலே" கொளப்பத்துலேதான் கொண்டாந்து விட்டிருச்சு.

(பத்தர் திரும்பி ஒரு தடவை பார்த்தார். பாலு யோஜித்தார்.)

சு.ப :—அப்படியா சங்கதி. ஏன், சட்டத்துக்கிட்டேபோய் யோசிக்கிறதுதானே. வக்கீல் புரிஞ்சுபோகுது.

மு. சே:—வாங்கரபோது வக்கலேக் கூட்டிக்கிட்டா வந்தேன். (ஐயரிடம்) எஞ்சாமி கள்ளேத்தான் வெலக்கினுக, கவடத்தை வெலக்க முடியுமா ? நாங்களும் காங்கிரஸை நம்பி அதுதான் கதினு கிடக்கம். "சன்னதம் மலே யேறின பொரகு சாம்பிராணி போட்டுக் காரியமில்லே". இப்பவே யேதாச்சம் எங்களுக்கு நல்லதாகச் செய்யராப்பலே கேக்கணும்னு பார்த்தா அதுக்கு இந்த ஊருப் பயக ஒத்து வரதில்லே.

பாலு :—அடே காங்கிரசே உங்களுக்குத்தான்பா. யாருக்கிட்டே அடகு வச்சிருக்கே ?

மு. சே:—வேறே யெங்கே போக்கிடம், பத்தரய்யா கடையிலேதான்.

பாலு :—அடேடே. இங்கேதானு ? என்ன ஸார் ?

சு. ப. :—ஆமாமா, மனுசன் வந்து நின்னு கண்ணுலே தண்ணிவிட்டான். தங்கத்துக்குக் கொடுக்க வச்சிருந்த பணத்தைத் தாரை வார்த்தேன். வருசம் 8 ஆகுது. இன்னும் பணம் வல்லே, கேட்டா இன்னக்கி, நாளேக்கி.....

பாலு:—(யோசனையிலிருந்தவர் திடீரென்று முழிக்கிருர். முகத்தில் திருப்திக்களேயோடு) என்ன சேர்வை, உனக்கு ஒரு உபகாரம் செய்தால் பதிலுக்கு ?

மு. சே. .—(சிரித்துக்கொண்டே) "மானத்துக்குப் பூமி மகுடமா குட்டுது. காதிலே கடுக்கன் போட்டுக்கிட்டா மூஞ்சிக்களகு" "கலப்பை புடிக்கிறவன் நல்லாயிருந்தா உங்களுக்கெல்லாம் அளகு". சொல்லுங்க. ...

பாலு :—(தீர்மானமாக) சுந்தரப்பத்தர்வாள், இனிமேல் அவரைப் பணம் கேட்க வேண்டாம். அவர் நகையைக் கொடுத்துடுங்கோ.

சு. ப. :—(அழுத்தந் திருத்தமாக) ஏன் ? பணம் நீங்க தருவியளா ?

பாலு :—ஏன் உங்களுக்குச் சேர வேண்டியதுக்கு மேலே அதிகமாகச் சேர்வை கொடுத்திருக்கானே?

சு. ப. :—எப்படி ஐயா, அதிகமாகக் கொடுத்ததைக் கண்டுபிடிட்டிய ? பேசின வட்டிதானே வந்திருக்கு. மேக்கொண்டு அள்ளியா விட்டுட்டான் ?

பாலு :—இல்லே சார். கடன் நிவாரணச் சட்டப்படி 1932-ம் வருஷம் அக்டோபர் மாதத்திற்கு முன்னுலே வாங்கின கடனுக்கெல்லாம் அசலைப்போல ஒரு பங்கு தான் வட்டி செல்லும். கடன் ரெட்டிப்புக் கட்டி விட்டால் தீர்ந்தது.
(புதையலே எடுத்து தானம் செய்தவனைப்போல் மிடுக்காகப் பார்க்கிருர்.)

சு. ப. :—(கோபமாக சிறிது நேரம் மவுனம்) இதெல்லாம் உம்மையா கேட்டாக?

பாலு :—ஓட்டுப் போடச் சொல்லி நான் சொன்னபோது அவா கேக்கல்லியா ? அந்தக் கணக்குப்படி அசல் 40 ரூபாய்க்கு வருஷம் ஒன்றுக்கு வட்டி 15 ரூபாயாக 7 வருஷத்துக்கு 105 ரூபாய் கொடுத்திருக்கிருர் சேர்வை. அசலும் அதைப்போல வட்டியும் சேர்ந்து மொத்தம் 80 ரூபாய் போக, நகையையும் இஷ்டமிருந்தால் 25 ரூபாய்யையும் கையிலே கொடுத்து கணக்கு நேர் போடுங்க, பேரேட்டிலே ஒரு பக்கம் மிஞ்சும்.

சு. ப. :—(கேலியும் கோபமுமாக) உங்க வீட்டுப் பணமா? ஊரான் வீட்டுப் பணமில்லே, நல்லாச் சொல்லுவிய! கோட்டுக்குப் போகச் சொல்லி, கூட இருந்து வாங்கிக் கொடுங்க. (ஐயர் சிறிது யோசிக்கிருர், சேர்வை பேந்தப் பேந்த முழிக்கிருன்)

பாலு :—(பையிலிருந்த வக்காலத்து பாரத்தை எடுத்து) சரி, கையெழுத்துப் போட்டுக் குடப்பா. நானும் ஒரு வக்கீல் தான். ஒத்துழையாமைக் காலத்திலே தொழிலே விட்டுப்புட்டு ஜெயிலுக்கும் போனவன். நான் இப்ப மறுபடி உங்களுக்காகவாவது வக்கீல் தொழிலே ஆரம்பித்து விடுகிறேன். போடு. கையெழுத்துப் போடு. (பத்தர் சிறிது யோசிக்கிருர். எழுந்து போய் அலமாரியிலிருந்த ஒரு அச்சுப் புஸ்தகத்தைப் புரட்டிப் பார்க்கிருர். மறுபடியும் வந்து சலிப்புடன் உட்காருகிருர்.)

சு. ப. :—என்னத்துக்குச் சாமி வேண்டாம், 25 ரூபாய்ப் பேச்சைப்பத்திப் பேசாதீங்க. அந்த ரீதி சரிதானே (பெட்டகத்தைக் திறந்து, நகையை எடுக்கிருர்.) 30 வருசமா இல்லாம இன்னைக்குப்போய் கோட்டிலே நிக்க வேண்டாம்.

மு. சே. :—அப்படிச் சட்டமிருந்தாச் சரிதான்.

சு. ப. :—சட்டம் எப்படியாவது கெடந்துட்டுப் போவுது. நமக்கு வேண்டியது மனுசன்தான் சாமி. மனிசன்தான்.
(நகைப் பொட்டலத்தைச் சேர்வை கையில் போடுகிருர்.)

பாலு :—(சிரித்துக்கொண்டு) என்ன சேர்வை ! கடன் தீர்ந்ததா ?

மு. சே. :—என் கடன் தீர்ந்ததுங்க, ஆனுல் உங்க கடன் ரொம்ப பாக்கி யிருக்குதுங்க !

போலந்தின் போராட்டம்

ஒரே வார்த்தை! ஹிட்லரிடமிருந்து வரும் அந்த ஒரு வார்த்தையில் 40,000 நாஜித் துருப்புகள் போலந்திற்குள் பாய்ந்து மொய்த்துக்கொண்டு விடும். போலந்தினுடைய சரித்திரத்தைத் தெரிந்து கொண்டவர்கள், டான்ஸிக்கை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்று ஏன் போலந்துக் காரர்கள் அவ்வளவு சிரத்தை காட்டுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள் வார்கள்.

1309-ஆம் வருஷத்திலிருந்தே டான்ஸிக் போலந்தைச் சேர்ந்தது என்பது சரித்திரம் நமக்கு அறிவிக்கும் உண்மை. ஆஸ்ட்ரியா தேசத்து கேதரின் பாகப்பிரிவினை நடத்திய அந்த காலத்தில்கூட (1772) அது போலந்தின் பாகத்தில் தான் விழுந்தது. ஆனால் 19 வருஷங்களுக்குப் பிறகு ரஷ்யாவை எதிர்ப்பதற்கு டான்ஸிக்கும், பிரஷ்யாவும் ஒன்று சேர்ந்தன. போலந்தை, பிரஷ்யா காட்டிக்கொடுத்தது; பிறகு போலந்து ரஷ்யாவின் கையிலோ அல்லது பிரஷ்யாவின் கையிலோ அகப்பட்டுக் கொண்டு விழித்தது. இதெல்லாம் வேறு கதை!

உலக யுத்தத்திற்குப் பிறகு பல கடைத் தேங்காய்கள் வழிப்பிள்ளை யாருக்கு உடைக்கப்பட்டன. ரஷ்யா, போலந்தில் எந்தெந்த இடங்களை வைத்துக்கொண் டிருந்ததோ அந்த இடங்களையும், ஜெர்மனி போலந்தின் எல்லைக்குள் எந்தெந்த தேசங்களை வைத்துக்கொண் டிருந்ததோ, அந்த இடங்களையும் அந்த இரண்டு தேசங்களிடமிருந்தும் பிடுங்கி போலந்தினிடம், ஜயித்த வல்லரசுகள் கொடுத்தன! இது வார்சேல்ஸ் உடன்படிக்கை செய்த கைங்கரியம்—"ஐயா, இந்திய சுதந்திரப் பிரச்னையைக் கொட்டி அளந்திருந்த காகிதத்தை எந்தக் கழுதை தின்றது? எந்த சூறாவளிக் காற்று அடித்துக்கொண்டு போயிற்று?" என்று கேட்பதற்கு ஆளைக் காணோம்.

அது தொலைந்து போகட்டும். போலந்தின் விஷயத்தைக் கவனிப் போம். போலந்தின் ஓய்ச்சல் ஒழிவில்லாத போராட்டம் அதனுடைய இயற்கை அமைப்பால் தான் வந்தது—இன்னும் வருகிறது! அதற்கு வரையறுக்கப்பட்ட இயற்கை எல்லைகள் இல்லை, துறை முகத்திற்குப் போக்குவரத்து சாதனங்கள் சரியாய் வைத்துக்கொள்ள, இயற்கை யமைப்பு இடம் கொடுக்கவில்லை. மேலும் மாறுபட்ட கொள்கைகள் பூண்ட இரண்டு பெரிய நாடுகளுக்கு நடுவில் அது அகப்பட்டுக்கொண் டிருக்கிறது. அந்த இருவர்களில் யாருடனாவது தகராறு பண்ணினாலும் சரி, சம்பந்தம் வைத்துக்கொண்டாலும் சரி, அது நசுங்கியே போகும்!

அது, தன்னுடைய சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொண்டால் ஐரோப்பாவையே அது பாஸிஸத்திலிருந்தும், பொது வுடைமையிலிருந்தும்

காப்பாற்றி விடமுடியும். இந்தக் காரணத்தினால் தான் இங்கிலாந்து போலந்தின் சுதந்திரத்தில் அவ்வளவு சிரத்தை காட்டிற்று.

ஆனால் ஹிட்லரின் மனதில் என்ன இருக்கிறது என்ற உலகறிந்த விஷயத்தில் ஜோஸ்யர்கள் போட்டிபோட வேண்டியதில்லை. ஐரோப்பிய வல்லரசுகள் எவரையும்விட, தான் பெரியவராக விளங்க வேண்டும் என்ற அந்த ஆசை ஹிட்லருக்குப் பூர்த்தியாக வேண்டுமானால், போலந்து அவருடைய கைக்குள் அடங்கிவிட வேண்டும். அல்லது இருந்த இடம் தெரியாமல் ஜெர்மனியுடன் கலந்து ஒன்றாகிவிட வேண்டும். போலந்து கொஞ்சமாவது தலையைத் தூக்கிக் கொண்டிருக்கும் வரையில் நாஜிகளின் ராஜ்யத்திற்கு ஒரு தடைதான். அது இருப்பதனால் தானே நாஜிகள் பால்டிக், யுக்ரேன் முதலிய பிரதேசங்களில் போய் விஷமம் செய்ய அவ்வளவு சௌகர்யப்படாமல் இருக்கிறது?

இவ்வளவு கவலைகளோடு உணவுக்கவலை ஒன்று வந்து போலந்துக்காரர்களுக்குத் தொல்லை கொடுக்கிறது. அதைப் போக்குவதற்குள்ள ஒரு நல்ல வழியை அவர்கள், அனாவசியமான பயத்தால், பயன்படுத்திக் கொள்ளவில்லை. ஏராளமான சதுப்பு நிலங்கள்—50 00,000 ஏக்கர்களுக்குமேல்—பயிரிடப்படாமல் தரிசாய்க் கிடக்கின்றன. அந்த சதுப்பு நிலங்களிலுள்ள நீரை வடித்து அதைப் பயிரிட ஆரம்பித்தால் உணவு பிரச்னையே தீர்ந்துவிடும். ஆனால் அவர்கள் அப்படி ஏன் செய்யாமலிருக்கிறார்கள்?

அது ரஷ்யப்படை யெடுப்பைப்பற்றிய பயம்தான். இதுதான் அந்த அனாவசியமான பயம். ஆங்கிலேயர்கள் மூளையிலேயே, "நாடுகள் அபகரிக்கும் உத்தேசம் ரஷ்யாவுக்கு இல்லை என்று அறிந்துகொள்ளாமலிருக்க எம் கண்கள் குருடல்ல" என்று உதயமாகி விட்டபிறகு இந்த சந்தேகமே போலந்துக்கு வேண்டியதில்லை! ரஷ்யா படை எடுத்தால், போலந்தின் கீழ் மூலையில் இந்த சதுப்பு நிலங்கள் போலந்தைக் காப்பாற்ற உதவியாக இருக்கும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். அது சரியல்ல.

இதன் முடிவு எப்படியானாலும் சரி—அவர்கள் இந்த நிலங்களை எந்த உபயோகத்துக்கு வைத்துக் கொண்டாலும் சரி—போலந்துக்காரர்கள் பொருளாதார நிலையில் அவசியம் முன்னேறியாக வேண்டும். அல்லது நிச்சயம் அவர்கள் குட்டிச் சுவரில்போய் முட்டிக்கொள்வார்கள். போலந்து க்ஷேமமாக இருந்தால், ஐரோப்பாவில் (Balance of Power) சக்திகளை சரிக்கட்டும் நியதி நீடித்து நிற்கும்.

உலகப் பொருளாதாரப் புனருத்தாரணமும் எளிது. உலகயுத்தம் வாத்தான் வருவேன் என்று வந்து விட்டால்; பிரான்ஸும் பிரிட்டனும், போலந்தின் 40 பாகங்களும் விழுங்கப்படுவதைப் பார்த்துச் சும்மா இருக்க முடியாது என்பதைக் கண்கூடாகக் காண்பீர்கள். ஏன்?—இந்த 40 பகுதிகளும் நாஜிக்களின் சத்துருக்களாக இருப்பதால் ஜெர்மனி இரண்டு முன்னணிகளாகப் பிரிந்து போராடியாக வேண்டும். இந்தப் போராட்டத்தில் ஜெர்மனியின் முதல் தோல்வியை நாம் கண்டு விட்டோம்—ஹிட்லரின் ஜம்பம் முதல்தடவையாக பலிக்காததைக் கண்கொண்டு பார்த்து விட்டோம். எதிர்காலத்திலும் அதே தோல்வி ஜெர்மனிக்கு இல்லை என்பது என்ன நிச்சயம்?

விமர்சனம்

"ரஞ்சனன்"

குப்புசாமி எழுதிய "கமலாவின் காதலன், முதலிய கதைகள்" அப்போதுதான் வெளியாகி இருந்தது. அதனால் கூட அவ்வளவு பாதகமில்லை. அது என்னிடம் விமர்சனத்திற்கும் வந்தபோதுதான் உண்மையான ஆபத்தும் அதனோடு வந்தது. ஏனெனில், புத்தகங்களைக் காட்டிலும் அதன் ஆசிரியர்களுக்கல்லவா பயப்பட்டுத் தொலைய வேண்டி இருக்கிறது.

முதல் கதை, கொட்டும் மழையில்தான் ஆரம்பமாயிற்று.

"கொட்டும் மழை கொஞ்சமாவது தணியும் என்று எதிர்பார்த்தும் பிரயோசனப் படவில்லை. வான வெளியில் சிதறிக்கிடந்த புஷ்பங்களைக்கூட்டி எடுத்ததுபோல, ஒரு நக்ஷத்திரங்கூடக் காணப்படவில்லை. மின்னலின் சவுக்கடி பளீர் பளீரென்று அப்போதைக் கப்போது அடித்து, கண், காது, முதலியவற்றின்மேல் ஒரே தடவையில் பழி தீர்த்துக்கொள்ளும் முறையில் ஆர்ப்பாட்டம் செய்தது. காற்று, பேய்களைப்போல 'ஹோ ஹோ' என்று கத்திக்கொண்டு ஓடிற்று.

ராஜு அதைப் பொருட்படுத்தவே இல்லை. தன் 'மப்ளரை' எடுத்து தலையில் கட்டிக்கொண்டு ஜன்னலருகே உள்ள நாற்காலியில் உட்கார்ந்தான்.

பாபு சொன்னான்..........."

இந்த இடத்தில்தான் ஆபீஸ் பையன் ஒரு புஸ்தகத்தைக்கொண்டு வந்து தொப்பென்று மேஜையின்மேல் போட்டுவிட்டுநின்றான். அவன் போய்விடுவானென்று நினைத்து நான்மேலே அந்தக் கதையைப் படித்துக்கொண்டு போனேன். அவன் போகவில்லை. அதற்கு மாறாக என் எதிரே நகர்ந்துவந்து நின்றுகொண்டு அவன், "ஸார் ஸார்" என்றான். "என்ன இழவுடா, சொல்லி அழேன்" என்று தொல்லை பொறுக்க முடியாமல் கதறினேன்.

"இந்தப் புஸ்தகம் இப்ப வந்திருக்காம். இந்த வாரத்து......"

"சரி, சரி எழுதித்தொலைத்து விடுகிறேன் போ."

"எடிடர், அதைக் கொஞ்சம் பார்த்து.........." என்று முனகிக் கொண்டே போய்விட்டான். அவன் போனபிறகு அந்தப் புஸ்தகத்தை எடுத்துப் பார்த்தேன். பிரபல ஹாஸ்ய ஆசிரியர் 'குருவி' எழுதிய புத்தகம் அது. முகவுரையிலேயே, புத்தகத்தின் தன்மை விளக்கி விவரிக்கப்பட்டிருந்தது. சரியான சிறு கதைகளே இல்லாத இந்த நாட்டில், இந்த மூட ஜனங்களுக்காக எழுதப்பட்டிருந்த அச்சிறு கதைக்கொத்து ஜனங்களின் ருசியையே மாற்ற உபயோகப்படும் என்று ஆசிரியர் நம்பினார். நம் வாழ்க்கையில் சாதாரணமாக நடக்கும் சம்பவங்களிலிருந்தே எவ்வளவு சுவைமிகுந்த ஹாஸ்யக் கதைகளைப் பிழிந்து எடுக்கலாம் என்று காட்டியதோடு, அவரும் அதே முறையில் தான், தன் கதைகளை சிருஷ்டித்திருப்பதாகவும் சொல்லி இருந்தார்.

முதல் கதையைப் புரட்டினேன். கதாநாயகன் வக்கீல் பரீக்ஷை கொடுத்தவன். 'ப்ராக்டீஸ்' செய்ய ஆரம்பிக்கும்போது நிலைமை அவ்வளவு திருப்திகரமாக இல்லை. இரண்டு கவுளி வெற்றிலை, ஒரு வீசை காப்பிக்கொட்டை—இந்த பீஸுகளுக்கெல்லாம் பேசியான பிறகு, அவருக்கு 'ஏன் இந்த வக்கீல் தொழிலுக்கு வந்தோம்' என்றாகிவிடுகிறது. இருந்தாலும் "இப்போதுதானே ஆரம்பிக்கிறோம். கத்துக்குட்டிதானே. போகப்போகத் தொழிலில் அபிவிருத்தி அடைய வழி உண்டாகலாம்" என்று தனக்குத்தானே தேற்றிக்கொள்ளுகிறார். நாட்கள் கழிந்தும் நிலைமை முன்னேறாமல் போகவே, வக்கீல், மூன்று பசுமாடுகளை வாங்கிக்கொண்டு நாட்டுப்புறத்துக்குப் போய், பால் வியாபாரம் செய்ய ஆரம்பிக்கிறார். இதுதான் முதல் 'ஹாஸ்யக்கதை.'

ஆசிரியர், ஹாஸ்யத்திற்கு உதாரணம் காட்டி இருந்த இந்த சோகக் கதையில் நிச்சயம் மனம் உருகித்தான் ஆகவேண்டுமென்றும், உண்மையில் சிரிப்பு, வேடிக்கை, அழுகை எல்லாம் சேர்ந்த கதை ஒன்றுதான் கதை என்றும், மற்றவைகள் எல்லாம் கதைகளே அல்லவென்றும் எழுதி விமரிசனத்தை முடித்து வைத்தேன்! அதோடு கூட எங்கள் பத்திரிகாசிரியர் அந்தப் புஸ்தகத்திற்கு அந்த விலை மிகக் குறைவென்றும், இரண்டணாவாவது கூடக் கொடுத்துதான் ஆகவேண்டுமென்றும் சேர்த்து எழுதி அந்த வாரத்து மதிப்புரையைப் பூர்த்திசெய்தார்.

இதில் நஷ்டமடைந்தது நானும் இல்லை. எங்கள் பத்திரிகாசிரியரும் இல்லை. அது குப்புசாமிதான். இடக்குறைவினால், அவர் புஸ்தகம் மிகவும் நன்றாக இருக்கிறதென்றும், வாங்குகிறவர்கள் காசைக்கரியாக்காமல் தாராளமாக வாங்கலாமென்றும் எழுதப்பட்டதில் குப்புசாமிக்கு வந்த எரிச்சலும் அதிருப்தியும் இவ்வளவவ்வளவல்ல. அன்று அவன் புஸ்தகத்தை அப்படி விமரிசனம் செய்த குற்றந்தான், இன்னும் நான் அவனுக்காக ஒளிந்துகொண்டு நடமாடவேண்டி இருக்கிறது. அப்படி இருந்தும் அவன் என்னைக் கண்டுபிடித்துவிட்

டான். பிடித்தவன் லேசில் விடவில்லை. "கொள்கை இல்லாத அர்த்த மற்ற பத்திரிகைகள் என் புத்தகத்திற்கு உரிய ஸ்தானம் அளிக்காத தின் நஷ்டம் எனக்கில்லை. அது பொதுமக்களுக்குத்தான். பொது ஜனங்களின் கீழ்த்தரச் சுவையை மாற்றி, இலக்கிய ருசியை அவர்களுக்குப் புகட்டுவதில் நான் தோல்வியடைந்தால், அந்தத் தோல்வியில்தான் உண்மை வெற்றி அடங்கி இருக்கிறது" என்று விளக்கினன். "நான் சொல்லுவதைக் கொஞ்சம் கேளப்பா குப்புசாமி! அன்று எங்கள் பத்திரிகாசிரியரின் நண்பர் வந்தாரே 'குருவி' அவரும் அதைத்தான் சொன்னர். எல்லோருக்கும் லட்சியம் ஒன்ருகத்தான் இருக்கிறது. ஆனல் கதைப்போக்கு, விஷயம் இவைகளே இல்லாத ஒரு........."

"உங்கள் பத்திரிகை, அதன் ஆசிரியர், அவர் நண்பர், எல்லோரையும் கடவுள் ஒருவர்தான் காப்பாற்ற வேண்டும். என்னைப்பொறுத்தவரைக்கும் கலைதான் என்னுடைய உயிர். என்னுடைய கதைகளில் உணர்ச்சிகளுக்குத்தான் முதல் ஸ்தானம். வார்த்தைகள், உணர்ச்சிகளைத் தாங்கிவரும் வாகனங்கள்!" என்று சொல்லிவிட்டுக் கிளம்பினவனை நான் இன்னும் பார்க்கவில்லை. என்னைக் கண்டாலே ஓட்டமும் நடையுமாகப்போய் எங்கோ மறைந்து விடுகிருன்.

எங்கள் பத்திரிகாசிரியரின் கதி இன்னும் மோசமாகப் போய்விட்டது. அன்று அவரைச் சந்தித்தபோது, அவருக்கு நேர்ந்த ஒரு விபத்தை என்னிடம் அவர் தெரிவித்தார். மதிப்புரை எழுதிய கையோடு, நூறு புஸ்தகங்களையாவது விற்றுக் கொடுக்கும்படி பிராணனை வாங்கிவிட்டாராம் 'குருவி.' இவரும் தப்பிக்கொள்ள எவ்வளவோ முறைகளைக் கையாண்டும் முடியாமல் போகவே, "அப்பா இந்தக்காரியம் மாத்திரம் என்னல் ஆகாது. என் உயிரை வாங்காதே" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டதில் அவருக்கு வந்த கோபம் கொஞ்சநஞ்சமல்லவாம். அது முதற்கொண்டு இவரைக்கண்டால் கூட அப் புத்தகாசிரியர் பேசுவதில்லையாம்!

கதைவேண்டுமோ, கலை வேண்டுமோ, அல்லது இரண்டும் சேர்ந்துதான் பொதுஜனங்களுக்கு வேண்டுமோ, ஈசுவரனுக்குத் தான் வெளிச்சம். ஆனல் இத்தனை நாளாக விமரிசனம் செய்து ஒன்றே ஒன்றைத்தான் நான் கண்டிருக்கிறேன். ஒருவரை ஜென்ம விரோதி யாக்கிக்கொண்டு, அவர் உங்கள் மூஞ்சியில் விழிக்காமல் அடித்துவிட வேண்டுமென்ருல், அவரோடு சண்டைபோட வேண்டாம்; வசவுப் போட்டியிலிறங்கவேண்டாம். அவருக்குக் கடன் கூடக் கொடுக்க வேண்டாம். அவருடைய புஸ்தகம், கட்டுரை, டாக்கிக் கதை ஏதேனும் ஒன்றைப் பொறுக்கி எடுத்து, அதற்கு விமரிசனம் எழுதி விடுங்கள்!

கலைஞானம்

கருப்பூர் என்னும் கிராமத்தில் சிவஞான தேசிகன் என்னும் பிராமணன் தன் மனைவியோடு இல்லறம் நடத்தி வர, தவத் தன்மையால் தக்க காலத்தில் ஓர் மகனைப் பெற்றனர். அம்மகனுக்கு சுவாமிநாதன் என்னும் பெயரிட்டு, கல்வி பயிற்பித்து அன்போடு வளர்த்து வந்தனர். சகல சாஸ்திரங்களிலும் தேர்ந்தோங்கிய அம் மறைமகன் பத்தொன்பதாம் வயதில் ஞான மேலீட்டினால், தாய் தந்தையர் மணம் செய்விக்கச் செய்த சகல ஏற்பாடுகளையும் வெறுத்து, துறவறத்தின் மார்க்கமே நலமென நாடி, தாய் தந்தையர் அறியாது முனிவர்க்கிடமான வனத்தைச் சேர்ந்து, அங்கொரு முனிவரை யண்டி ஞானோபதேசம் உபதேசித்தருளும்படி வேண்டினன்: முனிவர் முதலில் தடுத்து இல்லறத்தினின்றும் நற்கதி அடைதற்கு மார்க்கமுண்டு என பலதுரைத்தும் துறவறத்தை அம் மறைமகன் வேண்ட, முனிவரும் ஞான முதயமாகும் சில தன்மையை புகன்று வருகின்றனர்.

பொய்யாகிய இச் சடலமெடுத்து மாயையென்னும் சமுத்ரங்களில் நீந்தி நீந்தி உடலோய்ந்து, கரை சேருதற்கியலாது தவிக்கும் இச்சரீர வேதனையைத் தாங்காமல் ஜீவ சக்தியானது விலகி ஆகாயத்தினை யடைந்து பரமாத்வாவின் ஆணைப்படி எழுவகைப் பிறவிகளுள் பின்னும் சேருதற்கியலான மேக மண்டலத்தினை அடுத்து வருண சக்தியோடொற்று மழைரூபமாய் பூமியை அடைகின்றது.

முன்கூறிய வகைகளால் பரிசுத்தமடைந்த ஜீவன், பூமியைச் சேருங்காலம் வரை உயிர் பிரிந்தழிந்த சடலமானது பூமியில் மறைந்திருக்கும்—மாரியோடொற்று பூமியைச் சேர்ந்த ஜீவனானது, சடல மண்ணிற் பாய்ந்துருகி தாது மூல வர்க்கங்களில் பாய்ந்து புற்பூண்டு, செடி, கொடி, தரு முதலிய தாவர வர்க்கங்களில் பக்குவப்பட்டு புசித்தற்குரிய சத்தாய் மாறுகின்றது.—இச் சத்தானதை ஆண், பெண் வகுப்பினர் முறையே உட்கொள, உதிர சத்தாகி சரீரத்துள் பரவுகின்றது.

இன்னும் இவை உஷ்ண மேலீட்டினால் இந்திரிய சத்தாய, மாறும். ஆனால் ஆண் இந்திரியம் ஜீவ சத்தியாயும் பெண் இந்திரியம் சடல சத்தியாயும், பிரிந்து கருக்குழியில், பிரம்ம மூலத்தால் ஒன்று சேரும். மாயைக்கு உரித்தான மங்கையின் கெற்பாதாரமான, நரகக் குழியின் கண் சேர்ந்து பிரம்மசத்தால், பிண்டரூபமடைகின்றது. பிண்டோற்பவ காலத்தில் முன் ஜென்மானுபவங்களைக்கொண்டு விதிப்பயன்கள் அமையப் பெருகின்றன குழந்தாய்! ஆங்கு கெற்பத்தில் இப்பிண்டம் வளருங் காலத்தில் அனுபவிக்கும் நரகவேதனையை நம்மால் புகலவியலுமோ? முன் ஜனனத்தில் ஜீவகாருண்யமும், சாந்தானுபவமும் இல்லாதியற்றிய ஒவ்வோர் குற்றத்திற்கும் தகுந்த தண்டனையை அச்சிசு அனுபவிக்கும் காலையில் முன் ஜெனன உணர்ச்சியும் அதற்குத் தோன்றுகிறது.

அந் நரகக் குழியில் விதித்த நாள்வரை கட்டுண்டு அனுபவிக்கும் காலக்கடையில் அவ்விம்சைகளை இனி சற்றும் தாங்குதற்கியலாதென, ஞானந்தோன்ற, பிரணவாதிபனைக் குறித்து முடிகீழாய்த் தவங்கிடப்ப, அருட்பெருஞ்சோதி, தன்னருளால் தாய்க் கருப்பையினின்றும் விடுவிக்க, இப்புவியின்கண் ஜெனித்த சிறுபோதில் மாயையின் தன்மையால் முன் கருக் குழி எனும் நரகத்தில் அனுபவித்த தண்டனை யாவையும் மறந்து ஞானத்தையு மிழந்து நாளுக்கு நாள் தாய், தந்தை, சுற்றத்தினர், நான், நீ, மனைவி, மக்கள், சுதந்தரமான பூமி, பொருள், அகங்காரம், மதபேதமென்னும், இன்னும் பல துராசையில் மனதைச் செலுத்தி கன்ம மூட்டையைச் சுமக்கப் பெருகின்றனர்.

இவைகளண்டாவண்ணம் காருண்யமூர்த்தியான எமதய்யனார், மாயையென்னுங் கடலிலாழ்ந்து அழியாது சன்மார்க்க வழிகளில் ஈடுபட்டு ஞானமெனும் அரிய பொருளை அடைதற்கான வேதம் முதலிய சாஸ்திரங்களனந்தம் உண்டாக்கியுளார். குழந்தாய்! இன்னும் இம் மானிட ஜனனத்தினின்றும் கடைத்தேறுந் தன்மையை நாளை புகல்வோம். அறிவாயாக! ஏனெனில் நீயோ பசிப்பிணியால் உடல் தளர்ந்திருக்கின்றனை, அந்திப்போதும் நெருங்கின, மாலைக் கடனையும் முடித்தல் வேண்டும். ஆதலின், இதோ தோன்றும், நமதிருப்பிடத்தினையடைவோம் வருதியென முனிவர் அழைத்துச் சென்றனர்.

இததிப்படியிருக்க மகன் வரவைக் காணாது தாய் தந்தையர் தவிக்கும் தன்மையைச் சில புகல்வோம்.

சுவாமிநாதனின் தாய் தந்தையர்கள், காலைக் கடனை முடித்து வெளிச்சென்ற அருந்தவப் புதல்வன் கங்குற்கால மதிதாயும் வாராமையைக் கண்டு, தன் மனைவியை நோக்கி "மங்காய்! மகனின் மனோ நிலையை உணராது, மணஞ்செய்தற்கான ஏதுவை முற்றும் செய்து முடித்தனம். இதனை முன்னமே மகன்பாற் புகன்றோமில்லை. அ......என்ன பிழை செய்தேன்! மணத்தின் நெருங்கிய காலத்தே மகன்பாற் புகன்றோம். மகனோ இம்மணத்தினை வெறுத்து இல்லறம் நடத்தற்கென்னால் இயலாதென்று பன்முறை வேண்டியும் நாம் ஆய்ந்தோய்ந்து பாராது செய்த குற்றத்தை மாற்றி யமைப்பதற்கியலாது. இம்மணத்தினைக் குறித்த இக்காலத்திலேயே முடித்துக்கொள்ளும் படி வற்புறுத்தினோம். இதற்கிசையா மனத்தினனான நம் புதல்வன் முற்றும் தடுத்தற்கியலானாய், நம்பாற் புகலாது இல்லத்தைத் துறந்தான் போலும்.

"மங்காய்! இனி நான் என் செய்வேன்! தேவனோ நமக்கு ஏக புத்திரனைத் தந்தருளினர். அப்புத்திரச் செல்வத்தோடு நாளும் பிரியாது இதுகாறும் மகிழ்ந்திருந்தனம். பிரிந்திருத்தலையறியாத நம தாருயிற் செல்வன் இந்நாள் கங்குலுற்றுக் கடுநோமாயும் எனதிரு கண் காணாதிருத்தலை இனி நிமைப்பொழுதும் என் மனம் சகியாது போலும். ஆ! எனதாருயிர்ச் செல்வ! புத்திர சோகமெனும் பெரிய குறையினின்றும் எனை விடுவித்தவின்பமே! பின்னும் அவ்வரிய இன்பத்தில் துன்பம் சேருதலை இன்றல்லவோ கண்டேன்!" என இன்னும் பல உரைத்தும் நினைத்தும், சோகமுற்றனர். தாயோ இதனினுமதிகத் துயர்க்கடலில் ஆழ்ந்தனள். இருவரும் ஒருவாறு தேறி தமதில்லாலயத்திலுள்ள விக்ரக வடிவமாயுள்ள உமாதேவியாரின் தாமரை மலர் போன்ற செவ்விய இரண்டு பாதங்களிலும் விழுந்து கண்ணீர் சொரியத் துதித்துப் பிரலாபிக்கத் தொடங்கினார்கள்.

(தொடரும்)



மன்னிப்பு

(கு. ப. ராஜகோபாலன்)

"நானும் வருகிறேன்!" என்று ஜானகி சொன்னதும் திருஞானத்துக்கு ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது.

"நீயும் எங்கே வருகிறாய்?" என்று அவன் சீறி விழுந்தான்.

"நீங்கள் போகிற இடத்திற்கு" என்று ஜானகி சாவதானமாகப் பதில் சொன்னாள். அவள் அந்த சமயத்தில் அவ்வளவு அமைதியுடன் பேசினது அவன் ஆத்திரத்தை அதிகப்படுத்திற்று.

"நான் போகிற இடத்திற்கு நீ வர முடியாது. வரக்கூடாது."

"வரமுடியாது என்பது இல்லை. வரக்கூடாது என்பது என்?"

"உன் முகத்தைப் பார்க்கமாட்டார் அவர்."

"அவர் பார்க்காவிட்டால் என்ன? நீங்கள் போய் அங்கே தனியாகத் திண்டாடுவதற்கு நானும் கூட வந்து ஒத்தாசையாக இருக்கக் கூடாதா?"

"உன்னைப் பார்த்ததும் அவருக்கு இருக்கிற பிராணனும் போய் விடும்."

"அவர் என்னைப் பார்க்கவேண்டாமே! அவர் கண்ணில் படாமல் நான் இருந்துவிடுகிறேன், அவ்வளவுதானே? நீங்களே கிட்ட இருந்து வேண்டியது செய்யுங்கள். நான் தூர இருந்து கொண்டு உதவியாக இருக்கிறேன். நான் வரத்தான் செய்வேன், கட்டாயம். என் மாமனார் சாகுந்தருவாயில் இருக்கிறார் என்றால் நான் இங்கே இருக்கமுடியாது."

திருஞானத்துக்கு அப்பொழுது ஜானகி 'பிடிவாதம் பிடித்தது கொஞ்சமாவது பிடிக்கவில்லை. சாகிற தருணத்தில் கூடவா அங்கே சென்று தன் மனைவியுடன் காட்சி யளித்து அவர் மனதைப் புண்படுத்த வேண்டும் என்று தயங்கினான். அவ்வளவு வருஷங்கள் பிரிந்திருந்தும் சாகப்போகிறார் என்ற தகவல் வந்ததும் அவனுக்குத் தகப்பனார்மேல் ஒரு கரையற்ற பிரேமையும் இரக்கமும் வந்தது. அவருடைய கோபத்தையும் பிடிவாதத்தையும், தன்னைப் பிள்ளையல்லவென்று அவர் நிராகரித்த கொடுமையையும் கூட மறந்தான்.

“அவருடைய இஷ்டத்துக்கு விரோதமாக நான் உன்னை மணந்து கொண்ட விஷயத்தை அவர் இன்னும் மறக்கவில்லை. ஆகையால் ஜானகி, நான் சொல்லுகிறேன், கேள், நீ இங்கேயே இரு. நான் உனக்கு தினம் ஒரு தந்தி அனுப்புகிறேன்.”

“மாட்டேன்!”

“என்ன இப்படிக் குழந்தை மாதிரி பிடிவாதம் செய்கிறாய்?”

“இப்பொழுது இது உங்களுக்குப் பிடிவாதமாகத் தோன்றும். அங்கே போன பிறகு சொல்லுவீர்கள். சரி, எப்பொழுது வண்டி, நமக்கு? என்னென்ன எடுத்துக் கொள்ளவேண்டும்?”

“உனக்கு வேலை செய்தே வாடிக்கை யில்லையே, நீ அங்கே வந்து என்ன செய்யப் போகிறாய்? உபத்திரவம் தான் உன்னால், உன்னைக் கவனிக்க என் பொழுது சரியாகப் போகும்!”

“அதெல்லாம் ஒன்றும் ஆகாது. சாக்கெல்லாம் சொல்லவேண்டாம். என்னை அங்கே கூட்டிக்கொண்டு போக உங்களுக்கு தைரியம் இல்லை. அதைச் சொல்லி விடுங்கள், நான் வரவில்லை.”

“அதெல்லாம் ஒன்றுமில்லை. நீ வேண்டுமானால் வா. எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை. மறு ரயிலில் நீயே திரும்பி வரப் போகிறாய்” என்று திருஞானம் அரைமனதாகச் சொன்னான்.

தேவராஜ முதலியார் பென்ஷன் வாங்கிக்கொண்ட டிப்டி கலக்டர். வைதிகப் பற்றுள்ளவர். தன் ஒரே பிள்ளையான திருஞானத்தை ஐ. ஸி. எஸ்ஸுக்கு சீமைக்குப் போக அனுமதித்தார். ஆனால் அவன் ஜானகி க்ஷீரஸாகர் என்ற மராத்தியப் பெண்ணை மணந்தது அவருக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. அவரால் ஆனமட்டும் தடுத்தார்; பயமுறுத்தினார். ஆனால் திருஞானம் ஜானகியை மணந்தே தீர்த்தான். கிழவர் பிள்ளையை நிராகரித்துத் தன் சுயார்ஜித சொத்து பூராவையும் வேறு விதமாக வினியோகம் செய்துவிட்டார். பிள்ளையையும் மருமகளையும் பார்க்கக்கூட மறுத்துவிட்டார். தனியாக சென்னையில் ஒரு சிறு பங்களாவில் இருந்து கொண்டு வந்தார். அவர் மனைவி, திருஞானம் பி.ஏ. படிக்கும் பொழுதே, இறந்துபோய்விட்டாள். எனவே வீட்டில் சமையல்காரப் பையன் தான் இருந்தான்.

நியூமோனியா என்ற கபவாத ஜ்வரம் கண்ட இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு தான் கிழவருக்குத் தெரியாமல் சமையல்காரன் திருஞானத்துக்குத் தந்தியடித்தான். அதற்குள்ளேயே கிழவருக்கு ஜ்வரவேகம் தாங்க முடியவில்லை. உடம்பு மூன்று நாட்களிலேயே இளைத்துத் துரும்பாகப் போய்விட்டது. கஞ்சி ஆகாரம் கூட அதிகமாகச் செல்லவில்லை.

காலை ஆறரை மணிக்கு திருஞானமும் ஜானகியும் பங்களாவிற்கு வந்து சேர்ந்தார்கள். சமையல்காரன் உள்ளே அழைத்துக்கொண்டு போனான்.

தேவராஜ முதலியார் கட்டிலின்மேல் பிரக்ஞையற்றவர் போலக் கிடந்தார். மார்பில் ஆன்டிபிளாஜிஸ்டின் போட்டு பிளானல் சுற்றிக் கட்டி யிருந்தது. அறை பூராவும் நீலகிரித் தைலம் வாசனை நிறைந் திருந்தது.

திருஞானம் சந்தடி செய்யாமல் தகப்பனர் தலைமாட்டில் போய் உட்கார்ந்து கொண்டான். அவருடைய முகத்தைக்கண்டதும் அவன் பதறிப் போனுன். ஆறு வருஷங்களுக்குள் அந்தப் பருத்த தேகம் எப்படிப் போயிருந்தது! உருண்ட முகம் வரட்சி யடைந்து உலர்ந்து போயிருந்தது!

கொஞ்ச நேரம் கழித்து முனகிக் கொண்டு அவர் கண் திறந் தார். சிறிது நேரம் மகனை மருண்டு மருண்டு பார்த்தார். பிறகு கண்களில் நீர் தாரைதாரையாகப் பெருகிற்று. தன்னுடைய வைராக்கி யம் தடுமாறிப் பிள்ளையைக் கண்டதும் கலங்கினதை அவன் பார்க்கக் கூடாது என்று நினைத்தவர்போல அவனை வெளியே போகும்படி சமிக்ஞை செய்தார்.

“அப்பா, என்ன செய்கிறது உங்களுக்கு?” என்று திருஞானம் பரிவுடன் கேட்டான்.

“ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை, போ!” என்று கரகரத்த குரலில் பதட்டத்துடன் சொன்னர்.

அவருடைய கோபமும் வைஷம்மியமும் அப்பொழுது கூடக் குறையாததைக் கண்டு திருஞானம் திகைத்தான். உடல் வலிமை குன்றி நோய் தலையெடுத்த அந்த நிலைமையிலாவது, அவர் தன்னை ஆவலுடன் வரவேற்பார் என்று அவன் எண்ணினன். வியாதியோ கிட்டப் போகும் மரணமோ அவர் உறுதியைக் கலைத்ததாகத் தெரிய வில்லை. அவர் கண்ணில் ஜலம் வந்தது; ஆனல் அது நோயின் வேதனையால் ஏற்பட்டதாகத்தான் இருக்கவேண்டும் என்று நினைத் தான் திருஞானம். அல்லது மனது இளகியும் அதை வெளிக்காட்ட இஷ்டமின்றி தான் அப்படிக் கடுகடுப்பாக இருக்க முயலுகிருரோ என்றும் ஒரு சமயம் எண்ணினன்.

“யார்—உனக்கு தகவல் கொடுத்தது—துரோகிகள்!—நான் சாகிறதற்கு முன்பு—உன்னை—நான் பார்க்க இஷ்டப்படவில்லை” என்று மிகவும் சிரமத்துடன் சொன்னர் முதலியார்.

ஆனல் அவர் சொன்னது ஒன்றும் அவன் காதில் ஏறவில்லை. அப்பொழுது அவர் மரணத்துடன் போராடும் காட்சி தான் அவன் புலனில் தாக்கிற்று. கிட்ட நெருங்கி மெதுவாக அவர் மார்பைத் தடவினன். மூச்சு ‘கர் கர்’ என்று தடைபட்டு வந்தது தெரிந்தது.

டாக்டர் வந்தார். நோயாளியைப் பரிசோதனை செய்துவிட்டு திருஞானம் பக்கம் திரும்பினர்.

“ஹிருதயம் பாதகமில்லே. ஆனல் சுவாசப் பைகளில் கபம் கட்டியிருக்கிறது. 'பாட்சு'கள் ரொம்ப இருக்கின்றன. இன்ஜெக்ஷன் தருகிறேன். மிக்ஸ்சரை விடாமல் கொடுங்கள். இரவு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும், மார்புக்கும் கால்களுக்கும் விடாமல் தவிடு ஒத்தடம் கொடுக்க வேண்டும்” என்று சொல்லி விட்டு திருஞானம் கேட்க வந்த கேள்வியைக் கூட எதிர் பார்க்காமல் டாக்டர் வெளியே போனர்.

வராண்டாவில் ஜானகி டாக்டரை அணுகி நோயாளியின் நிலைமையைப் பற்றிக் கேட்டாள். அவளைக் கண்டு டாக்டர் கொஞ்சம் பிரமித்துப்போனர். ஒரு நிமிஷம் பரக்கப் பரக்க விழித்துவிட்டு, “நிலைமை மோசம்தான். ஆனல் வெகு ஜாக்கிரதையாக நான் சொல்லுகிறபடி சிகிச்சை செய்துகொண்டு வந்தால் குணமாகலாம்” என்றார்.

“எப்படிச் செய்யச் சொல்லுகிறீர்களோ செய்கிறோம்.”

“விவரமாக உள்ளே தகவல் கொடுத்திருக்கிறேன்.”

“அப்படியா! தாங்க்ஸ்”.

இரவு உடம்பு நிலை கவலைக்கிடமாகி விட்டது. ஆனல் முனகலும் 'பிரட்டலும்' மட்டும் இருந்தன. பிரக்ஞை யில்லாததால் ஜானகி தைரியமாக அருகில் சென்று உட்கார்ந்து சுச்ருஷை செய்து கொண்டிருந்தாள்.

காலை வந்தது முதலே அவள் பங்களாவைச் சீர்திருத்த ஆரம்பித்து விட்டாள். பிறகு கிழவர் படுத்திருந்த அறையைச் சுத்தம் செய்து, அனுவசியமான பெஞ்சுகளையும் பீரோக்களையும் அப்புறப் படுத்தி, ஜன்னல்களை யெல்லாம் திறந்து விட்டு, அறையில் சூரிய வெளிச்சம் படும்படி செய்தாள். பிறகு தான் கொண்டு வந்திருந்த மெத்தை தலையணை முதலியவைகளைச் சுத்தமான உறைகள் போட்டு விரித்து மாமனரைப் புதுப் படுக்கையில் படுக்க வைத்தாள். கண்ணில் படாமல் தூர இருந்து கொண்டு காலம் தவறாமல் மருந்தும் ஆகாரமும் கொடுக்கச் செய்தாள். இரவு பிரக்ஞையற்றுப் போன பிறகுதான் கிட்டே வந்தாள்.

காலடியில் உட்கார்ந்து கொண்டு ஓயாமல் தவிடு ஒத்தடம் போட்டாள். மார்பிலும் பிளானலின்மேல் ஒத்தடம் கொடுத்தாள். கிழவர் ஜன்னியில் பிதற்றினர்.

“திருஞானம்! உன்னைப் பார்த்ததே போதும்! ஜானகி—அவளைப் பார்க்க வேணும்போல் இருக்கிறது—ஆனல்...அதோ இருக்கிறளே அவளா? வாம்மா! உன் வீட்டுக்கு வா! உன்னை உள்ளே நுழையாதே என்றேனே பாவி!”

இந்த மாதிரி கபம் கட்டிய கரகரத்த குரலில் பிதற்றிக்கொண்டே இருந்தார். ஒரு மணி வரையில் ஜானகி கண்கொட்டாமல் உட்கார்ந்து கொண்டு சிகித்சை செய்தாள். திருஞானம் கூட தலைமாட்டில் உட்கார்ந்து கொண்டு தூங்கி விழுந்தான்.

திடீரென்று ஒரு பெரிய இருமல் ஏற்பட்டது. கபக்கென்று எலுமிச்சம் காயளவு கபம் வெளியே வந்து விழுந்தது. மறுநிமிஷம் கிழவர் கண் திறந்து பார்த்தார்.

அறையின் ஒரு ஓரத்தில் மின்சார விளக்கு எரிந்துகொண்டிருந்தது. கிழவர் கண் திறந்ததும் காலடியில் உட்கார்ந்திருந்த ஜானகியைப் பார்த்தார். வெடக்கென்று கால்களை மேலே இழுத்துக் கொண்டார். அவர் பார்வையில் பீதி இருந்தது.

"ஈசுவரி! என்னைக் காப்பாற்று!" என்றார்.

"அப்பா, உங்கள் நாட்டுப்பெண்!"

கிழவர் எப்படியோ எழுந்து உட்கார்ந்து விட்டார். கீழே விழுந்துவிடப் போகிறார் என்று ஏககாலத்தில் திருஞானமும் ஜானகியும் இரண்டு புறமும் தோள்களைப் பிடித்துக் கொண்டார்கள்.

"அம்மா! வாம்மா! என் உயிர் போகுமுன் வந்தாயே! இப்பொழுது நான் நிம்மதியாக......ராஜராஜேஸ்வரி போல இருக்கிறாயே, உன்னை நான் வேண்டாம் என்றேன்!"

"நீங்கள் சாவதானமாகக் கொஞ்சம் படுத்துக் கொள்ளுங்களேன்!" என்று ஜானகி மரியாதையாகச் சொன்னாள்.

அந்தக் குரலைக் கேட்டு தேவராஜ முதலியார் முகம் மலர்ந்தது.

"ஜானகி, என்னை மன்னிப்பாயா?" என்று கண்களை மூடினார்.

ஜென்ம நக்ஷத்ர பலன்

கீழ்க்கண்ட நட்சத்திரங்களில் ஜெனித்தவர்களின் 15-7-39 முதல் 22-7-39 வரையுள்ள தினப்பலன்கள் :—

(1) அஸ்வனி-மகம்-மூலம்.

15-7-39 பகல் 11-57 வரை

சரீர சுகக்குறைவு. அலைச்சல். செய்தொழில் பிழையுறும்.

15-7-39 பகல் 11-57 முதல்
16-7-39 காலை 9-40 வரை

சர்வ காரிய அனுகூலம், மனோ உல்லாசம், லாபம். தரத்தக்க எக்காரியம் செய்யினும் பலன் தரும்.

16-7-39 காலை 9-40 முதல்
17-7-39 காலை 6-58 வரை

இஷ்டகாரியத் தடை. மனோ வேதனை. அலைச்சல் திரிச்சல், அகால போஜனம், அல்லது வீண் பகை எதினும் ஜாக்கிரதையாய் இருக்கின் நலம்.

17-7-39 காலை 6-58 முதல்
18-7-39 இரவு 1-16 வரை

சமப்பலன் காரியங்களில் தாமத நன்மை.

18-7-39 இரவு 1-16 முதல்
19-7-39 இரவு 10-38 வரை

மனோகிலேசம், தடை, கலகம், பீதி, அறிந்து காரியங்களை சாதுர்யமாய்ச் செய்யின் நலம்.

19-7-39 இரவு 10-38 முதல்
20-7-39 இரவு 8-23 வரை

தேகாரோக்கியம். காரியானுகூலம். தனலாபம், காரியார்த்தமாக ஒருவரைக் காணில் நலம் தரும்.

20-7-39 இரவு 8-23 முதல்
21-7-39 மாலை 6-35 வரை

எதிர் பாராத சங்கடங்கள், பிரயாண அலைச்சல், நற்காரியங்களைத் துடங்கின் திக்குண்டாகும், நற்காரியார்த்தமாக ஒருவரைக் காணினும், மனோபேதத்துடன் காரியமும் கூடாது. எனினும் முன் ஜாக்கிரதையோடு நடக்கின் நலம்.

21-7-39 மாலை 6-35 முதல்
22-7-39 மாலை 5-23 வரை

எக்காரியம் எடுக்கினும் மிக்க ஜயம். மனோ உல்லாசம். நற்சினேகம் பெரியோர் பேட்டி, அனுமத்து லாபங்களடைய உத்தேசித்தாலும் மிகு பலன் தரும். மகா உன்னத நாள்.

(2) பரணி-பூரம்-பூராடம்.

15-7-39 பகல் 11-57 வரை

எக்காரியம் எடுக்கினும் மிக்க ஜயம். மனோ உல்லாசம். நற்சினேகம். பெரியோர் பேட்டி. அனுமத்து லாபங்களடைய எத்தனிக்கினும் மிக பலன் தரும். மகா உன்னத நாளாம்.

15-7-39 பகல் 11-57 முதல்
16-7-39 காலை 9-40 வரை

முடக்கம். மனோபேதம். சிறுபகை. மறதி.

16-7-39 காலை 9-40 முதல்
17-7-39 காலை 6-58 வரை

சர்வகாரிய அனுகூலம். மனோ உல்லாசம். லாபந் தரத்தக்க எக் காரியம் செய்யினும் பலன் தரும்.

17-7-39 காலை 6-58 முதல்
18-7-39 இரவு 1-16 வரை

இஷ்ட காரியத்தடை, மனோவேதனை, அலைச்சல், திரிச்சல், அகால போஜனம், அல்லது வீண்பகை, எதினும் ஜாக்ரதையாயிருப்பின் நலமாம்.

18-7-39 இரவு 1-16 முதல்
19-7-39 இரவு 10-38 வரை

சமப்பலன். காரியங்களில் தாமத நன்மை. சில இக்கட்டுகள் சேர்ந்து பின் நலமாம்.

19-7-39 இரவு 10-38 முதல்
20-7-39 இரவு 8-23 வரை

மனோகிலேசம், நஷ்டம், கலகம், பீதி, அறிந்து காரியங்களைச் சாதுர்யமாய்ச் செய்யின் நலமாம்.

20-7-39 இரவு 8-23 முதல்
21-7-39 மாலை 6-35 வரை

தேகாரோக்கியம். காரியானுகூலம். தன லாபம். காரியார்த்தமாக ஒருவரைக் காண நலந்தரும்.

21-7-39 மாலை 6-35 முதல்
22-7-39 மாலை 5-23 வரை

எதிர் பாராத சங்கடங்கள். பிரயாண அலைச்சல், நற்காரியங்களைத் தொடங்கின் தீங்குகளுண்டாகும். நற்காரியார்த்தமாக ஒருவரைக் காணினும் மனோபேதத்துடன் காரியமும் கூடாது. எனினும் முன் ஜாக்கிரதையோடு நடக்கின் நலமாம்.

(3) கார்த்திகை-உத்திரம்-உத்திராடம்.

15-7-39 பகல் 11-57 வரை

எதிர்பாராத சங்கடங்கள். பிரயாண அலைச்சல் நற்காரியங்களைத் தொடங்கின் தீங்குகளுண்டாகும். நற்காரியார்த்தமாக ஒருவரைக் காணி

னும் மனோபேதத்துடன் காரியமும் கூடா. எதினும் முன் ஜாக்ரதையோடு நடக்கின் நலமாம்.

15-7-39 பகல் 11-57 முதல்
16-7-39 காலை 9-40 வரை

எக்காரியம் எடுக்கினும் மிக்க ஜயம். மனோ உல்லாசம், நற்சினேகம், பெரியோர் பேட்டி, அனுமத்து லாபங்களடைய எத்தனிக்கினும் மிகுபலன் தரும். மகா உன்னத நாளாம்.

16-7-39 காலை 9-40 முதல்
17-7-39 காலை 6-58 வரை

மந்தம். வீண் சிந்தனை. தொழில் செவ்வனே நடைபெறாது.

17-7-39 காலை 6-58 முதல்
18-7-39 இரவு 1-16 வரை

சர்வகாரிய அனுகூலம். மனோ உல்லாசம், லாபந் தாத்தக்க எக்காரியம் செய்யினும் பலன் தரும்.

18-7-39 இரவு 1-16 முதல்
19-7-39 இரவு 10-38 வரை

இஷ்டகாரியத்தடை, மனோவேதனை, அலைச்சல், திரிச்சல், அகால போஜனம், அல்லது வீண்பழை எதினும் ஜாக்கிரதையாயிருக்கின் நலம்.

19-7-39 இரவு 10-38 முதல்
20-7-39 இரவு 8-23 வரை

சமப்பலன். காரியங்களில் தாமத நன்மை. சில இக்கட்டுகள் நேர்ந்த பின் நலமாம்.

20-7-39 இரவு 8-23 முதல்
21-7-39 மாலை 6-35 வரை

மனோகிலேசம், நடை, கலகம், பீதி, அறிந்து காரியங்களைச் சாதுர்யமாய் செய்யின் நலமாம்.

21-7-39 மாலை 6-35 முதல்
22-7-39 மாலை 5-23 வரை

தேகாரோக்கியம், கார்யானுகூலம், தனலாபம், காரியார்த்தமாக ஒருவரைக்காண நலந்தரும்.

(4) ரோகணி-அஸ்தம்-திருவோணம்.

15-7-39 பகல் 11-57 வரை

தேகாரோக்யம், காரியானுகூலம், தனலாபம், காரியார்த்தமாக ஒருவரைக்காண நலந்தரும்.

15-7-39 பகல் 11-57 முதல்
16-7-39 காலை 9-40 வரை

எதிர்பாராத சங்கடங்கள், பிரயாண அலைச்சல், நற்காரியங்களைத் தொடங்கின் தீங்குகளுண்டாகும். நற்காரியார்த்தமாக ஒருவரைக் காணினும் மனோபேதத்துடன்காரியமுங் கூடாது. எதினும் முன் ஜாக்ரதையாயிருக்கின் நலமாம்.

16-7-39 காலை 9-40 முதல்
17-7-39 காலை 6-58 வரை

எக்காரியம் எடுக்கினும் மிக்க ஜயம். மனோ உல்லாசம். நற்சிநேகம். பெரியோர் பேட்டி. அனுமத்து லாபங்களடைய எத்தனிக்கினும் மிகு பலன் தரும். மகா உன்னத நாளாம்.

17-7-39 காலை 6-58 முதல்
18-7-39 இரவு 1-16 வரை

மந்தம் காரியத்தவக்கம். நூதன சேதியால் கலக்கம்.

18-7-39 இரவு 1-16 முதல்
19-7-39 இரவு 10-38 வரை

சர்வகாரிய அனுகூலம். மனோ உல்லாசம். லாபந்தரத்தக்க எக்காரியம் செய்யினும் பலன் தரும்.

19-7-39 இரவு 10-38 முதல்
20-7-39 இரவு 8-23 வரை

இஷ்டகாரியத்தடை, மனோவேதனை, அலைச்சல், திரிச்சல், அகாலபோஜனம், அல்லது வீண்பகை. எதினும் ஜாக்ரதையாயிருப்பது நலம்.

20-7-39 இரவு 8-23 முதல்
21-7-39 மாலை 6-35 வரை

சமப்பலன், காரியங்களில் தாமத நன்மை. சிலதடைகள் நேர்ந்து பின் னலமாம்.

21-7-39 மாலை 6-35 முதல்
22-7-39 மாலை 5-23 வரை

மனோகிலேசம், நடை, கலகம், பீதி, அறிந்து காரியங்களைச் சாதுர்யமாய்ச் செய்தல் நலமாம்.

(5) மிருகசிரம்-சித்திரை-அவிட்டம்.

15-7-39 பகல் 11-57 வரை

மனோகிலேசம், நடை, கலகம், பீதி, அறிந்து காரியங்களைச் சாதுர்யமாய்ச் செய்யின் நலம்.

15-7-39 பகல் 11-57 முதல்
16-7-39 காலை 9-40 வரை

தேகாரோக்கியம், கார்யானுகூலம், தனலாபம், காரியார்த்தமாக ஒருவரைக்காணில் நலந்தரும்.

16-7-39 காலை 9-40 முதல்
17-7-39 காலை 6-58 வரை

எதிர்பாராத சங்கடங்கள். பிரயாண அலைச்சல், நற்காரியங்களைத் தொடங்கின் திங்குகளுண்டாகும். நற்காரியார்த்தமாக ஒருவரைக் காணினும் மனோபேதத்துடன் காரியமும் கூடாது. எதினும் முன் ஜாக்ரதையோடு நடக்கின் நலம்.

17-7-39 காலை 6-58 முதல்
18-7-39 இரவு 1-16 வரை

எக்காரியம் எடுக்கினும் மிக்க ஜயம். மனோ உல்லாசம். நற்சினேகம். பெரியோர் பேட்டி, அனுமத்து லாபங்களடைய எத்தனிக்கினும் மிகு பலன் தரும். மகா உன்னதநாள்.

18-7-39 இரவு 1-16 முதல்
19-7-39 இரவு 10-38 வரை

நலமிலா தலைச்சல், நல்லோர்பகை. கார்யாலீசம், அறிவாலறிந்து அகற்றுக.

19-7-39 இரவு 10-38 முதல்
20-7-39 இரவு 8-23 வரை

சர்வகாரிய அனுகூலம். மனோ உல்லாசம். லாபந்தாத்தக்க எக்காரியம் செய்யினும் பலன் தரும்.

20-7-39 இரவு 8-23 முதல்
21-7-39 மாலை 6-35 வரை

இஷ்ட காரியத்தடை, மனோ வேதனை, அலைச்சல், இரிச்சல், அகால போஜனம், அல்லது வீண்பகை. எதினும் ஜாக்ரதையாய் இருக்கின் நலம்.

21-7-39 மாலை 6-35 முதல்
22-7-39 மாலை 5-23 வரை

சமப்பலன், காரியங்களில் தாமத நன்மை, சில இக்கட்டுகள் நேர்ந்து பின்னலமாம்.

(6) திருவாதிரை-சுவாதி-சதயம்.

15-7-39 பகல் 11-57 வரை

சமப்பலன். காரியங்களில் தாமத நன்மை. சிலதடைகள் நேர்ந்து பின்னலமாம்.

15-7-39 பகல் 11-57 முதல்
16-7-39 காலை 9-40 வரை

மனோ கிலேசம், நடை, கலகம், பீதி, அறிந்து காரியங்களைச் சாதுர்யமாய்ச் செய்யின் நலமாம்.

16-7-39 காலை 9-40 முதல்
17-7-39 காலை 6-58 வரை

தேகரோக்கியம், காரியானுகூலம், தனலாபம், காரியார்த்தமாக ஒரு வரைக்காணில் நலந்தரும்.

17-7-39 காலை 6-58 முதல்
18-7-39 இரவு 1-16 வரை

எதிர்பாராத சங்கடங்கள், பிரயாண அலைச்சல் நற்காரியங்களைத் தொடங்கின் தீங்குகளுண்டாகும், நற்காரியார்த்தமாக ஒருவரைக்காணினும், மனோபேதத்துடன் காரியமும் கூடாது. எதினும் முன் ஜாக்ரதையோடு நடக்கின் நலம்.

18-7-39 இரவு 1-16 முதல்
19-7-39 இரவு 10-38 வரை

எக்காரியம் எடுக்கினும் மிக்க ஜயம், மனோ உல்லாசம், நற்சிநேகம், பெரியோர் பேட்டி. அனுமத்து லாபங்களடைய எத்தனிக்கினும் மிகுபலன் தரும். மகா உன்னத நாளாம்.

19-7-39 இரவு 10-38 முதல்
20-7-39 இரவு 8-23 வரை

மந்தம். காரியமுடக்கம், மனோபீதி. எதினும் யோசித்து நடத்தல் நலமாம்.

20-7-39 இரவு 8-23 முதல்
21-7-39 மாலை 6-35 வரை

சர்வகாரிய அனுகூலம், மனோ உல்லாசம் லாபந்தரத்தக்க எக்காரியம் செய்யினும் பலன் தரும்.

21-7-39 மாலை 6-35 முதல்
22-7-39 மாலை 5-23 வரை

இஷ்ட கார்யத்தடை, மனோ வேதனை, அலைச்சல் திரிச்சல், அகால போஜனம் அல்லது வீண் பகை. எதினும் ஜாக்ரதையாய் நடத்தல் அவசியம்.

(7) புனர்பூசம்-விசாகம்-பூரட்டாதி.

15-7-39 பகல் 11-57 வரை

சமப் பலன். காரியங்களில் தாமத நன்மை. சில தடைகள் நேர்ந்து பின் நலமாம்.

15-7-39 பகல் 11-57 முதல்
16-7-39 காலை 9-40 வரை

மனோக்லேசம், நடை, கலகம், பீதி, அறிந்து காரியங்களைச் சாதுர்யமாய்ச் செய்யின் நலமாம்.

16-7-39 காலை 9-40 முதல்
17-7-39 காலை 6-58 வரை

தேகாரோக்கியம், காரியானுகூலம், தனலாபம், நற்காரியார்த்தமாக ஒருவரைக் காணில் உத்தமமாம்.

17-7-39 காலை 6-58 முதல்
18-7-39 இரவு 1-16 வரை

எதிர்பாராத சங்கடங்கள், பிரயாண அலைச்சல், நற்காரியங்களைத் தொடங்கின் தீதுகள் உண்டாகும். நற்காரியார்த்தமாக ஒருவரைக் காண நேரினும் மனோபேதத்துடன் காரியமும் கூடாது. எதினும் முன் ஜாக்ரதையோடு நடக்கின் நலம்.

18-7-39 இரவு 1-16 முதல்
19-7-39 இரவு 10-38 வரை

எக்காரியம் எடுக்கினும் மிக்க ஜயம், மனோ உல்லாசம், நற்சிநேகம், பெரியோர் பேட்டி. அனுமத்து லாபங்களடைய எத்தனிக்கினும் மிகு பலன் தரும். மகா உன்னத நாளாம்.

19-7-39 இரவு 10-38 முதல்
20-7-39 இரவு 8-23 வரை

மந்தம். காரியத் தவக்கம், மதி மயக்கம், எத்தொழிலும் ஆராய்ந் தோய்ந்து செய்யின் நலம்.

20-7-39 இரவு 8-23 முதல்
21-7-39 மாலை 6-35 வரை

சர்வ காரிய அனுகூலம். மனோ உல்லாசம். லாபந்தரத் தக்க எக்காரியம் செய்யினும் பலன் தரும்.

21-7-39 மாலை 6-35 முதல்
22-7-39 மாலை 5-23 வரை

இஷ்ட காரியத் தடை, மனோ வேதனை, அலைச்சல், திரிச்சல், அகால போஜனம், அலது வீண் பகை. எதிலும் ஜாக்ரதையாயிருக்கின் நலம்.

(8) பூசம்-அனுஷம்-உத்திரட்டாதி.

15-7-39 பகல் 11-57 வரை.

இஷ்ட காரியத்தடை, மனோவேதனை, அலைச்சல், திரிச்சல், அகால போஜனம், அல்லது வீண் பகை, எதிலும் ஜாக்கிரதையாய் இருக்கின் நலமாம்.

15-7-39 பகல் 11-57 முதல்
16-7-39 காலை 9-40 வரை

சமப்பலன், காரியங்களில் தாமத நன்மை. சில இக் கட்டுகள் நேர்ந்து பின் நலமாம்.

16-7-39 காலை 9-40 முதல்
17-7-39 காலை 6-58 வரை

மனோகிலேசம், நடை, கலகம், பீதி, அறிந்து காரியங்களைச் சாதுர்யமாய்ச் செய்யின் நலமாம்.

17-7-39 காலை 6-58 முதல்
18-7-39 இரவு 1-16 வரை

தேகாரோக்கியம், காரியானுகூலம், தனலாபம், காரியார்த்தமாக ஒருவரைக் காணில் நலந்தரும்.

18-7-39 இரவு 1-16 முதல்
19-7-39 இரவு 10-38 வரை

எதிர் பாராத சங்கடங்கள், பிரயாண அலைச்சல், நற்காரியங்களைத் துடங்கின் தீங்குகளுண்டாகும். நற்காரியார்த்தமாக ஒருவரைக் காணினும் மனோ பேதத்துடன் காரியமும் கூடாது. எதினும் முன் ஜாக்ரதையோடு நடக்கின் நலம்.

19-7-39 இரவு 10-38 முதல்
20-7-39 இரவு 8-23 வரை

எக்காரியம் எடுக்கினும் மிக்க ஜெயம். மனோ உல்லாசம். நற்சினேகம், பெரியோர் பேட்டி, அனுமத்து லாபங்களடைய எத்தனிக்கினும் மிகு பலன் தரும் மகா உன்னத நாளாம்.

20-7-39 இரவு 8-23 முதல்
21-7-39 மாலை 6-35 வரை

மந்தம், காரியஹீனம். வீண் அலேச்சல். நன் முயற்சியால், பலன் தரும்.

21-7-39 மாலை 6-35 முதல்
22-7-39 மாலை 5-23 வரை

சர்வகாரிய அனுகூலம். மனோ உல்லாசம். லாபந் தரத்தக்க எக்காரியம் செய்யினும் பலன்தரும்.

(9) ஆயில்யம்-கேட்டை-ரேவதி.

15-7-39 பகல் 11-57 வரை

சர்வகாரிய அனுகூலம். மனோ உல்லாசம், லாபந் தரத்தக்க எக்காரியம் செய்யினும் பலன் தரும்.

15-7-39 பகல் 11-57 முதல்
16-7-39 காலை 9-40 வரை

இஷ்ட காரியத் தடை, மனோவேதனை, அலேச்சல், திரிச்சல், அகால போஜனம், அல்லது வீண்பகை எதினும் ஜாக்ரதையாய் இருக்கின் நலம்.

16-7-39 காலை 9-40 முதல்
17-7-39 காலை 6-58 வரை

சமப்பலன். காரியங்களில் தாமத° நன்மை. சில இக் கட்டுகள் நேர்ந்து பின்னலமாம்.

17-7-39 காலை 6-58 முதல்
18-7-39 இரவு 1-16 வரை

மனோகிலேசம், நடை, கலகம், பீதி, அறிந்து காரியங்களைச் சாதுர்யமாய்ச் செய்யின் நலமாம்.

18-7-39 இரவு 1-16 முதல்
19-7-39 இரவு 10-38 வரை

தேகாரோக்கியம், காரியானுகூலம், தனலாபம், காரியார்த்தமாக ஒருவரைக் காண நலந்தரும்.

19-7-39 இரவு 10-38 முதல்
20-7-39 இரவு 8-23 வரை,

எதிர் பாராத சங்கடங்கள், பிரயாண அலேச்சல், நற்காரியங்களைத் தொடங்கின் திக்குகளுண்டாகும், நற்காரியார்த்தமாக ஒருவரைக் காணினும் மனோபேதத்துடன் காரியமும் கூடாது. எதினும் முன் ஜாக்ரதையாய் இருப்பின் நலம்.

20-7-39 இரவு 8-23 முதல்
21-7-39 மாலை 6-35 வரை

எக்காரியம் எடுக்கினும் மிக்க ஜயம். மனோ உல்லாசம். நற்சினேகம். பெரியோர் பேட்டி. அனுமந்த லாபங்களடைய எத்தனிக்கினும் மிகு பலன் தரும். மகா உன்னதமான நாளாம்.

21-7-39 மாலை 6-35 முதல்
22-7-39 மாலை 5-23 வரை

மந்தம் காரியத் தவக்கம்.

என்ன நெருக்கடியோ?

(கரிச்சான்)

திருவல்லிக்கேணி ஹைரோடு காலை நேரத்தில் அவ்வளவு சந்தடியுள்ளதாக இருப்பதில்லை. இரண்டு பக்கங்களிலும் செல்லும் டிராம், ஏதாவதொரு காலை மோட்டார், சில சைகில்கள்,—ஓரிரண்டு குப்பை வண்டிகள்—இவற்றைத்தவிர வேறு தடபுடலே கிடையாது. ஜன நடமாட்டம் கூட அப்பொழுது அவ்வளவு அதிகமாக இருப்பதில்லை.

பொழுதுபோகாததால் ஜன்னல் வழியாகத் தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தேன். எதிர் வீட்டில் ஒரு மார்வாடியின் கடை. அதற்குமட்டும் காலையிலிருந்து ஜனங்கள் வந்து போய்க்கொண்டே இருந்தார்கள். நகைகளை மூடிக்கொண்டு வந்து கொடுத்துவிட்டு அவன் கொடுத்த பணத்தை வாங்கிக்கொண்டு போனார்கள்.

ஒரு ரிக்ஷா வந்து நின்றது—அந்த வீட்டு வாசலில். ரிக்ஷாக்காரன் வண்டியிலிருந்த பெண்ணுக்கு கடையைச் சுட்டிக்காட்டினான். அவள் கீழே இறங்கி ஒரு தடவை தெருவை மேலும் கீழுமாகப் பார்த்தாள். அவள் ஒரு நாயுடு ஸ்திரீ; வயது சுமார் முப்பதிருக்கும். நல்ல தேகக்கட்டும் அழகும் உடையவளாக இருந்தாள். ஒரு ஸ்பன் ஸில்க் புடவையை நேர்த்தியாகக் கட்டிக்கொண்டிருந்தாள். சடக்கென்று மார்வாடியின் கடைப்படியில் ஏறினாள்.

தன் மடியிலிருந்து இரண்டு சிறு காப்புகளை எடுத்து அவன் கையில் கொடுத்தாள். ஒரு வருஷத்துக் குழந்தையின் கைக்காப்புகளாக இருக்கவேண்டும். கொடுக்கும்போது அவள் முகம் விகாரமடைந்தது. அவளுடைய கைகளில் ஒரே ஒரு ஜதை காப்புகள் இருந்தன. கழுத்தில் சரடுகூட இல்லை.

மார்வாடி காப்புகளைத் திருப்பித் திருப்பிப்பார்த்தான். உரைகல்லில் உரைத்துப்பார்த்தான்.

"பத்து ரூபாய்!" என்று சுருக்கமாகச் சொன்னான் கடைசியாக.

"முக்கால் பவுன் ஆயிற்றே!" என்று அவள் ஆச்சரியத்துடன் கேட்டாள். அந்த ஆச்சரியத்தில் அவள் துக்கம்கூட மங்கிப் போயிற்று!

"மட்டம்—கலப்பு—பத்து ரூபாய் ஜாஸ்தி" என்று ஒவ்வொரு வார்த்தையாக அரைகுறைத் தமிழில் சொன்னான் மார்வாடி.

"இல்லையப்பா! இப்பொழுதுதான் புதிதாகச் செய்தது!"

மார்வாடி பதிலே சொல்லாமல் காப்புகளைத் திருப்பிக்கொடுக்கும் பாவனையாகக் கையை நீட்டினான்.

அவளுடைய முகத்தில் அப்பொழுது தென்பட்ட துக்கத்தைப் பார்க்கக்கூட எனக்கு மனம் வரவில்லை. நான் கவனிப்பது அவளுக்குத் தெரியாது. யாராவது தான் அங்கிருப்பதைப் பார்ப்பதற்குமுன்

அவ்விடம் விட்டுச்சென்று விடவேண்டும் என்று அவள் பதைத்துக் கொண்டிருந்தது அவளுடைய ஒவ்வொரு அங்க சேஷ்டையிலும் வார்த்தையிலும் வெளியாயிற்று. அதை உடனே கிரகித்துக்கொள்ள மார்வாடிக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டுமா?

"பனிரண்டு ரூபாயாவது—" என்று அவள் கெஞ்சிக்கொண்டு சொல்லி முடிப்பதற்கு முன் மார்வாடி காப்பைக்கீழே வைத்து விட்டான். வேறுகாரியத்தைக் கவனிப்பதுபோல் மற்றொரு பக்கம் திரும்பிக்கொண்டான்.

பாவம் ஸ்திரீ என்ன செய்வது என்று தெரியாமல் அப்படியே நின்றுபோய் விட்டாள்.

"உங்க கொளக்தெ காப்பாம்மா?" என்று பக்கத்தில் மற்ெருரு பெண்ணின் குரல் கேட்டவுடன்தான் அவளுக்கு நினைவு வந்தது. அவளை அறியாமல் அவள் கண்களில் நீர் ததும்பிக்கொண்டிருந்தது. கேள்விக்கு ஒன்றும் பதில் சொல்லாமல் காப்புகளைக் கையில் எடுத்து மூடிக்கொண்டுபோய் ரிக்ஷாவில் ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

அப்பொழுது நான் அவளை நன்ருகப்பார்க்க முடிந்தது. நடை உடை பாவனைகளில் ஒரு கம்பீரமும், மேன்மையும், நாகரிகமும் இருந்தன. ஒரு கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பது தெரிந்தது. ஆனல் கவலையும் வேதனையும் அவள் அழகைப்பிய்த்துத் தின்றுக்கொண்டிருந்ததும் தெரிந்தது.

"எங்கே போகணும்மா?" என்று ரிக்ஷாக்காரன் கேட்டான்.

"வேறே கடைக்கு!" என்று கோபத்துடன் சீறினள் அவள்.

"இந்தக்கடைதான் கொஞ்சம் நாணயம், தாராளம்கூட அம்மா!"

"சொன்னபடி கேள்!" என்று அவள் எரிந்து விழுந்தாள்.

இரண்டு வீடு தள்ளி மற்றெரு கடை. அதில் ஒரு வாலிபன் உட்கார்ந்திருந்தான். அவனிடம் காப்புகளைக் காட்டினள். அவன் ஒருதரம் அவளையும் மற்றெரு தரம் காப்புகளையுமாக மாறி மாறிப் பார்த்துக்கொண்டு, "வேறே—எங்கே—காமுச்சிங்கோ?" என்று புன்சிரிப்புடன் கேட்டான்.

"இல்லே—ஆமாம்!" என்று சொல்லும்பொழுது அவள் புழு வாகத் துடித்தாள்.

"எட்டு ரூபாய்!" என்ருன் அவன் சாவதானமாக.

தலை கிறுகிறுத்ததுபோல அவள் தள்ளாடினள். கடைக்கதவை ஒருகையால் பிடித்துக்கொண்டாள். மார்வாடி அவளைப்பார்த்து புன் சிரிப்புச் சிரித்தான் மறுபடியும். காப்புகளை அவன் கையிலிருந்து பிடுங்குபவள் போல அவற்றைத்திரும்பி வாங்கிக்கொண்டுபோய் ரிக்ஷாவில் ஏறினள்.

"எங்கே போகணும்மா?"

"வீட்டுக்குத்திரும்பு!" என்று சொன்னவள் மறுபடியும் எதையோ நினைத்துக்கொண்டு நடுநடுங்கினள். அவள் முகத்தில் பயமும் துக்கமும் தென்பட்டன.

"இல்லே, இரு. இந்தா இதை முதல் கடையில் கொடுத்து, பத்து ரூபாய் கொடுப்பான், வாங்கிக்கொண்டுவா!"

ரிக்ஷாவில் உட்கார்ந்து கொண்டிருந்தவள் கண்ணீர் உதிர்த்து விம்மினள். மறுநிமிஷம் சுய நினைவுபெற்று யாராவது தன்னை கவனிக்கிருர்களோ என்று அங்குமிங்கும் பார்த்தாள்.

திருடன்போல நான் சடக்கென்று பின்வாங்கி மறைந்தேன். அவளுடைய வாழ்க்கையில் அன்று என்ன நெருக்கடியோ?

கோல்ட்ஸ்மித் எழுதியது என் மனதிற்கு வந்தது.

"சோகக்காட்சிகளைக்கண்டு உருகும்படியும் வைத்து, துயரத்தை அகற்ற சக்தியும் அற்றவனய் என்னை ஏன் சிருஷ்டித்தாய், ஈசா?"

தாய்

(சி. சு. செல்லப்பா)

நல்ல முன்னிருட்டுக் காலம். வானத்துக்கும் பூமிக்கும் ஒரே கருப்பாக இருந்தது தெரு முழுவதும். அஸ்தமித்து ஒரு நாழிகைக்கே ஏற்றி விட்டுப் போன தெரு யூனியன் லாந்தல் படர்ந்து எரிந்து, கண்ணாடிப் பக்கங்களை ஒரே புகையடையாக அப்பி, ஒளியை வெளியே காட்ட முடியாமல் புழுங்கிப் போய் கிடந்தது. குளிர்காற்று மூச்சுத் தடுமாற வெளியே வீசிக்கொண்டிருந்தது. தேகத்தில் பட்ட மாத்திரத்தில் ஒரு விட விடப்பை உண்டாக்கி, பல்லை கிட்டிவைத்துக் கொண்டிருந்தது.

மணி பத்துக்கு மேலாகி தெருவெங்கும் நிசப்தமாக இருந்தது. மௌனத்தின் உஸ் ஓசைமட்டும் படம் எடுத்த சர்ப்பத்தின் சீற்றம்போல தொடர்ச்சியாகக் கேட்டுக்கொண்டிருந்தது. நடுவே நடுவே சுவர்க் கோழியின் கத்தலும், சேர்வதும் நிற்பதுமாக இருக்கும். திடீர் திடீரென ஆகார வேட்டைக்கு வெளியே புறப்பட்ட பல்லிகள் தலைக்கு மேலாக சுவர்ப் பக்கங்களில் பதுங்கி பாய்ந்து வால்களை படபடவென்று அடித்துக் கொள்ளும் சப்தம் கிளம்பும். அவைகளிடம் அகப்படாமல் தப்பி யோடப் பார்க்கும் பாச்சை, கரப்புகளின் இறகடிப்பு சப்தமும் சேரும்.

எல்லாம் சேர்ந்து திண்ணையில் படுத்திருந்த என் தூக்கத்துக்கு உலை வைத்துக்கொண்டிருந்தன. கண்களை மூடி மூடித் திறந்து வெளிப்புறத்திலே, இருட்டின் உட்புறத்திலே கண்களை செலுத்துவதுமாக இருந்தேன்.

வீட்டின் உட்புற கூடத்து அறையிலே இருந்து தங்கை கைக்குழந்தையின் வீறிட்ட சப்தம் கிளம்பினது. முறைப்படி அந்த சிசுவுக்கு பால் போட்ட வேண்டிய நேரம் வந்து விட்டது என்பதுதான் அந்த வீறிடலின் அர்த்தம். குழந்தையின் அழுகை தாயை எழுப்ப முடியவில்லை. அவள் அசந்து தூங்கிக் கொண்டிருந்தாள்.

'ராஜம்! ராஜம்!' என்று திண்ணையில் படுத்திருந்தவாறே அவள் அறை ஜன்னல் ஓரமாக கூவி எழுப்பி, குழந்தைக்கு பால் போட்டச் சொன்னேன்.

ராஜம் எழுந்து படுக்கையறை விளக்கைப் பெரிதாக்கி குழந்தைக்கு பால் போட்ட ஏற்பாடுகளை செய்யத் தொடங்கினாள். அவள் அறையிலிருந்து மெல்லியதாகக் கிளம்பின வெளிச்சம் என் திண்ணையில் விழுந்து, மங்கலாகத் தெருவிலும் போய் விழுந்தது.

திடீரென்று எதிரே இருந்த ஒரு திண்ணையிலிருந்து ஒரு குழந்தைக் குரல் வீறிட்டு கிளம்பினது. பாழடைந்து போய் குடி இல்லாமல் கிடக்கும் அந்த நீண்ட திண்ணை வெகுகாலமாக பிச்சைக்காரர்கள் இரவில் படுத்துக் கொள்ளும் வாசஸ்தலமாக இருந்து வருகிறது. அவர்களை வரவொட்டாமல் தடுக்க திண்ணைக்கு இரும்பு கிராதிபோடும் யுக்தி ஒருவருக்கும் அதுவரையில் தோன்றவும் இல்லை.

அப்படி படுக்கும் ஒரு குடும்பத்தின் குழந்தைதான் அப்போது கத்தினது என்று எனக்கு நன்றாக தெரியும். அந்த குழந்தை அழவும் இரண்டு பெரிய குரல்கள் உடனே எழுந்து அதை தணிக்கும் ரீதியில் ஆச்வாசப்படுத்தின. ஆனால் அந்த குழந்தையின் அலறல் மட்டும் நின்றபாடில்லை. இங்கே என் தங்கை குழந்தையின் அழுகையை அடக்கி பால் போட்டிக்கொண்டிருந்தாள்.

பிச்சைக்காரி விதவிதமான தாலாட்டுப் பாட்டுகள் சொல்லியும் அவள் குழந்தையின் அலறல் நின்றபாடில்லை. கர்ண கடூரமாக இருந்தது எனக்கு. ' இதென்னடா சனியன் பாதிராத்திரியில்! பீடைகள் ' என்று வாய்விட்டு முனகினேன்.

உள்ளிருந்து என் தங்கை சிரித்துக்கொண்டே கேட்டாள்: 'என் அண்ணா, பாவம்! நம் வீட்டு பிடாரி கத்தவில்லையோ? அதுக்கு என்ன பண்ணுகிறாய்? அதே மாதிரித்தானே, அவர்களை ஏன் விரட்டவேண்டும்? வயிற்றுக்கு இல்லாமல் அழுகிறதோ என்னமோ? பாவம்!' என்று ஒரு தாயின் மனப்பான்மையில், என் நினைப்புக்கு எதிர்க்கட்சி பேசி நியாயம் காட்டினாள்.

எங்கள் இந்த பேச்சுக்கு நடுவில், பிச்சைக்காரக் குழந்தையின் அலறலுக்கு இடையில், திண்ணையில் அதோடு இருந்த இரண்டு குரல்களின் குசுகுசுவென்ற சம்பாஷணையும், வார்த்தைகள் உருப்படி இல்லாமல் என் காதுகளில் விழுந்தது.

ராஜம் விளக்கை சிறிதாக்கிக்கொண்டிருந்தாள். எதிர் திண்ணையிலிருந்து ஒரு அவசரக்குரல் கத்தினது. 'போலெ சீக்கிரம். அவுக விளக்கை அணைச்சுப்பிட்டு படுக்கப்போறாக. ஒளிச்சுக்கிட்டு நடக்கிறே' என்று கேட்டது.

' என்னடா இது,' என்று திண்ணைக்கு வெளியே இருட்டில் ஊடுருவி பார்த்தேன். எதிர் திண்ணையில் மினுக் மினுக்கென்று எரிந்துகொண்டிருந்த விளக்கு வெளிச்சத்தில் ஒரு நிழல் என் பக்கத்தை நோக்கி வருவது தெரிந்தது. அதே சமயம் 'ஏ, அம்மா, சாமி! கொஞ்சம் வென்னித் தண்ணி இருந்தா கொடுக்க மாட்டீங்களா? பிள்ளை பசியாலே துடிக்குது. புண்யமுண்டுங்கம்மா உங்களுக்கு. பச்சைப்புள்ளை ' என்று முழுக் கெஞ்சலுடன் கேட்டாள் அந்த பிச்சைக்காரி.

'வென்னிராவது, பச்சைத் தண்ணியாவது? இந்த பாதிராத்திரி நேரத்திலே. நல்லா கேட்டே போ, போ. வேலையில்லே' என்று படுக்கையிலிருந்தே நான் கத்தினேன். பிச்சைக்காரி கேட்டு பாதி இரவில் ரொம்பப்பேர்கள் அல்லவா சிரத்தையாக அவள் கேட்டதை கொடுப்பார்கள்?

அறை ஜன்னலோரம் நின்ற ராஜத்தின் காதுகளில் இது விழுந்தது: 'சாமி, சாமி, அப்படி சொல்லாதீங்க; புண்யமுண்டு. பச்சைப்புள்ளை' என்று திண்ணையில் குழந்தையை வைத்துக்கொண்டிருந்த பிச்சைக்காரன் அங்கிருந்தே கெஞ்சினான்.

அதே சமயம் பிச்சைக்காரியும் " அம்மா, உங்க குழந்தைக்கு இப்போ போட்டினீங்களே அம்மா. அதுலே கொஞ்சமாவது மீதி இருக்குமேம்மா. அதைப் பாத்துட்டுத்தானே ஓடியாந்தேன்" என்று கெஞ்சினாள் மறுபடியும்.

' அட, நீப்போடாயா நீ வந்திருக்கே ' என்று நான் சிரித்தேன்.

ஐயோ பாவம்! இருடி, சுடுதண்ணி கொண்டுவந்து தரேன். ...ந்தைக்குன்னு கேக்கரு பாதிராத்திரியிலே' என்று சொல்லிக் ...ாண்டே விளக்கைப் பெரிதாக்கி, வென்னீரை எடுத்துக்கொண்டு வாச ...க்கு வந்தாள் ராஜம்.

கையில் கொணர்ந்திருந்த ஒரு தகரக் குவளையில் பிச்சைக்காரி அதை வாங்கிக்கொண்டு 'மகராசியா இருப்பீங்க அம்மா,' என்று வாயாற வாழ்த்திக் கொண்டு திண்ணையை நோக்கிச் சென்றாள்.

'அண்ணா, குழந்தைக்கு வெறும் வென்னீர்த் தண்ணை போட்டப் போகிறாள் பாரு: பாவம் என்ன ஏழை நிலைமை!' என்று கொண்டே ராஜம் கதவைத் தாளிட்டுக்கொண்டு தன் அறைக்குள் சென்று விளக்கை சிறிதாக்கினாள்.

நான் கண்களை மூடிக்கொண்டு போர்வையை ஒருதரம் காலைச்சுற்றி இழுத்துக்கொடுத்து, போர்த்துக் கொள்ளப்போனேன்.

'ஏ புள்ளை, டப்பாவை எங்கிட்டுலெ வச்சே. குழந்தை அடிக்குது அல்லாத்தையும் நோண்டிக்கிட்டு இருக்கியே. கூறுகெட்டவளே' என்று அதட்டி கத்தினது அந்த ஆண் குரல்.

'அட, இங்கிட்டுத்தானே வச்சேன்'.

'ஆ, இந்தா ஆப்புட்டிச்சு,' என்று பதில் கொடுத்தது பெண் உடனே.

நான் திடுக்கிட்டுத் திரும்பி என் கண்களை அந்த திண்ணைப் பக் திருப்பினேன். மினுக் மினுக்கென்று எறிந்து கொண்டிருந்த அந்த மண்ணெண்ணெய் தகர விளக்குக்கு நேரே போய் கையில் ஒரு டப்பாவுடன் உட்கார்ந்தாள் அந்த பிச்சைக்காரி. வென்னீர் கொண்டுபோன தகரக் குவளையை எடுத்துத் தனக்கு நேரே வைத்துக்கொண்டாள். பிச்சைக்காரனும் குழந்தையுடன் அருகே போய் உட்கார்ந்து கொண்டான்.

படுக்கையில் என்னை அறியாமலே எழுந்து உட்கார்ந்து கொண்டேன். 'ராஜம்! இங்கே வா சீக்கிரம், ஜன்னல் வழியாகப்பாரு' என்று ஒதிய குரலில் கத்தினேன். ராஜம் பரபரப்பாக எழுந்து ஜன்னலுக்கு வந்து எதிர் திண்ணையை பார்த்தாள். டப்பாவிலிருந்து குவளையில் எதையோ போட்டுக்கொண் டிருந்தாள் அவள்.

'அட, போ தமிலே குருட்டுக் கழுதை! இருட்டிலே தடுமாறிக்கிட்டு. தண்ணிக்கு அளவு பார்த்துக்கிறாமே,' என்று கத்தினான் அந்த ஆண்.

பிச்சைக்காரி பதில் பேசாமல் குவளைக்குள ஒரு குச்சியை விட்டு கலக்கி சப்தம் செய்தாள்.

'அண்ணா, அண்ணா, ரொம்ப வேடிக்கையாக இருக்கே' என்றாள் ராஜம் பிரமிப்புக் குரலில்.

எனக்கும் ஆத்திரம் தாங்க முடியவில்லை. 'இரு, இதோ வந்து விட்டேன்,' என்று கொண்டே திண்ணையிலிருந்து பாய்ந்து நாலே எட்டில் அந்த திண்ணைக்குப் போய்ச் சேர்ந்தேன். பிச்சைக்காரர்கள் இருவரும் திடுக்கிட்டு என் பக்கம் திரும்பி, 'சாமி, என்னாங்க,' என்றார்கள்.

'ஒன்றுமில்லை, குவளையிலே போட்டது என்ன என்று பார்க்க வந்தேன்,' என்றேன்.

'ஒண்ணுமில்லீங்க' என்று இழுத்தான் அந்த பிச்சைக்காரன்.

'காண்பிடா பார்ப்போம் என்னதுன்னு,' என்று தோரணையாக கேட்டேன்.

'இல்லீங்க சாமி. குளந்தைக்கு மாவு புட்டீங்க. ஆகாரத்துக்கு,' என்றுகொண்டே அந்த மினுக்கு வெளிச்சத்திலே கையிலிருந்த டப்பாவை புரட்டிக் காட்டினாள் பிச்சைக்காரி.

ஒரே விநாடிதான் அதை உற்றுப் பார்த்தேன். மறு விநாடி திரும்ப திண்ணைக்கு பாய்ந்து எறிக்கொண்டிருந்தேன்.

'என்னது அண்ணா அது?' என்று ஆவலோடு கேட்டாள் ராஜம்.

'நீ குழந்தைக்கு போட்டுகிறாயே அதேதான்.'

'என்னது! ஹார்லிக்ஸா?'

'ஆமாம்.'

ராஜம் ஒரு வினாடி திகைத்துப்போய் பதில் சொல்லத் தெரியாமல் நின்றாள். "என்ன அண்ணா, அவள் இடுப்பிலே கந்தல்; அவன் இடுப்பிலே கந்தல்! தெருவிலே சமைத்துச் சாப்பாடு! இந்த நிலையில்......!"

"ஆனால் என்ன? அவளும் ஒரு தாய் தானே?"

அழகு வேண்டாம்!

(எச். ஜி. வெல்ஸ் பிரசித்திப்பெற்ற ஆங்கில ஆசிரியர். அவர் எது எழுதினாலும் உலகத்தில் ஏழெட்டு பாஷைகளிலாவது மொழிபெயர்க்கப்பட்டு விடுகிறது. அவ்வளவு செல்வாக்கு கொண்டிருக்கிறது அவர் எழுத்து. பல நாவல்களும், சரித்திர புத்தகங்களும் எழுதியிருக்கிறார்.)

"கட்டழகியைக் கலியாணம் செய்துகொள்ளவே கூடாது" என்பது ஆசிரியர் வெல்ஸின் உபதேசம். அவருக்கு இப்பொழுது வயது 72 ஆகிறது. இவ்வளவு அனுபவத்தின்மேல் அவர் என்ன சொல்லுகிறார்?

"அழகில்லாத சாதாரணப் பெண்தான் நிரந்தரமாக மனைவியாக இருந்து திருப்தி அளிக்கக் கூடியவள் என்று தீர்மானமாகச் சொல்லுவேன். முதலில் பார்க்கிறபொழுது வெறுப்புத் தட்டாமல் கலியாணம் செய்துகொண்டு விட்டால், பிறகு மறைந்து கிடக்கும் அநேக அழகிய அம்சங்கள் அவளிடம் தென்படும். கட்டிக்கொண்டவனுக்கு இடைவிடாமல் இன்பம் ஏற்படும்.

"கட்டழகியைக் கண்டு பிரமிக்கிறவர்கள், மனதை இழக்கிறார்கள். கலியாணம் ஆகிறது. கொஞ்சநாள் பிரம்மானந்தம்தான். உங்களைக் கண்டால் பிறருக்குப் பொறாமை.

"ஆமாம், கொஞ்சநாள் ஆனதும் உங்களுக்கே உங்களிடம் பொறாமை. அவளுடைய குறை தெரிகிறது—தெரிந்துதானே ஆக வேண்டும்!—வெறும் புன் சிரிப்பில் அந்தக் குறை தென்படும். அதனால்தான் எவ்வளவு அழகாயிருந்தாலும் ஒருவள் அவள் புருஷனுக்கு மட்டும் அழகாக இருப்பதில்லை.

"ஆனால் சாதாரணப் பெண் அப்படியல்ல. கொஞ்சநாள் கழிந்ததும் சிறிய அழகுகள் தென்படுகின்றன. முதலில் கண்ணில் படாத ஒரு கூந்தல் அழகு; முதலில் காணாத ஒரு புது அழகு அவளுடைய காதில்; அந்த அழகு நிச்சயமாகப் புருஷனுடையது! பிறனுக்கு அவளைக் கண்டால் வெறுப்பு.

"அழகை எல்லோரும் கண்டு மகிழ்கிறார்கள். சாதாரணப் பெண்ணை புருஷன் மட்டுந்தான் கண்டுகளிக்கிறான். அவனுக்கென்றே சிருஷ்டியான புதையல் அவள்! வேறு யாரும் காணாதது!

"நீங்கள் பொறுக்கி யெடுக்கும் பெண் கூடியவரையில் அழகில்லாதவளாகவே இருக்கவேண்டும். அநேகமாக உங்கள் வயதுள்ளவளாக இருப்பது நல்லது. படிப்பு, பாட்டு முதலியன கூடாது. உலகத்தோடு பழகக்கூடத் தெரியாதவளாக இருக்கவேண்டும், ஏழையாக இருக்கவேண்டும்; நாகுக்காகவும் இருக்கவேண்டாம்."

"நந்தி போல எச்சரிக்கை செய்கிறேன்!"

(கவி ரவீந்திரநாத தாகூர் 'மாடர்ன் ரேவ்யூ' பத்திரிகையில் எழுதியிருக்கும் கட்டுரையில் ஒரு பகுதி)

மரணம் போன்ற ஒரு மயக்கத்தில் விழுந்து கிடந்தது இந்த நாடு. யாருடைய மந்திரக்கோல் பட்டு அது புத்துயிர் கொண்டு துள்ளி எழுந்திருந்தது?

அஹிம்ஸைப் பாதை தான் உண்மையான வீரத்தை வளர்க்கும் என்று உபதேசித்து, யார் இந்த நாட்டைத் தன்னுடைய சக்தி பூராவையும் உணரச் செய்தது?

மகாத்மா காந்தி இந்தியாவிற்கு அளித்திருக்கும் இந்தப் புத்துயிர் வாழ்வில், ஆரம்ப காலமே, தயார் ஆகும் காலமே, இன்னும் பூர்த்தியாகவில்லை.

அவருடைய ஆணையின் கீழ், வல்லான் வகுத்த அந்தப் பாதை வழியே நாம் மேலும் போகவேண்டியது மிகவும் அவசியம்.

அன்று பரமசிவனின் பர்ணசாலையின் முன்பு நின்றுகொண்டு நந்தி எச்சரிக்கை செய்தது போல நான் இன்று எச்சரிக்கிறேன்.

"தவம் முடிவு பெறவில்லை. காந்திஜி சாதிக்க வேண்டியது பூராவும் இன்னும் சாதித்தாக வில்லை. அவருடைய உபதேசம் முழுவதும் இன்னும் ஒரு வேளை நம்மை எட்டாம லிருக்கலாம். ஆகையால் இன்று அவர் போக்கைக் கலைக்காதீர்கள்!"

கலைத்தால் என்ன நேரும்? ஈசுவரனுடைய தவம் அகாலத்தில் கலைந்து போனதால் பிரயளத்தீ தான் உண்டாயிற்று.

* * *

இன்று காங்கிரஸின் கௌரவம் கொடி கட்டிப் பறக்கிறது; உலகமே அதற்கு மரியாதை செய்கிறது.

பழைய காலத்து காங்கிரஸ், சர்க்கார் வாசற்படியில் நின்று கொண்டு பிச்சை கேட்டது; சர்க்கார் இல்லை என்றார்கள்.

இன்று அதே சர்க்கார் காங்கிரஸைப் பரபரப்புடன் வரவேற்று உபசரித்து பதவி கொடுத்து கௌரவம் அளிக்கிறார்கள்.

ஆனால் கௌரவம் வரும்பொழுது மட்டும் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று மனு சொன்னது நினைவிருக்க வேண்டும்.

ஏனென்றால் கௌரவமும் அதிகாரமும் பரிபூரணமாக வந்துவிட்டால், அவற்றையே அழிக்கும் விஷ சத்துக்களும் கூட உற்பத்தியாகின்றன. ஏகாதிபத்தியமோ, பாஸிஸமோ—எதிலும் வீழ்ச்சியின் காரணங்களும் சேர்ந்தாற்போல் உற்பத்தியாக வில்லையா?

வெட்டி வீரன்

("வரதன்")

தலையிலே கந்தல் துணி 'முண்டாசு'. அரையிலே காந்தியையும் வெல்லக்கூடிய அளவு உயரத்தில் உடுத்திக்கொண்டிருக்கும் கிழிசத்துணி. பித்தான்கள் இல்லாமையால் 'ஓபன் கோட்'டாக மாறிடக் குளிரைத் தடுக்கவென்று போட்டிருக்கும் நீளச்சட்டை. கூனல் முதுகு, தள்ளாத நடை, கறுத்த மேனி, நறைத்த மீசை, வழுக்கைத்தலை, தோளில் தொங்கவிடப்பட்ட தம்பட்டம், இத்தனை விருதுகளுடன் அதோ தெருக்கோடியில் வருகிறானே அவன்தான் எங்கள் ஊர் வெட்டி வீரன். சப்தம் செய்யாமல் சற்று அமைதியுடன் இருந்தால் வீரன் கூவுவதை விபரமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

"சாயந்திரம் காவேரி மணலிலே அஞ்சுமணிக்குமேலே ஒரு காந்திக்கூட்டம். காங்கிரஸ் கட்டுப்பாடு பத்திப் பேச்சாம். எல்லாரும் கேட்க வரலாம்" என்று சொல்லித் தம்பட்டம் தட்டுவது உங்கள் காதில் விழுகின்றதா?

"ஏண்டா வீரா! காவேரி மணலில் எங்கேடா கூட்டம்? யார் பேசப்போகிறார்கள்? என்ற கேள்விமாரியில் புகுந்தோமானால் அவன் பதில் சொல்லிச் சமாளித்துக்கொள்வதை பாருங்கள்.

"என்ன சாமீ! வக்கீல்மாரு சாக்கிகளைக் கூண்டிலேயும், வாத்தியாருங்க படிக்காத பயலுவங்களைப் பெஞ்சிமேலேயும், ஏத்திக் கேள்விகள் போடறாப்பலே என்னையும் கேட்கிறீங்களே! மாட்டை அடிச்சுத்தின்னு, அடிமண்டிகுடிக்கிற கீழ்ச்சாதிப்பயல் என்று நினைத்து பரீச்சையா பண்ணுறீங்க? எப்பவும்போல நம்ப பூசப்படித் துறையிலே தானுங்க. உப்புச்சண்டை போட்ட ராசா வராங்களாம். கூடவே மந்திரிமாரும் வருவாங்களாம். காந்தியைச்சேர்ந்த நீங்களே இப்படி என்னை ஏச்சுக் காட்டலாங்களா?" என்று நம்மையும் ஒரு இடைக்குத்தல் குத்திப்பதில் விடுக்கும் விந்தையை நீங்கள் அனுபவித்திருக்கிறீர்களோ, என்னவோ?

"வீரா! நான்தான் கேட்கிறேன். கோபமா பதில் சொல்லாதே. தெருவில் நாலுபேர் நாலு தினுஸாய்த்தான் கேட்பார்கள்" என்று நெருக்கினால் உடனே பளிச்சென்று அதி வினயத்துடன்,

"இல்லேங்க சாமீ! நம்ம ராசா வூட்டுக்குழந்தைகளா! வயசாச்சு. கண்ணு, மண்ணு தெரியல்லே. மனசிலே வருத்தம் வச்சுக்கிடாதிங்க. அப்பாருக்கு இந்தச்சேதி தெரிஞ்சா 'எலே வீரா! குழந்தைகிட்ட ஏண்டா திமிராப் பேசினே' என்று சண்டை போடுவாங்க" என்று குழைந்து குழைந்து கூறுவதையும் கொஞ்சம் ரஸிக்கலாம்.

"ஏண்டா, வீரா! கண் தெரியல்லே என்றாயே, உனக்கு வயதென்ன ஆகிறது?" என்றால் வீரனது பதில் என்ன தெரியுமா?

"சாமீ! எங்க ஆயியும், அப்பனும் சாதகமா எழுதி வச்சுப்புட்டுச் செத்திருக்காங்க. ஊர்க்கதை யெல்லாம் படிக்கிறீங்களே நீங்கள்தான் ஒரு கோட்டம் சொல்லுங்களேன்" என்று ஜோஸியம் கேட்பது போல் கேட்டுச் சிரிப்பான்.

"எண்பது வயது இருக்குமாடா வீரா?" என்று நாம் சொன்னால் "ஏது அவ்வளவு இருக்காதுங்க. அம்பது அம்பத்தஞ்சுதான் இருக்கலாமென்னு உத்தேசங்க. சுமாராச் சொல்றேன் கேளுங்க.

"உங்க தாத்தா இருந்தாங்களே, எங்க மவராசாவைப் பெத்தவங்க அவுங்களிடம் நான் பண்ணே அடிச்சிருக்கிறேனுங்க. அவங்களோடு கூட ஒன்பது கிராமத்து நிலத்தையும் ஒரு கொடியில் சுத்திப் பாத்திருக்கிறேனுங்க. பட்டாமணியார் கிட்டனசாமி அய்யர் நாள் முதலா மூணு தலைமுறை வெட்டி வேலை பார்த்து வரேனுங்க. மேல முனியாண்டவர் கோயில் பெரிய ஆலமரத்தைப் பயிர் பண்ணினது நான். வெட்டி வேலைக்குவந்த முதல் வருஷத்திலேங்க. மாயவரத்து மாமியா வூட்டுக்கு மறுமுளிக்கு நடந்துபோய் வந்த காலங்க. ரயில் இயில் ஒண்ணும் அப்ப போடலிங்க. இப்பன்னா மூணு பணம் கொடுத்தால் முக்காத தூரம் மோட்டார் காரிலே போவலாம். காத்துக் கப்பலிலேகூட கடுசாப்பறக்கலாங்க. (ரகஸியமாய்) வடக்கே துரைமாரெல்லாரையும் வெட்டிச் சாச்சாங்களாமே அப்பவெல்லாம் நானு மாடு மேச்சுக்கருது பொறுக்கற பிராயங்க" என்று ஒருவாறு சொல்லி முடித்திடுவான்.

"ஏண்டா வீரா! நீ சொல்கிற மகாராஜாவுக்கே (எங்கள் தகப்பனார்) இப்பொழுது வயது எழுபத்தைந்து ஆயிற்றே. நீ சொல்லுகிற சேதியெல்லாம் கேட்டால் தொண்ணூறு வருஷக்கதையாத் தோன்றுகிறதே. உனக்கு வயது 'அம்பத்தஞ்சு' இருக்கும் என்பது பிசகு. தொண்ணூறுக்குக் குறையாது உன் வயது" என்று சொன்னால், உடனே வீரன் சுற்று முற்றும் பார்த்துக்கொண்டு மெதுவான குரலில் சொல்லத்துணிவான்.

"சாமீ! நீங்கள் சொல்றது நியாயந்தானுங்க. 'வயசையும் உடமையையும் உள்ளதைச் சொல்லாதே; ஒளிச்சுச் சொல்லு' என்று எங்கப்பன் என்னே அடிச்சடிச்சுச் சொன்னதைச் சாகிறங்காட்டியும் மறக்கமாட்டேனுங்க. உள்ளதைச் சொன்னால் திட்டிப்பட்டுடுங்க. ஆயுசும் குறைந்துபோயிடுங்க" என்று சொல்லும்போது, வயதைக்

குறைத்துச்சொல்லி ஒரு சமயம் யமனையும் ஏய்த்துவிடலாமோ என்ற சிறு சந்தேகம் நம்முன் எழுவதும் நியாயந்தானே!

"வீரா! உன் தொண்ணூறு வயசுகாலத்தில் நீ கண்ட அதிசயத்தைச் சொல்லு கேட்போம்".

'உங்களைப்போல் படிச்ச மவராசாவூட்டுக் குழந்தையிடம் எடுன்னு என்னவென்று தெரியாத கிழட்டு வீரன் என்னுங்க சொல்றத்துக் கிருக்கு. உப்பிட்டவங்களை உள்ளளவும் நினைக்கணும். கார் சம்பா விலே அறுப்பு அறுத்தால் சோத்துக்கு உங்க பண்ணையிலிருந்து நெல் கொடுத்து விடுகிறீங்க. மாசம் முப்பது நாளாச்சுன்னு சர்க்கார் சம்பளம் எட்டு ரூபாயும் விள்ளாமே விரியாமே இடுப்பிலே ஏறிடுதுங்க. துணி, மணி, மேஞ்செலவுக்குப் போதும் அது. உங்க ராசாங்கத்துக்கும், சர்க்காருக்கும் இந்தக்கட்டை சாகிறமட்டும் ஒளைக்காட்டிப்போனால் இன்னொரு பிறப்பிலே நாயாப்பிறந்து ஊரெல் லாம் சுத்தணுங்க.

"பொய், புனசுருட்டு, சூது, வாது, திருட்டு, பித்தலாட்டம் ஒன்றும் உதவாது. சூது செய்கிறவன் கொல்லையில்தான் மாடு மேயுதுங்க. படுக்கினு பாதியிலே செத்துப் போய்விடுகிறான். பொய் சொன்னால் பேயாய்ப் புறக்கணுங்க. உண்மையைச் சொன்னால் காந்தி ஐயாவைப்போல ஊரெல்லாம் ஆளலாம்.

"உங்கள் வயசிலே என்னிக்காகிலும் 'வீரன் கள் குடிச்சான் விழுந்து புரண்டான், கலம் செய்தான்' என்று கேட்டதுண்டா? அது எதற்குங்க? அம்மாசி, காமாச்சி, அந்தோணி இந்தப்பயலுகள் மாதிரி எப்பவாவது கள்ளுக்குடிச்சதுண்டுங்களா? நான் அந்தக் கழுதையை அந்த நாளிலேயே மோந்து கீந்து பார்த்திருப்பேனா? இப்பலே சேலத்திலும் இன்னும் எங்கு எல்லாமோ கள்ளை நிறுத்திப்புட்டாங்களாம். காட்டேறிமேலே ஆணை, மானத்துக்குங் கீளேநிக்கிறேன். வாயிலே பொய்வராது. சத்தியமாய்ச் சொல்றேனுங்க. கள்ளை மனுசன் குடிக்கலாங்களா? அகம்புடிச்ச பயலுகள் அதைக் குடிச்சுப்பிட்டு கெட்டலையறாங்க.

"எசமான் வீட்டில் பண்ணை அடிக்க ஆரம்பித்தநாள் முதலாய் இந்தமட்டும் எண்ணெய் முதல் சுண்ணாம்பு வரைக்கும் மட்டை விழுந்தாலும், பரிசம் போட்டாலும் இல்லையென்று ஒரு வீட்டிலே போய் நின்றவன் இல்லிங்க. எங்கமவராசா, நீங்க எல்லாரும் உள்ளமட்டும் இந்தச் செருப்புக்கு என்னகுறைச்சலுங்க, அப்படியே தட்டுக்கிட்டுப் போனாலும் பட்டினி கிடந்து செத்தாலும் சாவோமே யல்லாமல் வேறு வீட்டை எட்டிப்பார்த்திருப்பேனா? யாராவது நாக்குமேலே பல்லைப்போட்டு 'எலே வீரா! நில்லுடா' என்று சொல்லியிருப்பாங்களா? உசிரா பெரிசுங்க; மானம்தான் பெரிசுங்க.

"இன்னிவரைக்கும் மருந்து மாத்திரை எதாவது தின்னதுண்டுங்களா? அதெல்லாம் எங்சளுக்கு எதுக்குங்க? சோத்தைத் தின்னு விட்டு வேலையில்லாமல் விட்டிலேயே குந்தியிருக்கிற சோம்பேறிகளுக்குத்தானே மருந்து மாயமெல்லாம். வெய்யிலிலே காஞ்சு, மழையிலே நனையற எங்களுக்கு வியாதியேது; வெக்கையேது; தூத்தலேது; தும்மலேதுங்க? வரப்பிலே சோறுதின்று கண்ணியிலே தண்ணீர் குடிச்சு களத்துமேட்டிலே இளைப்பாறுகிற எங்களுக்குச் சுரமும் பேதியும் வாராதுங்க. கண்டால் கூட பயந்து ஓடிடுங்க" என்று சொல்லும்போது அவனைக்கண்டு பெருமை கொள்ளாதவர்கள் புவியில் இருக்கமாட்டார்கள் என்று நினைப்பீர்கள்.

"நாட்டுக்கு உழைக்க இரண்டு பயல்களையும் (கட்டிக் கொடுக்கும்) வீட்டுக்கு உழைக்க இரண்டு பொட்டைக் குட்டிகளையும் ஆண்டவன் புண்ணியத்திலே எனக்குக் கொடுத்திருக்கிறாருங்க. அவுங்க நாலு பேரும் குழந்தை குட்டிகளோடு சுகமாயிருக்குங்க. அதுகள்தான் எனக்குச் சொத்து, சுதந்திரம். வேறு சொத்து சுதந்திரம் என்றெல்லாம் சொல்லிக்கிறாங்களே. அதெல்லாம் சமயத்தில் 'மூக்குக் கொடுக்குங்களா?' சொல்லுங்களேன்" என்று கேட்கும்போது வீரன் நாட்டைக் கண்போல பாவித்து ஆண், பெண் ஆகிய இமைகளில் வைத்துக்காக்கிற அற்புதத்தைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் விடாத ஆண்மகனும் இருக்கமாட்டான்.

"எங்க குறையெல்லாம் அநேகமாய்த் தீர்ந்துவிட்டதுங்க. ஆண்டை மாரெல்லாரும் அநியாயமாய் வட்டிக்கு வட்டி வாங்கினதைக் காந்தி மந்திரிகள் சுட்டுத் தொலைத்துவிட்டார்களாம். எப்போதும் வேலைமேலே ஓடியாடித்திரிகிற எங்களைப் பார்த்து அதிகாரிகள் "ஏ, வெட்டிப்பயலே" என்று கூப்பிட்ட காலம்போய் இப்பவெல்லாம் 'வீரர்' என்று உங்கமாதிரி வாய்நிறையப் பேருசொல்லி அழைக்கிறாங்க.

"சீச்சீ, போ, எட்டி! என்றெல்லாம் நாய்க்குங்கேவலமாய் எங்களை நடத்திக்கிட்டு வந்த ஐயமாரில் முக்கால்வாசிப்பேர் அதை நிறுத்திப்புட்டாங்க. அவங்க மனசிலே நியாயம் புகுந்துவிட்டதுங்க. வெட்டிவேலை முதல் மந்திரி வேலைவரைக்கும் எங்க சாதிக்காரங்க வேலை பார்க்கறாங்க என்று காதால் கேட்க என் தோள் ஒப்புதுங்க. ஆனால் ஒரே ஒரு குறைதானுங்க. அதைக் கண்ணுமுன்னே சாமி மாதிரி இருக்கிற உங்களிடம் சொல்லாமல் ஒளிச்சால் தின்னச் சோறும் நிற்க நிழலும் கிடைக்காதுங்க.

"நேத்து இரவில் வீட்டிலே சோறுதின்னு வெத்திலை மென்று துப்பையிலே கண்ணாலம் பண்ண பொண்டாட்டி கறுப்பாயி வந்து நின்றாள். 'ஏ, மாமியா மவனே! ராசாவீட்டிலே பண்ணையடிக்

கிறேன், சர்க்கார் சம்பளமும் சேர்த்து வாங்கறேன் என்று சம்பமாச் சொல்லறயே, தெருவிலே ஆணும் பெண்ணும் சொல்லிக்கிட்டுத்திரியாது உனக்குத் தெரியல்லே? எல்லாரும் என்னை ஏசறாங்க. உனக்கென்ன ராசாமாதிரிப் போய்விட்டுவரே' என்றாள்.

'ஏட்டி, கறுப்பாயி! காத்தாயி மவன் வீரன் இருக்கிறபோது உனக்கேதுக்கடி கவலை? வேண்டியதைக்கேள். செய்துவிட்டு மறுவேலை, ஏசினவர்களைச் சொல்லு. நாக்கறுத்துக் கண்ணையும் புடுங்கிவிடச் சொல்கிறேன்' என்றேன்.

கறுப்பாயி சொன்னாள்: 'தெருவிலே பிள்ளைகள் கோலிக் குண்டு ஆடுகிறபோதும், பெரிய ஆம்பளைகள் மரந்தூக்கிறது, கல்லுப்பிறட்டுகிறது மாதிரி வேலைகளில் முடியாமல் தோத்துப் போனால் ஒருத்தருக் கொருத்தர், போடா கருப்பாயி புருசா என்று விளையாட்டா ஏசிக்கிறாங்க. நான் உன்னைக் கட்டிக்கிட்டு உன்னோடேதானே வாழ்ந்து வருகிறேன். நம்ம சாதித் தொழிலுக்கு அந்தக் காலத்திலே வந்தாங்களாமே அரிச்சந்திர மகாராசா. அவர் கட்டின பெண்டாட்டி சந்திரமதிமாதிரி—உண்மையா இல்லையா—நானும் ஊராம்பளையை என்னிக்காகிலும் உத்துப் பார்த்திருப்பேனா? அப்படியிருக்கும்போது எல்லாரும் என்னை ஏசறதைக்கேட்டு நீ பேசா போகிறது ஒண்ணுதான் எனக்குச் சுத்தமாய்ப் புடிக்கவில்லை. அதுக்கு வழி செய்கிறேன் என்று சொல்லு. இல்லாவிட்டால் நான் ராவுக்குராவே ஆத்தோடே குளத்தோடே குதித்துச் செத்துப் போறேன். ஒரே ஒரு பேச்சு சொல்லு' என்றாள்.

'ஏட்டி! அவுங்க என்ன நினைச்சுக்கிட்டு சொல்றாங்க தெரியுமா? நண்டு நத்தை தின்கின்ற நாறச்சாதிதானே; எது சொன்னாலும் கேட்டுப் பொறுத்துப் போம் என்று சொல்றாங்க. நீ நண்டு, நத்தை தின்னாமல் சுத்தமாய் இருந்தால் அவங்களும் உன்னை ஏசாமலிருக்க, ஏற்பாடு செய்துடரேன். என்ன சொல்றே?' என்றேன்.

'என் கையிலே அடிச்சுக் கொடுத்தாள். நம்ப பண்ணை மவராசா வூட்டுக் குழந்தைக்கு காந்தி மந்திரிகளெல்லாரும் ரொம்ப நாளாய்ப் பரிச்சயமாம். அவுங்க கிட்ட சொல்லி கருப்பாயி புருசா என்று ஏச்சுக்குக் கூட ஒருத்தரும் சொல்லப்படாதுன்னு உத்தரவு போட ஏற்பாடு செய்கிறேன்; ஆனால் ஏட்டி! அப்பவும் நான்தானே ஊரெல்லாம் தமுக்குப் போட்டாகணும். தமுக்குச் சத்தம் கேட்டால் நீ ஆத்திரப்படுவாயோ?' என்றேன்.

'அப்பொழுது கோபமென்ன எனக்கு? சர்க்கார் உத்திரவுன்னா நீ போடரே! எனக்கு இரட்டைச் சந்தோசம்னா' என்றாள் கருப்பாயி.

"சாமி! நடந்ததை இம்மி கூடப் பொய்க் கலப்பில்லாமல் சொல்லிவிட்டேன். கறுப்பாயியும், நானும் சோச்சக் காலம் வாழத்தான் போறோமோ அல்லது அவளை ஆத்துக்கு, குளத்துக்கு இரையாத்தான் கொடுத்துவிட்டு நிற்கப்போறேனோ, எதுவும் உங்கள் கையில் இருக்குதுங்க" என்று ஏக்கம் பிடித்த குரலில் சொல்லி முடித்தான் வீரன்.

"பலே வீரா! நீ பேரளவில் வீரனில்லே. வாழ்க்கையிலும், காரியத்திலும் சுத்த வீரன்தான். வீரா! கறுப்பாயி புருஷா! உன் வேலையைப் பாரு. நான் எல்லாவற்றிற்கும் பார்த்துக்கொள்கிறேன். கவலைப்படாதே." என்றேன்.

"சாமீ! கும்பிடுகிறேனுங்க. ஊர்கோலித் தழுக்குப் போடணுங்க நாழியாச்சு. மழைக்காலம் வந்துடுத்து. பனிக்காலம் வர இருக்குங்க. கிழவனுக்குக் குளிர்போகப் போத்திக்கொள்ள நீங்க மேலே போட்டுக் கிழிச்ச காந்தி வேட்டி பழசு ஒண்ணு கொடுங்க. உங்கள் பேர் விளங்கப் போட்டுக்கிடறேனுங்க. எனக்கு அதிலே அதிக மதிப்புங்க" என்று சொல்லி என் மதிப்பை ஒரு பிடி உயர்த்திவிட்டான்.

உடனே சிறிது யோசித்து "வீரா! இந்தா, நேத்துத் தீபாவளிக்கு வாங்கின புது வேஷ்டி. எங்கள் நிலம் புலத்தை உயிரைக் கொடுத்துக் காக்கின்ற வீரனது உடலைக் காக்க உதவாத இந்த வேஷ்டி எனக்கு எதற்கு?" என்று சொல்லிவிட்டு அவனிடம் கொடுத்தேன்.

"நீங்கள் ஏழேழு தலை முறைக்கும் மவராசாவாக இருக்கணும் உங்க புள்ளை குட்டியெல்லாம் சுகமாயிருக்கணுங்க!" என்று வாயார வாழ்த்திவிட்டுப் பெருத்ததொரு கும்பிடும் போட்டான். "சாமீ! நீங்க காந்தி வேட்டி எனக்குக் கொடுக்கையிலே நான் சொன்னது மாத்திரம் நினைவிலிருக்கட்டும்" என்ற போதுதான் 'பகீர்' என்றது.

"என்னடா, ஏதுமறியாதவன் என்று இதுவரையில் நாம் நினைத்து வந்த ஏழை வீரன் இவ்வளவு அழகாக எல்லாவற்றையும் சொன்னது மன்றித் தன் குறையைத் தீர்த்து வைக்க, என் கண்முன் தெய்வம் போலத் தோன்றியிருக்கும் காந்தியின் பெயரைச் சாக்ஷிக்கு சத்தியத்துக்கு—இழுத்துவிட்டானல்லவா?" என்று எண்ணினேன். நான் அவனுக்குச் செய்வதாக வாக்களித்ததைச் செய்யவும், திடசித்தம் கொண்டேன். அதைப்பற்றி உங்களிடமும் பிரஸ்தாபித்துவிட்டேன் பின் நடக்கிறது நடக்கட்டும்.

வீரன் பேச்சில் தீரன்; காரியத்திலும் சூரன் என்றே எனக்குத் தோன்றுகிறது. நீங்களும் அப்படித்தானே நினைக்கிறீர்கள்?

கலைஞன்

(பி. வி. சுப்ரமணியம்)

கண்களை மூடிக்கொண்டு பரமானந்தத்தில் லயித்திருந்தாள் தாய். தாரஸ்தாயியையும் தாண்டிய பஞ்சமத்தை எட்டிப் பிடிக்கும் குயிலின் குரலோசையில் பிறந்த இன்ப அலைகள், அங்கு விளங்கிய சௌந்தரிய பீடத்தில் வந்து மோதின. கலையின் புனிதமான இடத்தில்! அது உணர்ச்சியில் பொங்கி வழியும் கலையா யிருந்தாலென்ன? இயற்கையின் அற்புத சிருஷ்டியில் பிறந்த கலையா யிருந்தாலென்ன? ஆறுகள், சமுத்திர சங்கமமாவது போல், தாங்க முடியாத உள்ளுணர்ச்சியில் பிறந்து பூரித்த கலை, பௌர்ணமியின் சாந்தாகாரத்தில் ஐக்கியமாகிறது, அவ்வளவு தானே!

ஜன்னலுக்கு எதிர்ப் புறத்தில் பகவானின் மகா போதத்தைச் சித்திரித்துக் கொண்டிருந்தான் குழந்தை ரஞ்சனன். முடிவடையும் சமயம். இன்ப நிறைவு! சிருஷ்டி கர்த்தாவின் கர்வம் ஒரு பக்கம்! "காலை முதல் அன்ன ஆகாரமில்லாமல் சிருஷ்டியின் ஆர்வத்தில் அமுங்கிக் கிடந்த குழந்தை எழுந்து விடுவான். சாப்பிடுவான்" என்ற தாயாரின் ஆனந்தம் மற்றொரு பக்கம். அவளுக்கு அவன் ஒரு வயதிலும் குழந்தைதான். இருபத்தைந்து வருஷத்திற்கப்புறம், இப்பொழுதும் குழந்தைதான்; பகவானையே போல. எப்பொழுதும் அவன் அவளுக்குக் குழந்தையாகத் தான் இருப்பான்—உலகத்திற்குத் தான் அவன் கலைஞன்.

தாயாருக்குக் கலை யுணர்ச்சி யில்லாததை அவன் பொருட்படுத்தவில்லை. அதை நினைத்து வருந்தவும் இல்லை. அவன் அவ்வளவு உணர்ச்சியற்று, மரத்துப் போய்விட்டான். அந்த நினைப்பு வரும்போது, 'உலகம் போற்றும் குழந்தையைத் தன்னால் போற்ற முடியவில்லையே' என்ற ஏக்கம் பிடித்துக் குமுறுவாள் தாய். கலையின் எலும்புக் கூட்டைத் தவிர அவளுக்கு வேறொன்றும் அதில் தெரியவில்லை. வெறும் பொம்மையைக் கண்டாள். அதிலுள்ள உயிரைக் காண அவளால் முடியவில்லை. காலையில் "அப்பா, எல்லாம் தான் முடிந்துவிட்டது போலிருக்கே. சாப்பிட வரப்படாதா?" என்றதற்கு, என்ன ஆணித்தரமான பதில் சொன்னான் ரஞ்சனன்!

"அம்மா! சிற்பிக்குத் தன் சிற்பத்திலுள்ள ஜீவகளை தெரியாதா? அதுபோல எவ்வளவு நேரமானாலென்ன? அதிகப் பிரயாசை என்னுடைய சக்தி யில்லாமையைத்தான் காட்டுகிறது. மணிக்கணக்காக உழைத்து, உயிரை விட்டுப் பாடுகிறான் பாடகன். சோபிக்காமல் போய் விடுகிறது. இரண்டே இழைப்பில் ராகத்துக்கு உயிரைக்

கொடுத்து விடுகிறான் மகான்! இது பிம்பம் தான்! ஏதே குறைகிறது! சொல்ல முடியாத சூன்யம். அதை உணரவே முடியும். எனக்கு அது உறுத்துகிறது; பாவம்—உன்னால் அதைக் காண முடியவில்லை.”

ஒரே கோடு! கை தவறி விழுந்த எழுதுகோல் இழுத்த ஒரு கோடு, அற்புதத்தைச் செய்து விட்டது! உயிரைப் பிரதிஷ்டை செய்து விட்டது. பிறகு? வார்த்தைகளால் கட்டிச் சேர்க்க முடியாத ஆனந்தத்தின் சிகரம்! கலைப் பைத்தியத்தின் வெறி!

அந்த வெற்றிக்குப் பிறகு ஒன்றுமே அவனுக்கு ருசிக்கவில்லை. தாயார், ரஞ்சனனின் கல்யாணச் செய்தியை மனதிலடக்கிக் கொண்டு சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தாள்; அதை வெளியே சொல்லியும் விட்டாள். ஆனால் அது ரஞ்சனனின் காதில்கூட ஏறவில்லை. வெற்றியின் மயக்க வெள்ளம் தலைக்குமேல் ஒரு அடி போய்க்கொண்டிருந்தது. சமயம் இதில்லை என்று விட்டுவிட்டாள் தாயார்.

காலச் சக்கரம் சுழன்ற வேகத்தில் கல்யாண நாள் கிட்ட வந்து விட்டது. ஆனால் ரஞ்சனனென்னமோ அதில் மனதீடுபடுபவனாகக் காணோம். பெண், சீர் முதலிய பலவற்றைப் பற்றியும் பேசிப் பேசிப் பார்த்தாள் அவன் தாய். அவன் அசையவில்லை. வாழ்க்கையின் ஜீவ சக்தி எங்கிருந்து உண்டாகிறதோ, ஜீவாத்மா பரமாத்மாவுடன் எந்த இடத்தில் சேருகிறதோ, அங்கே—வான வளையத்திற்கும் அப்பால்—சென்று சாந்தியைத் தேடியது அவன் மனம். அவனுக்குக் கலையும் கடவுளும் ஒன்று. ஆகையால் தான் அவனுக்கு இந்த வாழ்க்கையிலேயே ஒரு வெறுப்பு. “உலகம் அழியும். கடவுளுக்கு அழிவுண்டா?”

கலியாண நாளன்றைக்கும் மனித யந்திரத்தைப்போல் சொன்னதைச் செய்துவிட்டுச் சித்திரம் எழுதப்போய்விட்டான் ரஞ்சனன். உலகறிந்த கணவனைப்பெற்றதில், சாந்தாவுக்குப் பூரிப்பு. “எப்படியாவது அவரைத் தனியே கண்டு ஒரு வார்த்தையாவது பேசிவிட்டுப் போய்விடவேண்டும், ஊருக்குப் போவதற்கு முன்னால்” என்ற ஆசை அவளுக்கு. “அவரும் அவ்வளவு ஆசையாகத்தானே......” அதற்கப்புறம் நினைக்கவே வெட்கம்!

மறுநாட் காலை, வந்தவர்களெல்லாம் ஊருக்குப் புறப்படுகிறார்கள். சாந்தாவும் கூட. “எப்படியாவது இன்றிரவு அவரைப் பார்த்து, ஒரு தடவை, ஒரு வார்த்தை......” அறைக்கு வெளியில் வந்து குளிர்ந்த காற்றில் நின்றாள். மாடிப்படிகளில் வெளிச்சம் தெரிந்தது. ஏது? இந்த வேளையில்? இரவு ஒரு மணி, இரண்டு மணி, சமயத்தில்? இவ்வளவு பிரகாசம் எங்கிருந்து?

இரண்டு மூன்று படிகள் ஏறினதும் தெரிந்துபோயிற்று. ரஞ்சனன் அறையில்!

எல்லோரும் தூங்கிக்கொண்டிருந்தனர்—‘நாகவல்லி ஆன வீட்டைப்போல்’ என்று கூடச் சொல்லுவார்கள்—அவ்வளவு சிரமத்துடன், சாந்தா துணிந்து மேலே நடந்தாள். அந்த அறையில்

ரஞ்சனன்தான்! முதல் தடவை அவனைத் தனியாகச் சந்தித்ததும் மயிர்க் கூச்சலெடுத்தது அவளுக்கு.

அவனுக்கு மயிர்க் கூச்செடுக்கவில்லை. இவளைப் பார்த்து அவன் பிரமித்து விடவுமில்லை. பகவானின் மகாபோத சமயத்தில் எதிரே நின்று கொண்டிருந்த ஸுஜாதையைக் காட்டி "இந்த பாக்யம் உனக்குக் கிடைக்கவில்லையே!" என்று கோரச் சிரிப்புச் சிரித்தான்; மறுபடியும் அதில் அவன் லயித்துவிட்டான்.

ஒரே நிமிஷத்தில் அவள் கனவுகளை எல்லாம் அவன் உடைத்தெரிந்து விட்டான். கலங்கிய கண்களோடு, திரும்பி, இருட்டில், மாடிப்படிகளில், இறங்கினாள் சாந்தா.

திரைப்படச் செய்திகள்

பயப்படாதே!

எட்டி காலின்ஸ் நடிக்கப்போகும் "The Jones family at the Grand Canyon" என்ற படத்தில், மலையில் வசித்து வந்த ஒரு சிங்கத்தை அவனுடன் நடிக்க ஏற்பாடு செய்திருந்தனர். எட்டி இதற்கு சம்மதிக்கவில்லை.

"எனக்கு எப்போதும் துஷ்ட மிருகங்களினிடத்தில் நம்பிக்கை கிடையாது. ஆகையால் அச்சிங்கத்துடன் நெருங்கிப் பழக முடியாது" என்று கூறி விட்டான் எட்டி.

"நீங்கள் பயப்பட வேண்டாம்; இந்தச் சிங்கம், அப்படி நீர் நினைப்பது போல் அபாயகரமானதல்ல. இதைப் பூனை மாதிரி பழக்கி, சின்னக் குழந்தைகளுடன்கூட விளையாடும்படிச் செய்திருக்கிறேன்" என்றான் அச்சிங்கத்தைப் பழக்கியவன். பிறகு ஒருவாறு சம்மதித்தான் எட்டி.

'ஷூடிங்' ஆரம்பமாயிற்று. அந்தச் சிங்கத்தின் கூண்டை இழுத்து வந்து கதவைத் திறந்தார்கள். சிங்கம் வெளிவர மறுத்து விட்டது. நாலுதரம் துப்பாக்கியால் சுட்டு பயமுறுத்திய பிறகு தான் அந்த சாதுவான சிங்கம் மெள்ளத் தன் காலை எடுத்து வெளியில் வைத்தது.

எட்டி சொன்னான், "இதைத்தான் பூனை மாதிரி பழக்கி வைத்திருக்கிறேன் என்று சொன்னீர்களோ? குழந்தையோடு விளையாடுமா இது? ரொம்ப பேஷ்! ஆனால் காலின்ஸ் தம்பதிகளின் குழந்தை எட்டியுடன் விளையாடாது போலிருக்கிறது இச்சிங்கம்!"

* * *

ஹாலிவுட்டிலிருந்து சுடச்சுட ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. "எலிஸபெத்தும் எஸ்ஸெக்ஸும்" என்ற படத்தின் வேலையை ஆரம்பித்து விட்டார்களாம்.

பெட்டி டேவிஸ், எர்ரால் பிளின், ஆலிவா டி ஹாவிலண்ட் இன்னும் பல பெயர் பெற்ற நக்ஷத்திரங்கள் தோன்றும் படமிது. பெட்டி டேவிஸ்தான் எலிஸபெத்தாக வருகிறாள்!

* * *

அவன் ஒன்று நினைக்க......

லயல் தால்பெத், ஸினிமாவில் தோன்றுவதற்குமுன் வேலையின்றி சிரமப்பட்டுக்கொண்டிருந்தான். அச்சமயம் அவனுக்கு டிராமாக் கம்பெனி ஒன்றில் வேலை கிடைத்தது. அந்நாடகத்தில் அவனுடைய வேலை என்ன தெரியுமோ? ஓரிடத்தில் துப்பாக்கியுடன் மறைந்து

தெலுங்கு ராதாகிருஷ்ணாவில் ஸ்ரீமதி லக்ஷ்மி தேவி

நின்று, கதாநாயகனுடைய விரோதி வரும்போது அவனைச் சுட்டு வீழ்த்த வேண்டியது.

மேற்படி கட்டம் வந்தது. விரோதியும் வந்தான். லயல் வெகு அவசரமாகத் துப்பாக்கியை எடுத்துச் சுட்டான். ஆனால்......பாவம்! துப்பாக்கியிலிருந்து சத்தமே கிளம்பவில்லை. இரண்டு மூன்று தரம் பிரயத்தனப்பட்டும் வீணாயிற்று. என்ன செய்வது அந்த நெருக்கடியான சமயத்தில்? சட்டென்று ஒரு யோசனை தோன்றியது லயலுக்கு.

ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து துப்பாக்கியாலேயே விரோதியின் மண்டையில் ஓங்கி அடித்தான். அடி பலமாகப் பட்டுவிட்டது. வந்தவன் மூர்ச்சை போட்டுக் கீழே விழுந்தான். மண்டையிலிருந்து ரத்தம் பெருகிக்கொண் டிருந்தது. அவன் தலையிலிருந்த பொய் மயிரும் எங்கோ போய் விழுந்தது!

லயல் பயந்துபோய் நிச்சயம் தனக்கு வேலைபோய்விட்டதெனத் தீர்மானித்துவிட்டான்.

ஸ்டேஜ் மானேஜர் வந்து லயலைத் தட்டிக் கொடுத்து, "பேஷ்! நல்ல வேளையாக உனக்கு அந்த சமயத்தில் நல்ல யோசனை உதித்தது" என்று அவனைப் புகழ்ந்ததுடன் சாசுவதமாக வேலையிலும் வைத்துக் கொண்டார்.

"அது கிடக்கட்டும்; எப்போதும் 'வில்லன்'க வருவது என்றால் ஆபத்துத்தான்" என்கிறார் இங்குள்ள சினிமா 'விசிறி' ஒருவர்!

* * * *

"Destry Rides Again" என்ற படத்தில் நடிப்பதற்காக யூனிவர்ஸல் பிலிம் கம்பெனியார், எம். ஜி. எம். நடிகர் ஜேம்ஸ் ஸ்டுவார்டை மேற்படி கம்பெனியிலிருந்து கைமாற்று வாங்கிக்கொண்டிருக்கின்றனராம்!

* * *

ஹாலிவுட் நடிகர்களின் சிக்கனம்!

கால் பூட்ஸ் எவ்வளவு பழசாய்ப் போனாலும் எடுத்தெறிய மனம் வருவதில்லையாம் கிளாடட் கால்பர்ட்டுக்கு.

* * *

பிரடரிக் மார்ச் எப்போதும் சிகரெட் வாங்கும்போது இரண்டு 'பாக்கெட்'டுக்குக் குறைந்து வாங்குவதில்லையாம். ஏனெனில், இரண்டு பெட்டி சேர்ந்தாற்போல் வாங்குவதில் ஒரு பென்னி கூடி வருகிறதாம்.

இவரைவிட மகா கணக்காயிருக்கிறார் காரி கூப்பர். அவர் சிகரெட்டே விலைகொடுத்து வாங்குவதில்லை. தனக்கு வேண்டிய சிகரெட்டைத் தானே தயார்செய்து கொண்டுவிடுகிறார்!

ஜான்போல்ஸ் எங்காவது சமீபத்திலுள்ள இடங்களுக்குப் போவதானால் தன் சொந்தக்காரில் போவதில்லையாம். பஸ்ஸில்தான்

தமிழ் சியாமசுந்தரில் ராதையாக நடிக்கும் ஸ்ரீமதி தவமணி தேவி

"பாம்பாட்டி"யில் சன்யால், கானன்பாலா, மேனகா

போகிறாராம். காரணம், காரில் போவதால் உண்டாகும் செலவை விட பஸ் சார்ஜ் குறைவாக இருப்பதினால்தான். எமகாதகப் பேர்வழி ஐயா அவர்!

* * *

இவ்வருஷத்திலேயே அதிகப்பணம் செலவழித்து எடுக்கப்படும் படம் 'சந்த துளசிதாஸர்' என்று சொல்கிறார்கள். பம்பாய் ரஞ்சித்தில் துளசிதாஸர் முடியும் தறுவாயிலிருக்கிறார். நடிகர் சம்பளம் மட்டும் இதுவரை லக்ஷத்து இருபதினாயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள் அப்படத்திற்காக.

* * *

'அலிபாபா' சிருஷ்டியாகப் போவது பம்பாய் 'ஸாகரி'லாம். இருபாஷைகளில் (பஞ்சாபி—ஹிந்தி) தயாராகிறார் அலிபாபா. இப்படத்திற்குப் பொறுப்பாளிகள் யார் தெரியுமோ? மாது போஸும் அவரது மனைவியுமாம். பஹுத் அச்சா!

* * *

பிரபாத் கோகிலம் சாந்தா ஆப்தேயின் படம் தேவையானவர்கள், ரூபாய் இரண்டரை அவருடைய விலாசத்திற்கு மணியார்டர் செய்தால் போட்டோ ஒரே வாரத்தில் வந்து சேருகிறதாம்.

* * *

சென்ற பத்து வருஷ காலத்தில் பிரிட்டனில் மட்டும் சினிமாவின்மூலம் பொழுதுபோக்கு வரியாக $5\frac{1}{2}$ கோடி பவுன் கிடைத்திருக்கிறது.

* * *

பனி அழகி

நேற்றைய தினத்திலிருந்து சென்னை எல்பின்ஸ்டனில் மறுபடியும் 'பனி அழகி' காட்சி அளித்து வருகிறாள். ஏழு குள்ளர்களின் வேலைகளைப் பார்க்கத் தவறிப்போன அத்தனை ரஸிகர்களும் இப்போது பார்த்து விடலாம்.

* * *

ஸ்டுடியோ சுறுசுறுப்பு!

சென்ற சிலகாலமாகவே நியூடோன் ஸ்டுடியோவில் ஒரே 'க்ளாப் ஸ்டிக்' சப்தமாயிருந்து கொண்டிருக்கிறது. காரணமாகத்தானோ என்னவோ அதன் நிர்வாகிகளான, ஜிதன் பானர்ஜி, டின்ஷா, பாகவதர், செட்டியார் ஆகியோர்களுக்குத் தூக்கம்கூட வருவதில்லையாம். மூச்சு விடக்கூட நேரம் இல்லையாம் மேற்படி ஸ்டுடியோவில் வேலைசெய்து வரும் ஆட்களுக்கு. நியூடோன் எப்போதும் சுறுசுறுப்பாகவே இருப்பதைக் கேட்டு சந்தோஷமடைகிறோம்.

" பராசக்தி காப்பாற்றுவாள் ! "

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S[AMINATHAIY]ER LIBRARY.
BESANT NAGAR : MADRAS-90.

ராதாகிருஷ்ணவில் மாஸ்டர் ராஜு

ஒரு நிமிஷக் கதைகள்

பையன் :—அப்பா, வாத்தியாரை குளத்தண்டை பார்த்தேன். அவர் என்னைப் பார்க்கவில்லை.

தகப்பனர் :—எனக்குத் தெரியும். வாத்தியாரே சொன்னர்.

* * * *

இனம் !

" முந்தா நாள் நீ சேஷுவிற்கு ஐந்து ரூபாய் இனமாகக் கொடுத்தாயாமே, வாஸ்தவமா."

" ஆமாம் "

" என் அப்படி? "

" அவன் ஐந்து ரூபாய் கடன் கேட்டான். கடனகக் கொடுத்தாலும் பணம் திரும்பிவரப் போவதில்லை. "

* * * *

அதே தவணையில்

பெரியமனிதர் ஒருவர் ஒரு ஜவுளிக்கடைக்குப் போய் அங்குள்ள முதலாளியைப் பார்த்து, "என் ஐயா, மூன்று வருஷத்திற்கு முந்தி என் மகன் ஆறு கெஜம் சட்டைத்துணி கடனக வாங்கிக்கொண்டு போனனமே வாஸ்தவம்தானு" என்று கேட்டார்.

" வாஸ்தவம் ஸார், என், அந்த பாக்கியை இப்போ பைசல் செய்துவிடுகிறீர்களா? "

" இல்லை ; அதே மாதிரி தவணையில் எனக்கும் ஒரு ஆறு கெஜம் துணி வேண்டியிருக்கிறது. "

* * * *

தெரியாது

" நேற்றுப் பெய்த பலத்த மழையினல் உங்கள் வைக்கோல் போருக்கு ஏதாவது சேதம் ஏற்பட்டதா? "

" தெரியாது ; இன்னும் வைக்கோல் போர் இருக்கிற இடமே கண்டு பிடிக்கவில்லை. "

* * * * *

தண்டனை உண்டு

வந்தவர் :—உன்னுடைய தேனீக்களில் ஒன்று என்னைக் கொட்டி விட்டதே ! இதற்கு என்ன செய்யப் போகிறுய் ?

தேனீ வளர்ப்பவன் :—அது எந்தத் தேனீ என்று கண்டுபிடித்துச் சொல்லுங்கள். அதை நன்ருகத் தண்டிக்கிறேன்.